www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

16 ஏப்-15 மே '90
5-11-12
விலை ரூ.2

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு



## ஊழல்நாயகனின் உத்தமவேடம்

படிப்பகம்

ரணதிவே மறைவு:

www.padippakam.com

# போலிகளின் 'இடது'சாரி தோற்றமும் மறைந்தது!

இந்திய போலிக் கம்யூனிசம் இன்னொரு தலைமைப் பூசாரியை இழந்துவிட்டது. 'பி.டி.ஆர்.' என்று கட்சிக்குள்ளும், பி.டி.ரணதிவே என்று வெளியிலும் பிரபலமாக விளங்கிய பாலசந்திர திரியாம்பாக் ரணதிவே ஏப்ரல் 6ந் தேதி தனது 85வது வயதில் இறந்து போனார்.

இவர், இந்திய 'கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்)' கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர். இந்தியாவின் மிகப் பெரிய தொழிற்சங்கமான சி.ஐ.டி.யூ.வின் தலைவர். இவ்விரு அமைப்புகளை நிறுவிய தூண்களில் ஒருவர். அப்போதிருந்து சாகும் வரை அந்தப் பதவிகளை வகித்து வந்தார்.

1940களில் இருந்து போலிக் கம்யூனிச சித்தாந்தத் தலைவர்களில் ஒருவராக சீரழிந்தபோதும், ஆரம்ப ஆண்டுகளில் கம்யூனிச பாரம்பரியம், பண்பாட்டையும், பாட்டாளி வர்க்க இயக்கத்தையும் உருவாக்குவதில் பி.டி.ரணதிவே முக்கிய பங்காற்றியிருக்கிறார் என்பதை மறுக்க முடியாது.

ஆரம்பகால பல 'கம்யூனிஸ்டு' தலைவர்களை உருவாக்கிய பம்பாய் - கேட்வாடியில் இருந்த கட்சித் தலைமையகத்தில் கம்யூன் வாழ்க்கையை மேற்கொண்டார். கட்டுப்பாடும், கடின உழைப்பும், உறுதியும், எளிமையும், தோழமை உணர்வும் மிக்க ஊழியராக அப்போது வாழ்ந்தார். பம்பாயின் ஆரம்ப தொழிற்சங்கங்களில் ஒன்றான செம்பதாகை நெசவாலை தொழிலாளர் சங்கத்தை நிறுவித் தலைமையேற்றார். பிறகு மத்திய இரயில்வே தொழிலாளர் சங்கத்தை நிறுவினார். பல போர்க்குணமிக்க போராட்டங்களை வழிநடத்தினார். அதன் விளைவாக காலனிய அரசின் தாக்குதல் இலக்குகளில் ஒருவரானார். இரண்டாம் உலகப் போர் வெடித்து, கம்யூனிஸ்டுக் கட்சி தடை செய்யப்பட்ட போது கைது செய்யப்பட்டு மூன்றாண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டார்.

அதன்பிறகு, ரணதிவே முன்வைத்து, தலைமையேற்று, வழிநடத்திய போலிக் கம்யூனிச - திரிபுவாத சித்தாந்தமும் நடைமுறையும் அவரது முந்தைய பங்களிப்புகளை துடைத்தழிப்பதாகி விட்டன. அவர் இந்த நாட்டின் கம்யூனிச துரோகிகளில் முக்கியமானவராகி விட்டார்.

1943-இல் கம்யூனிஸ்டுக் கட்சி அரசியல் தலைமைக்குழு உறுப்பினராகவும், 1946-இல் அதன் பொதுச் செயலாளராகவும் உயர்ந்தார். அப்போது தெலிங்கானா உழவர் பேரெழுச்சி ஆயுதந்தாங்கிய புரட்சியாக வெடித்தது. டாங்கே, மோகன் குமாரமங்கலம் போன்ற தலைவர்கள் காங்கிரசுடன் பேரம் பேசி சரணடைந்து தெலிங்கானாப் புரட்சிப் பாதையை வலது சந்தர்ப்பவாத நிலையிலிருந்து எதிர்த்தனர். ரணதிவே தலைமையிலான கும்பலோ 'இடது' சந்தர்ப்பவாத நிலையிலிருந்து தெலிங்கானா புரட்சியை எதிர்த்தது.

அதாவது, மாவோவின் மக்கள் யுத்தப் பாதையை பின்பற்றி கிராமப்புறங்களில் ஆயுதப் போராட்டத்தைத் துவங்கி படிப்படியாக முன்னேறி நகரங்களைக் கைப்பற்றுவது என்ற வழிமுறையை தெலிங்கானாப் புரட்சித் தலைமை முன்வைத்தது. 'அது தவறானது. மாவோ ஒரு நாட்டுப்புற போலி வைத்தியனைப் போன்றவர். இந்தியா முழுவதும் புரட்சிக்குத் தயாராகி விட்டது. உடனடியாக நகர்ப்புறங்களில் பொது அரசியல் வேலை நிறுத்தம், ஆயுதந்தாங்கிய பேரெழுச்சி நடத்தி அதிகாரத்தைக் கைப்பற்றுவோம்' - என்கிற டிராட்ஸ்கியவாத வழிமுறையை ரணதிவே முன்வைத்தார்.

ரணதிவே பாதை என்றழைக்கப்பட்ட அந்தப் புரட்சி 1948-50 ஆகிய இரண்டு ஆண்டுகள் நடத்தப்பட்டது; ஆனால் பிறக்கும் போதே கருச்சிதைவாகி பெருந்தோல்வி - பேரிழப்பு நேர்ந்தது. துரோகிகளால் சோசலிஸ்டு என்று இன்றும் போற்றப்படும் நேரு அரசினால் நாடு முழுவதும் 5000 கம்யூனிஸ்டுகள் படுகொலை செய்யப்பட்டனர்.

'புரட்சி' தோல்வியுற்றதை ஒப்புக் கொண்டார் ரணதிவே. 'கம்யூனிச சித்தாந்தத்தையும், மாவோவின் மகத்தான பங்களிப்பையும் புரிந்து கொள்ளாத முட்டாளாக இருந்துவிட்டேன்' என்று சுயவிமர்சனம் செய்து கொண்டார். ஆனாலும் பொதுச் செயலாளர், அரசியல் தலைமைக்குழு ஆகிய பதவிகளில் இருந்து நீக்கப்பட்டார். 1952-ல் அஜாய்கோஷ் தலைமையிலான துரோகிகளின் நாடாளுமன்றக் கட்சியாக முழுவடிவம் பெற்ற போது மீண்டும் ரணதிவே சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

1960-63 ஆண்டுகளில் சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் பிளவு ஏற்பட்டபோது, ராமமூர்த்தி, நம்பூதிரிபாடு, ஏ.கே.கோபாலன் ஆகியோரோடு சேர்ந்து இந்திய 'கம்யூனிஸ்டு' கட்சியை பிளவுபடுத்தி இந்திய 'கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்டு)' கட்சியை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றினார். நடைமுறையில் இதுவும் பழைய நாடாளுமன்ற, பொருளாதாரவாதக் கட்சியாகத்தான் இருக்கிறது.

கட்சிக்குள் ராமமூர்த்தி, நம்பூதிரிபாடு போன்றவர்களது கடைகோடி வலது சந்தர்ப்பவாதத்தை எதிர்த்து புரட்சிகரச் சவடால்கள் அடிப்பது; நாடாளுமன்ற, அரசு பதவிகளுக்குப் போட்டியிடாதது, எளிமையான வாழ்க்கை போன்ற பண்புகள் இருந்தபோது வலது சந்தர்ப்பவாதத்துடன் எப்போதும் சமரசம் செய்து கொண்டுதான் இருந்தார். மேற்கண்ட புரட்சித் தோற்றம் - பாவனைகள் இந்தக் கட்சியும் புரட்சிப் பாரம்பரியமுடையது; என்றாவது ஒருநாள் புரட்சி நடத்தும் என்கிற பிரமையை அணிகளிடையே உருவாக்குவதற்குத்தான் பயன்பட்டன.

கடைசி காலத்தில் கோர்ப்பச்சேவின் முதலாளித்துவ சீர்திருத்தங்களைச் சாடிப் பேசிவந்தார், ரணதிவே. இதனாலேயே இவரை ஸ்டாலினிஸ்டு என்று முதலாளித்துவ ஏடுகள் எழுதுகின்றன. இன்னும் தெலிங்கானா புரட்சிக்குக் கீழ் தலைமையேற்றவர் என்று கூட எழுதுகின்றன. தெலிங்கானா புரட்சியை எதிர்த்தார்; ஸ்டாலின் பின்பற்றிய மார்க்சிய - லெனினியத்தைக் கைவிட்டுவிட்டு தனிநபர் - தலைவர் என்கிற முறையில் (சில விமர்சனங்களுடன்) ஸ்டாலினை எதிர்த்த போதும் ஏகபோகங்களுக்கு பாய்விரிக்கும் நம்பூதிரிபாடு ஜோதிபாசு, நாயனார் கொள்கைகளை ரணதிவே எதிர்க்கவில்லை. எனவே நம்பூதிரிபாடு கும்பலோடு அடிப்படையில் ரணதிவே வேறுபட - மாறுபடவில்லை.

எவ்வாறாயினும் ரணதிவேயின் சாவு! 'மார்க்சிஸ்ட்' கட்சிக்குள் நிலவி வந்த சித்தாந்த வேறுபாடுகளைத் தீர்ப்பதற்கு உதவியிருக்கிறது. கோர்பியின் சீர்திருத்தங்களை ஆதரிக்கும் நம்பூதிரிபாடு கும்பலுக்கு எதிராக பிரஷ்னேவ் பாணி அதிகார வர்க்க முதலாளித்துவத்தை உயர்த்திப் பிடிப்பதற்கான தலைமையின்றிப் போனது. 'மார்க்சிஸ்டு' கட்சி இதுவரை போர்த்திக் கொண்டிருந்த 'இடது'சாரித் தோற்றமும் மறைந்து போகும் - ரணதிவேயுடன்!

● மணி.

**பம்பாய் டாட்டா மருத்துவமனையில் இருந்து ரணதிவேயின் உடல் எடுத்துச் செல்லப்படுகிறது. அருகே தங்கையும் எம்.பி.யுமான அகல்யா ரங்கநேக்கர்; மகன் உதய்.**



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

ஐந்தாமாண்டு

11-12

16 ஏப்-15 மே '90

உள்நாடு
தனி இதழ்: ரூ.2/-
ஆண்டு சந்தா: ரூ.48/-

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 11

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ்.மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப்பேட்டை
சென்னை - 600 015

# இந்தியா - பாகிஸ்தான் போரை எதிர்ப்போம்!

எந்த நேரத்திலும் இந்தியா - பாகிஸ்தான் யுத்தம் மூளும் அபாயம் எழுந்துள்ளது. இரண்டு நாடுகளுமே 'சிகப்பு எச்சரிக்கை' நிலைக்கு இராணுவங்களைத் தயாரித்துவிட்டன. ''பாகிஸ்தான் தாக்குவதற்கான இராணுவ நடவடிக்கையிலே இறங்கிவிட்டது. போர் மூளுமானால் நமது நோக்கங்கள் நிறைவேறாமல் விடமாட்டோம். இந்திய இராணுவம் மட்டுமல்ல, சிவிலியன் மக்களும் தியாகத்துக்குத் தயாராக இருக்க வேண்டும்'' என்று ஏறக்குறைய போர்ப் பிரகடனம்வரை போய்விட்டார், இந்தியப் பிரதமர். இதேபோன்ற நிலைமை தான் எல்லைக்கு அப்பாலும் உள்ளது. ஆயிரம் ஆண்டு புனிதப் போருக்கு அறைகூவுகிறார்கள், பாகிஸ்தான் அரசுத் தலைவர்களும், தளபதிகளும். இரண்டு நாடுகளிலுமே தேசிய வெறியும், யுத்த வெறியும் அனல் பறக்கும் பிரச்சாரமாக நடக்கிறது.

''பஞ்சாபில், சீக்கியத் தீவிரவாதிகளுக்கு நிதி, பயிற்சி, ஆயுதங்களைக் கொடுத்து பயங்கரவாத - நாசவேலைகளுக்கு பாகிஸ்தான் தூண்டுதலாக இருக்கிறது. காஷ்மீரில் இதே போல செய்தும், முஸ்லீம் மதவெறி மக்களைத் திரட்டி ஊடுருவியும், மதக் கலவரங்களைத் தூண்டியும் இராணுவத் தலையீடு செய்தும் காஷ்மீரைக் கைப்பற்றிக் கொள்ள பாகிஸ்தான் சதி செய்கிறது. ஆகவே பஞ்சாப் - காஷ்மீர் விவகாரத்தைத் தீர்க்க வேண்டுமானால் பாக்.குடன் போர் நடத்தி, அதன் முதுகெலும்பை முறிக்க வேண்டும்'' என்று இங்கே பிரச்சாரம் நடக்கிறது.

''முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழும் காஷ்மீரில் இராணுவத்தை விட்டு, மக்களின் விடுதலை எழுச்சியை இந்தியா அடக்கி ஒடுக்குகிறது; இந்தியா ஆக்கிரமித்துக் கொண்டுள்ள காஷ்மீர் பகுதியை மீட்பதற்கான புனிதப் போர் தொடுக்க வேண்டும்; ஏற்கனவே வங்கதேசப் பிரிவினைக்குக் காரணமாக இருந்த இந்தியாவைப் பழி வாங்க வேண்டும்; பஞ்சாப் - காஷ்மீர் விவகாரங்களுக்குத் தீர்வு காண முடியாத இந்தியா, பாகிஸ்தான் மீது பழிபோட்டு போர் தொடுக்க முயலுகிறது'' - என்று அங்கே பிரச்சாரம் நடக்கிறது.

இந்தியா - பாகிஸ்தான் யுத்தத்துக்குக் கண்ணை மூடிக் கொண்டு ஆதரவு அளிப்பதற்குப் பதிலாக, இரண்டு நாட்டு மக்களுமே இந்த யுத்தம் அவசியமானதுதானா? இதனால் நாம் என்ன சாதிக்க விரும்புகிறோம்? இந்தப் போரின் முடிவும், விளைவும் என்னவாக இருக்கும் என்ற கேள்விகளை எழுப்ப வேண்டும்.

பஞ்சாபிலே சீக்கிய பயங்கரவாதிகளைத் தூண்டியும், காஷ்மீரிலே முஸ்லீம் மத வெறியர்களை ஆயுதபாணிகளாக்கியும் காஷ்மீரைக் கைப்பற்றிக் கொள்வது என்கிற ஆதாயம் அடையும் கனவு கண்டால் பாகிஸ்தான் பரிதாபகரமான முடிவையே - - தோல்வி, பேரிழப்பையே சந்திக்க வேண்டி வரும். அதோடு நீண்டகாலத்துக்குப் பிறகு பாகிஸ்தானில் நிறுவப்பட்டுள்ள நாடாளுமன்ற ஜனநாயகமும் பறிபோய் மீண்டும் இராணுவ பாசிசமே ஆதிக்கத்துக்கு வரும்!

பஞ்சாப், காஷ்மீர் பிரச்சினைகளுக்கு பாகிஸ்தான் தலையீடு,தூண்டுதல் பிரதான காரணம் அல்ல. பாகிஸ்தானுக்கு எதிராக இராணுவ ரீதியில் வெற்றி கொள்வதன் மூலமோ அல்லது பஞ்சாப் - காஷ்மீர் எல்லையில் ஒரு 'பெர்லின் சுவர்' எழுப்புவது, முள்வேலி போடுவதன் மூலமோ தீர்வு காண முடியுமா? அப்படியானால் அசாம் - போடோ பிரச்சினைக்குத் தீர்வு காண எந்த நாட்டுடன் போர் நடத்துவது? பஞ்சாப், காஷ்மீர், அசாம் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் இராணுவமும், துணை இராணுவமும் நடத்திவரும் படுகொலைகள் — அரசு பயங்கரவாத, உள்நாட்டுப் போர்களாகவே வளர்க்கப்பட்டுவிட்டன. அதை இப்போது வெளிநாட்டு யுத்தமாக விரிவுபடுத்துவதன் மூலம் என்ன தீர்வு காண முடியும்?

அதேசமயம், பாகிஸ்தானுக்கு எதிரான இந்தப் போர் இராணுவ ரீதியிலும், நீண்டகால நோக்கிலும் இந்தியாவுக்குச் சாதகமாக அமையும் என்று கூறிவிட முடியாது. கடந்த 20 ஆண்டுகளில் இரண்டு நாடுகளுமே போட்டிபோட்டுக் கொண்டு இராணுவத்தைப் பெருக்கி இருப்பதோடு நவீன ஆயுதங்களைக் குவித்துள்ளன. இராணுவக் கூட்டு, ஆஃப்கான் விவகாரங்களைக் காரணங்காட்டி பாகிஸ்தானுக்கு அமெரிக்கா தாராள ஆயுத உதவி வழங்கியுள்ளது. இராணுவ ரீதியில் இந்தியாவுடன் சம நிலையில் இல்லாவிட்டாலும் அது மிகவும் பின்தங்கிய நிலையில் இல்லை. நீண்டகாலப் போருக்குத் தாக்குப்பிடிக்கும் பலம் பெற்றிருக்கிறது. எனவே இந்த முறை யாருக்கும் எளிதான, விரைவான வெற்றி - தோல்வி இன்றி ஈரான் - ஈராக் போரைப் போல சில ஆண்டுகளாவது நீடிக்கும் என்று இராணுவ வல்லுநர்கள் கருதுகிறார்கள்.

'இலக்கு நிறைவேறும் வரை விடமாட்டோம்' என்கிறார் இந்தியப் பிரதமர். என்ன இலக்கு? பஞ்சாப் - காஷ்மீர் விவகாரத்தில் தலையிட முடியாத அளவுக்கு பாகிஸ்தானுக்கு சேதங்கள் விளைவிக்கும் வரை யுத்தம் நீடித்தால் இந்தியாவின் நிலை என்ன? அதோடு உள்நாட்டு எதிரிகளையும் எதிர்த்து இந்திய இராணுவம் போரிடும்போது இந்த இருமுனைகளிலும் வெற்றி பெறுவது சாத்தியமா? இதன் சுமை முழுவதும் இந்த நாட்டு மக்களின் மீது விழாதா? ஏற்கனவே ஈழப்போரில் 2000 கோடி ரூபாய், பாக்.குடன் சியாசின் முனை மோதலில் ஆண்டுக்கு 200 கோடி ரூபாய் செலவானது. சாதகமான முடிவும் இல்லாது, பொருளாதார - இராணுவ அழிவைத் தரும் போர் அவசியந்தானா?

''யுத்தத்துக்குத் தயாராகும்படி பிரதமர் அழைத்துள்ளார். இனி அரசியல் வேறுபாடுகள், உரிமைகள், கோரிக்கைகள் எல்லாம் மூட்டை கட்டி வைத்துவிடுங்கள். நமது கவனம் - சக்தி முழுவதையும் பாகிஸ்தானுக்கு எதிராக ஒன்று குவிக்க வேண்டும்'' என்று அரசின், ஆர்.எஸ்.எஸ்.ஸின் ஊது குழலான இந்தியன் எக்ஸ்பிரஸ் தலையங்கம் எழுதுகிறது. பஞ்சாப், காஷ்மீரில் மட்டுமல்ல, போரைக் காரணம்காட்டி நாடு முழுவதும் கட்டிவிழ்த்து விடப் போகும் கொடிய அடக்குமுறைக்கு இது முன்னறிவிப்பு. ஆகவே எந்தப் பிரச்சினைக்கும் தீர்வாகாத, பேரிழப்பை ஏற்படுத்தி, மக்கள் மீது பெரும் சுமை ஏற்றும் யுத்த வெறியை முறியடிப்பதுதான் உண்மையான தேச பக்தர்களின் கடமையாகும்.

படிப்பகம்

www.padippakam.com

# இந்தியாவின் காலனியா?

அவர்கள் அடக்குமுறையை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்த வந்தவர்கள். ராணுவம் அனுமதி மறுத்து துப்பாக்கிச் சூடு நடத்தி விரட்டியதால் வெறுப்போடு வீடு நோக்கி அந்தப் பேருந்தில் பயணித்துக் கொண்டிருந்தார்கள். திடீரென அந்த பேருந்து ராணுவத்தால் வழிமறித்து நிறுத்தப்பட்டது. உங்களைச் சோதனையிட வேண்டும். கீழே இறங்குங்கள் என்று துப்பாக்கி முனையில் ராணுவ கும்பல் கட்டளையிட்டது. பீதியடைந்த மக்கள் தமது குழந்தைகளுடன் வரிசையாக இறங்கினர். திடீரென ராணுவம் கண்முன் தெரியாமல் சுட்டது. நிராயுதபாணியான அந்த அப்பாவி மக்களில் பாதிப் பேர் அங்கேயே மாண்டனர். மீதிப் பேர் ரத்த வெள்ளத்தில் மிதந்தனர்.

இது ரஷிய ராணுவம் லித்துவேனிய தேசிய இன மக்கள் மீது ஏவிய அடக்குமுறை சம்பவமல்ல; சிங்கள இனவெறி ராணுவம் ஈழத் தமிழர்கள் மீது நடத்திய தாக்குதலும் அல்ல. இந்தியக் கொலைவெறி ராணுவம் மார்ச் முதல் நாளன்று காஷ்மீரில் நடத்திய கொடூரமான பயங்கரவாதத் தாக்குதல்தான் இது!

உதிரத்தை உறைய வைக்கும் இக்காட்டுமிராண்டித் தனத்தை கண்டித்து காஷ்மீரி மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் குதித்தனர். அரண்டு போன அரசு, ராணுவ விசாரணையை நடத்துவதாக நாடகமாடியது. விசாரணை அறிக்கையில் ராணுவம் தனது கொலைகளை வெட்கமின்றி நியாயப்படுத்தியது. ராணுவத்தினரது பள்ளி செல்லும் குழந்தைகளை ஏற்றிவந்த ராணுவ டிரக் வண்டி மீது மக்கள் கல்லெறிந்து தாக்கியதாகவும், அவர்களை விரட்ட துப்பாக்கிச் சூடு நடத்தியதில் சிலர் மாண்டதாகவும் கூசாமல் புளுகியது. உண்மையில் அரசு உத்திரவுப்படி பிப்ரவரி 20 முதல் மார்ச் 15 வரை அனைத்து பள்ளிகளும் கல்வி நிறுவனங்களும் மூடப்பட்டிருந்தன. மேலும் கொலை நடந்த இடத்தருகே எந்த ராணுவப் பள்ளியும் இல்லை.

### அரசு பயங்கரவாதிகளின் அட்டூழியம்

★ மார்ச் முதல் நாளன்று ஏறத்தாழ 15,000 பேர் கொண்ட ஊர்வலம் சகூரா நகர் அருகே அமைதியாக சென்ற போது ராணுவத்தினர் கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தி 50க்கும் மேற்பட்டோரைக் கொன்றொழித்தனர். உள்ளூர் போலீசார் ராணுவத்தை தடுத்த போதிலும்கூட, வெறிபிடித்த ராணுவம் 100 ரவுண்டுகள் துப்பாக்கிச் சூடு நடத்தியது. உதவி போலீஸ் கமிஷனரே இதைக் கண்டித்து சகூரா போலீஸ் நிலையத்தில் முதல் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

★ ஜக்மோகன் கவர்னராகப் பதவியேற்ற அதே நாளில், தீவிரவாதிகளைப் பிடிப்பது என்ற பெயரில் ராணுவம் வீடு வீடாக தேடுதல் வேட்டையை நடத்தியது. ஏறத்தாழ 400க்கும் மேற்பட்ட அப்பாவி இளைஞர்களை இழுத்துவந்து நடுவீதியிலேயே ராணுவம் மிருகத்தனமாகத் தாக்கியது. காஷ்மீர் மாநில சிவில் மற்றும் போலீஸ் அதிகாரிகள் தம்மைக் கலந்தாலோசிக்காமல் ராணுவம் தன்னிச்சையாக நடத்தும் இத்தகைய தேடுதல் வேட்டையை வன்மையாகக் கண்டித்தனர்.

★ ராணுவத்தின் அட்டூழியங்களைக் கண்டித்து போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தை ராணுவமே கண்ணீர் புகைக்குண்டு வீசிக் கலைத்தது.

★ சட்டவிரோதமான முறையில் தேடுதல் வேட்டை என்ற பெயரில் கைது - சித்திரவதை செய்யும் ராணுவத்தின் அட்டூழியங்களைக் கண்டித்து மார்ச் 21 அன்று 20,000க்கும் மேற்பட்ட காஷ்மீரி மக்கள் ஸ்ரீநகரில் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்தினர். அரசு பயங்கரவாதிகள் ஊரடங்குச் சட்டம் போட்டிருந்த போதிலும் அதையும் மீறித்தான் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடந்தது. கௌகடால் பகுதி அருகே ஊர்வலம் வந்த போது ராணுவம் வெறிபிடித்து முன்னெச்சரிக்கை ஏதுமின்றி துப்பாக்கிச் சூடு நடத்தியது. இத்தாக்குதலில் 200க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக உள்ளூர் போலீசாரே ஒப்புக் கொள்கின்றனர். இது இந்திய ராணுவத்தின் காட்டுமிராண்டித் தனத்தை மட்டும் குறிக்கவில்லை. அவர்களது இந்து வெறியையும்தான் காட்டுகிறது என்று காஷ்மீரி மக்கள் வெறுப்பை உமிழ்கின்றனர்.

பிரபல பத்திரிக்கையாளர்களும் மனித உரிமைக் குழுவினரும் "காஷ்மீருக்கான முன்முயற்சி கமிட்டி" என்ற அமைப்பை நிறுவி, காஷ்மீருக்கு நேரில் சென்று சேகரித்து அளித்த செய்தியில் ஒருசில துளிகள் தான் இவை. இந்த உண்மை விபரங்களை அறிக்கையாக அரசு பயங்கரவாத கவர்னர் ஜக்மோகனிடம் சமர்ப்பித்த போது முற்றிலும் பொய்யான செய்தி என்று அதைப் புறக்கணித்தார். காஷ்மீருக்கான சிறப்பு மத்திய மந்திரியான பெர்னாண்டஸ், "இது பிரிவினைவாதிகளின் குரலை எதிரொலிக்கும் அறிக்கை; இச்செய்திகள் அனைத்தும் கட்டுக்கதை" என்று சாடினார்.

இந்த அறிக்கையை முன் முயற்சிக் குழுவினர் பிரபல நாளேடுகளிடம் கொடுத்து வெளியிடக் கோரியபோது ஓரிரு பத்திரிக்கைகள் தவிர அனைத்தும் 'தேச நலன்' கருதி வெளியிட மறுத்துவிட்டன. ஆட்சியாளர்கள் முதல் பத்திரிக்கைகள், ஓட்டுக் கட்சிகள் வரை அனைவரும் ஒருமித்து நின்று காஷ்மீரில் அரசு பயங்கரவாத அடக்குமுறையை நியாயப்படுத்தவே செய்கிறார்கள். அங்கு என்ன நடக்கிறது என்பதைக் கூட நாட்டு மக்கள் அறியக்கூடாது என்பது தான் அவர்களின் நோக்கமாக உள்ளது.

### காட்டுமிராண்டி கவர்னரின் கசாப்பு சிகிச்சை

"காஷ்மீர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதே எமது முதற்பணி; காஷ்மீர் விவகாரத்தைக் கவனிக்க மத்திய மந்திரி பெர்னாண்டஸ் தலைமையில் சிறப்புக் கமிட்டி அமைத்துள்ளோம்" என்றெல்லாம் நாடகமாடிய தேசிய முன்னணி அரசு, பாசிச ராஜீவ் கும்பலின் அதே அரசு பயங்கரவாதப் பாதையில்தான் செல்கிறது. ஆனால் "காஷ்மீரின் புதிய கவர்னர் ஜக்

**இந்திய ராணுவத்தால் சுட்டுக் கொல்லப் பட்டவர்களின் உறவினர்கள் குழந்தைகள்; எதற்காக இவர்கள் இந்தியாவிற்கு விசுவாசம் தெரிவிக்க வேண்டும்?**




படிப்பகம்

www.padippakam.com

மோகன் தொலைநோக்குத் திட்டத்துடன் அரசியல் தீர்வுக்கு வழிகாண முயல்கிறார். காஷ்மீரி மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு இணக்கமாக நடந்து கொள்கிறார். அதே சமயம் தீவிரவாதத்தை முறியடிக்க கடுமையாக முயற்சிக்கிறார்'' என்று ஆட்சியாளர்களும் பத்திரிக்கைகளும் துதி பாடினர்.

''நான் ஒரு மருத்துவத் தாதியைப் போல அன்போடும் பரிவோடு சேவை செய்வேன்'' என்று வாக்குறுதி அளித்து பதவிப் பிரமாணம் ஏற்ற ஜக்மோகனின் இந்தப் பசப்பல்கள் எல்லாம் அடுத்த சில நாட்களிலேயே அம்பலப்பட்டுப் போனது. மருத்துவத்தாதி ஆயுதங்களை எடுத்துக் கொண்டு அறுவை சிகிச்சைக்குக் கிளம்பினார். ஜம்முவில் பதவியேற்ற அவர் ஸ்ரீநகர் வருவதற்குள்ளாகவே ராணுவம் வீடு வீடாக சோதனை நடத்தி, குளிர்பனியில் குழந்தைகளையும் முதியவர்களையும் நிற்கவைத்து விசாரணை என்ற பெயரில் சித்திரவதை செய்தது. அரசு பயங்கரவாத இரும்பு மனிதர் என்று பெயரெடுத்த ஜக்மோகன் நியமனத்தை எதிர்த்து ஊரடங்கு உத்திரவை மீறி ஆர்ப்பாட்டம் நடத்திய மக்கள் மீது ராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தி 35 பேரைக் கொன்றது.

அடுத்த ஒரு வாரத்தில் இந்திய ராணுவம், எல்லைப் பாதுகாப்புப் படை, மத்திய ரிசர்வ் போலீஸ் படை, காஷ்மீர் ஆயுதப் போலீசுப்படை, பெண் போலீசுப் படை, இது தவிர அதிரடி ''கமாண்டோ'' படை ஆகிய அனைத்தையும் காஷ்மீரில் குவித்து அரசு பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டார், கவர்னர் ஜக்மோகன். ஸ்ரீநகர், அனந்த்நாக், புல்வாமா, பாரமுல்லா முதலான பெருநகரங்கள் சுற்றி வளைக்கப்பட்டு வீடுவீடாகச் சோதனை நடத்தி ராணுவம் வெறியாட்டம் போட்டது. ''மோதல்'' என்ற பெயரில் அப்பாவி மக்களைச் சுட்டுக் கொன்றது.

### தனிமைப்பட்டிருப்பது போராளிகளா துரோகிகளா?

இராணுவ அட்டூழியங்களைப் பற்றி மெதுவாக செய்திகள் கசியத் தொடங்கியதும், ''எல்லாம் பொய்யான மிகைப்படுத்தப்பட்ட செய்திகள். கொட்டும் மழையிலும், குளிர் பனியிலும் நாளொன்றுக்கு 14 மணிநேரம் உயிரைப் பணயம் வைத்து தேடுதல் வேட்டை நடத்தும் நமது ராணுவத்தை இது அவமதிப்பதாகும்'' என்று ஜக்மோகன் எச்சரித்தார். ''தீவிரவாதிகளால் மக்கள் மிரட்டப்படுகிறார்கள். பயங்கரவாதக் கூட்டுக்குள் உள்ள புறாவாக அவர்கள் தவிக்கிறார்கள். பயங்கரவாதிகளுக்கு மக்களிடம் ஆதரவுஇல்லை''என்று சர்வக்கட்சி கூட்டத்தில் சவடால அடித்தார்.

இது எவ்வளவு பெரிய பொய் என்பதை காஷ்மீர் விடுதலை முன்னணியின் வட்டார கமாண்டரான அஷ்பாஃக் மஜீத் வானியின் கொலை நிரூபித்துவிட்டது. ராணுவத்துடன் மோதல் என்ற பெயரில் அவர் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி அறிந்ததும், அவரது இல்லத்தின் முன் 15,000க்கும் மேற்பட்ட மக்கள் திரண்டனர் என்பதை தேசிய பத்திரிக்கைகளே ஒப்புக் கொண்டன. அவரது இறுதி ஊர்வலம் அரசியல் ஆர்ப்பாட்டமாக மாறிவிடும் என்று ராணுவக்கும்பல் பீதியில் உறைந்தது. சவ ஊர்வலத்துக்கு அனுமதி மறுத்து இடுகாட்டில் இறுதி அஞ்சலி செலுத்துவதற்கு மட்டுமே அனுமதித்தது. இடுகாட்டில் 25,000க்கும் மேற்பட்ட மக்கள் திரண்டனர் என்பதை அரசு பயங்கரவாதிகளே இப்போது ஒப்புக் கொள்கின்றனர். மக்கள் ஆதரவுடன் முன்னேறி வரும் தேசிய சுயநிர்ணய உரிமைப் போரை, அரசு பயங்கரவாதத்தைக் கொண்டு அவர்களால் அடக்க முடியவில்லை; அடக்கவும் முடியாது என்பதை இச்சம்பவம் தெளிவாகவே நிரூபித்துக் காட்டிவிட்டது.

அதேசமயம் துரோகிகள்தான் இப்போது அம்பலப்பட்டு தனிமைப்பட்டு பீதியடைந்து கிடக்கின்றனர். ''தீவிரவாதிகளின் கொலைப் பட்டியலில் உள்ள எனக்கு பாதுகாப்பு ஏற்பாடுகளைக் குறைத்து விடாதீர்கள். ஒருவேளை நீங்கள் குறைப்பீர்களானால் அவர்கள் ஹார்சாத்பாலில் உள்ள எனது தந்தை ஷேக் அப்துல்லாவின் கல்லறையைத் தகர்த்தெறிவார்கள். அவரது எலும்புக்கூட்டை நடுத்தெருவில் வீசி அவமதிப்பார்கள். அது தேசத்துக்கே அவமானமாகிவிடும்'' என்ற பீதியில் ஒப்பாரி வைக்கிறார் காஷ்மீர் முன்னாள் முதல்வர் பரூக் அப்துல்லா.

அவரது தேசிய மாநாட்டுக் கட்சியினர் தாங்கள் அரசியலுக்கே முழுக்குப் போட்டு விட்டதாகவும், தவறுகளை மன்னிக்கக் கோரியும் பத்திரிக்கைகளில் விளம்பரம் செய்து மக்களின் கோபத்திலிருந்து தப்

# பஞ்சாபில் பயங்கரவாத ஆட்சி தொடர்கிறது அடக்குமுறை

காஷ்மீரில் ராணுவம் கட்டவிழ்த்துவிட்டுள்ள வன்முறை வெறியாட்டத்துக்கு சற்றும் குறையாமல் பஞ்சாப் மாநிலமும் அரசு பயங்கரவாதத்தால் ரணகளமாக்கப் பட்டுள்ளது. பொற்கோவிலுக்கு நல்லெண்ணத் தூது சென்று, தீர்வு காணப் போவதாக நாடகமாடிய வி.பி.சிங்கும் அவரது பரிவாரங்களும் பாசிச ராஜீவ் பாணியிலேயே அரசு பயங்கரவாதத்தையே தீர்வாகக் கொண்டு பஞ்சாப் மக்களை அடக்குகின்றனர்.



கிராமத்தில் ஆயுதம் ஏந்தி நிற்கும் அரசின் கையாள். மதவாத பயங்கரவாதத்தை எதிர்ப்பதாகக் கூறி கட்டவிழ்த்து விடப்படும் அரசு பயங்கரவாதம்.

பஞ்சாபில் மாதத்துக்கு சராசரி 170 பேர் கொல்லப் படுகின்றனர். நூற்றுக்கணக்கான அப்பாவி இளைஞர்கள் விசாரணை என்ற பெயரில் தொடர்ந்து சித்திரவதை செய்யப்படுகின்றனர். பாகிஸ்தான் எல்லையோர கிராமங்களில் மக்கள் சுதந்திரமாக நடமாடக்கூட தடை விதிக்கப்பட்டுள்ளது. அறிவிக்கப்படாத உள்நாட்டுப் போரில் சிக்கித் தவிக்கும் பஞ்சாபை பற்றிய செய்திகள் கூட இருட்டடிப்பு செய்யப்படுகின்றன. எந்த நாட்டிலும் சிவிலியன்களை சித்திரவதை செய்ய ராணுவத்துக்கு உரிமையில்லை. இவர்களுக்கு மட்டும் யார் உரிமை கொடுத்தார்கள் என்று வெஞ்சினத்தோடு கேட்கிறார் அகாலிதள தலைவர் மான்.

ஆனாலும் அரசு பயங்கரவாத அடக்குமுறையைப் பற்றி வாய் திறக்காத ஓட்டுக் கட்சிகளும் பத்திரிக்கைகளும், அண்மையில் படாலாவில் இந்துக்கள் நடத்திய ஊர்வலத்தின் மீது சீக்கிய தீவிரவாதிகள் குண்டு வீசி 30 பேரைக் கொன்று அரசு பயங்கரவாதத்துக்கு பதிலடி கொடுத்ததும் அலறித் துடித்தன. ''இந்துக்களுக்கு பாதுகாப்பில்லை. தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் உதவி செய்கிறது. பஞ்சாபில் செயல்பட வேண்டிய தருணம் வந்துவிட்டது'' என்று இந்துவெறி பாரதீய ஜனதாவும் தேசிய பத்திரிக்கைகளும் கூப்பாடு போட்டன.

விரைவில் தேர்தல் நடத்தி, பஞ்சாபை ஜனநாயக நீரோட்டத்தில் இணைப்போம் என்று வாக்குறுதி அளித்த தேசிய முன்னணி அரசு, இப்போது இந்து வெறியர்களுக்கு அடிபணிந்து நாடாளுமன்றத்தில் ஏகமனதான ஆதரவுடன் மீண்டும் குடியரசுத் தலைவர் ஆட்சியை ஆறுமாதங்களுக்கு நீட்டித்துள்ளது. ''மீண்டும் பஞ்சாப் காலனியாக மாற்றப்பட்டு நாங்கள் அடிமைகளாக்கப் பட்டுள்ளோம். பாசிச - வகுப்புவாத சக்திகளின் கூட்டணியான தேசிய முன்னணி அரசை இனியும் நாங்கள் நம்பத் தயாராக இல்லை. எமது போராட்டம் தொடரவே செய்யும்'' என்று எச்சரித்துள்ளார் அகாலிதள தலைவர் சிம்ரஞ்சித்சிங் மான்.

காஷ்மீரைப் போலவே, பஞ்சாப் மக்களின் கொஞ்சநஞ்ச உரிமைகளையும் பறித்து, அவர்களை தமது சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கி அடக்குமுறையை ஏவுவதையே புதிய ஆட்சியாளர்களும் தீர்வாகக் கொண்டுள்ளனர். முன்பு பாசிச ராஜீவ் கும்பல் கையாண்டு தோல்வி கண்ட இப்பாதை, பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதில் மேலும் தீவிரப்படுத்தவே செய்யும் என்பதில் சந்தேகமே இல்லை.

படிப்பகம்

www.padippakam.com

பித்துக் கொள்ள முயலுகின்றனர். அனைத்து ஓட்டுக்கட்சிகளும் இந்துக்கள் அதிகமாக வாழும் ஜம்மு பிராந்தியத்தை விட்டு வெளியே வரவே அஞ்சுகின்றன.

**பயங்கரவாதத்துக்கு பதிலடி!**

அரசு பயங்கரவாதம் அதிகரிக்கத் தொடங்கியதும் போராளிகளின் எதிர்த்தாக்குதலும் தீவிரமாகியது. தமது சகாக்கள் மூவரை உடனடியாக விடுதலைச் செய்யக் கோரி, அரசுத்துறை நிறுவனமான ஹெச்.எம்.டி. ஆலையின் நிர்வாக இயக்குனர், காஷ்மீர் பல்கலைக்கழக துணைவேந்தர் மற்றும் அவரது செயலாளர் ஆகியோரை அண்மையில் கடத்திச் சென்றனர். குறிப்பிட்ட காலக்கெடுவை நீட்டித்தும்கூட அரசு அவர்களது கோரிக்கையை ஏற்காததால் கடத்திச் சென்ற பிணைக் கைதிகளைச் சுட்டுக் கொன்றனர்.

இச்செய்தி கேட்டு பேரதிர்ச்சி அடைந்த குடியரசுத் தலைவரும் பிரதமரும் இனிமேலும் பொறுத்துக் கொண்டிருக்க



**காஷ்மீர் நகர வீதிகளில் வேவு பார்க்கும் இந்திய ராணுவம். காலனியாதிக்கப் பேராசை!**

மாட்டோம்; கடும் நடவடிக்கை எடுப்போம். காஷ்மீர் பிரிவினைவாதிகளுக்கு உதவி செய்து இந்தியாவின் உள்விவகாரங்களில் தலையிடும் பாகிஸ்தானுக்குப் பாடம் புகட்டுவோம்'' என்று கொக்கரித்தனர். ''காஷ்மீர் கை நழுவிப் போகும் அபாயத்தில் உள்ளது. இனியும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று தேசிய பத்திரிக்கைகள் அலறின. ''காஷ்மீரிலிருந்து இந்துக்கள் அகதிகளாக ஓடிவரும் அவலம் அதிகரித்து விட்டது. இனிமேலும் சகித்துக் கொண்டிருக்க முடியாது'' என்று இந்து வெறி பாரதீய ஜனதா கட்சி தேசிய முன்னணி அரசை எச்சரித்தது.

''காஷ்மீர் கவர்னரின் கரங்கள் கட்டிப் போடப்பட்டுள்ளன. தீவிரவாதம் தலைவிரித்தாடும் போது தாராளவாத அணுகுமுறை பலனளிக்காது. கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று ஏற்கனவே தேசிய முன்னணி அரசை மிரட்டி வந்த இந்துவெறி பாரதீய ஜனதா கட்சி, இப்போது இன்னும் ஒரு படி மேலே சென்று ''இந்திய வெளியுறவுக் கொள்கைக்குத் தரப்படும் விலைதான் நமது ராணுவ பட்ஜெட் '' என்று பாகிஸ்தானுக்கு சவால் விடுத்தது. இந்து மதவெறியைத் தூண்டி ஆதாயம் அடையும் நோக் குடன் பாரதீய ஜனதாவுடன் சேர்ந்து கொண்டு பாசிச காங்கிரசும் கூப்பாடு போடுகிறது.

ஆட்சியாளர்களும் அனைத்து ஓட்டுக் கட்சிகளும் பத்திரிக்கைகளும் இந்துவெறி - தேசிய வெறியூட்டி ஒரே குரலில் அரசு பயங்கரவாதத்தை நியாயப்படுத்தி மேலும் தீவிரப்படுத்தவே முனைகின்றன. காஷ்மீரை இந்தியாவின் காலனியாக மாற்றி அத்தேசிய இனமக்களை துடிக்கத் துடிக்கக் கொன்றொழிப்பதை மனித நேயமுள்ள எவரும் வேடிக்கை பார்த்து கொண்டிருக்க முடியாது. அரசு பயங்கரவாத அட்டூழியங்களை அம்பலப்படுத்தி, காஷ்மீரி மக்களின் நியாயமான சுயநிர்ணய உரிமைப் போரை ஆதரித்து உரத்த குரலெழுப்ப வேண்டும்!

● மனோகரன்

## விவசாய விடுதலை முன்னணியின் வட்டார முதல் மாநாடு

# நம்பிக்கையான தொடக்கம்

இந்தியா ஒரு விவசாய நாடு. ஆனால், இங்கு விவசாயிகள் மாடாக உழைத்து கால் வயிறே நிரப்பி வறுமையில் உழன்று கொண்டிருக்கிறார்கள். அனைத்து ஓட்டுக் கட்சிகளும் ஆசைவார்த்தைக் காட்டி ஓட்டைப் பறித்துக் கொண்டு ஏமாற்றி வருகின்றன. போலி கம்யூனிஸ்டுகளின் தலைமையிலான விவசாய சங்கங்களோ, தோழன் என்று கூறி துரோகம் செய்து வருகின்றன. கட்சி சார்பற்ற சங்கங்கள் விவசாயிகளின் போராட்டத்தை திசைதிருப்பி வருகின்றன.

இவைகளுக்கு மத்தியில் புரட்சிகர சங்கம் அமைத்து தமிழ்நாட்டின் ஒரு பகுதியிலே வட்டார மாநாடு கூட்டி சரியான பாதையில் விவசாயிகளின் விடுதலைக்கு தொடக்கப் புள்ளி வைத்திருக்கிறார்கள், புரட்சியாளர்கள்.

**விவசாயிகள் விடுதலை முன்னணியின் உசிலை வட்டார முதல் மாநாடு** தூக்கு மேடை தியாகி தோழர் பாலு அரங்கத்தில் 28.3.90 அன்று நடந்தது. தோழர் குருசாமி மாநாட்டிற்கு தலைமை தாங்கினார். கருத்தரங்கம், பேரணி, பொதுக்கூட்டம், கலைநிகழ்ச்சி என நிகழ்ச்சிகள் மாநாட்டை அலங்கரித்தன.

கருத்தரங்கத்திற்கு திருவெண்ணை நல்லூர் ஒன்றிய வி.வி.மு. தோழர் நாராயணன் தலைமையேற்று, தோழர்கள் கே.பி.ராமசாமி மற்றும் துரைமாணிக்கமும் உரை நிகழ்த்தினர். தோழமை அமைப்பான மக்கள் கலை இலக்கிய கழகத்தின் தோழர் கதிரவன் இன்றைய அரசியல் சூழ்நிலையில் புதிய ஜனநாயகப் புரட்சியை முன்னெடுப்பது எப்படி என எழுச்சியூட்டும்படி பேசினார்.

பிறகு வி.வி.மு. மாநில இணைப்பாளர் தோழர் மாது. புதிய செயற்குழுவை அறிமுகப்படுத்தினார். புதிய செயற்குழு உறுப்பினர்களாகிய தோழர் கே.பி.ராமசாமி, தோழர் என்.குருசாமி, தோழர் பி.திசைகர்ணன் ஆகியோரை ம.க.இ.க. மாநிலச் செயலர் தோழர் மருதையன் வாழ்த்திப் பேசினார். பிறகு புதிய செயற்குழு வட்டச் செயலாளராக தோழர் கே.பி.ராமசாமி அவர்களை தேர்வுசெய்து அறிவித்தது. தோழர் தனம் நன்றியுரையாற்றி அரங்கு கூட்டத்தை முடித்து வைத்தார்.

மாலை, தோழர் பாலு அரங்கத்திலிருந்து புறப்பட்ட பேரணி பொதுக்கூட்டத் திடலை, முக்கிய சாலைகள் வழியே கடந்து சென்றடைந்தது. 300க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு செங்கொடி ஏந்தி அணிவகுத்து விண்ணதிர முழக்கமிட்டது உசிலை நகரையே அலங்கரித்தது.

அடுத்து உத்தமபாளைய வட்ட வி.வி.மு. கலைக்குழு தோழர்கள், பாடல்கள் பாட, தோழர் மொக்கையன் தலைமையில் பொதுக்கூட்டம் தொடங்கியது. திடலில் 1000க்கும் மேற்பட்ட மக்கள் கூடிநின்று ஆதரவளித்தனர். ம.க.இ.க. மாநிலப் பொருளாளர் தோழர் காளியப்பன் மற்றும் தோழர் மாது (வி.வி.மு.) சிறப்புரையாற்றினார்கள். தோழர் கே.பி.ராமசாமி மாநாட்டு தீர்மானங்களை விளக்கிப் பேசியபின் ம.க.இ.க. கலைக்குழுவினர் வழங்கிய புரட்சிகர கலை நிகழ்ச்சி நடந்து மாநாடு இனிதே முடிவடைந்தது.

படிப்பகம்

www.padippakam.com

# அம்பேத்கார் நூற்றாண்டு விழா - பெருமை யாருக்கு?

இந்திய அரசியல் சட்டத்தை வடிவமைத்தவரும் 'தாழ்த்தப்பட்ட' மக்களின் தலைவருமான டாக்டர் அம்பேத்காரின் நூறாவது பிறந்தநாள் விழா ஏப்ரல் 14 அன்று நடைபெற உள்ளது. 'சூத்திரர்'களின் அரசான தேசிய முன்னணி அரசு, அம்பேத்காரின் நூறாவது பிறந்தநாளை ஒட்டி ஏப்ரல் 14 அன்று அரசு விடுமுறையாக அறிவித்திருப்பதோடு, நாட்டின் மிக உயர்ந்த ''பாரத ரத்னா'' விருதையளித்து அவருக்கு புகழஞ்சலி செலுத்தி கௌரவித்துள்ளது. ஏப்ரல் 14 முதல் ஓராண்டு காலத்துக்கு நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளை அரசு சார்பில் நடத்தவும் ஆட்சியாளர்கள் முடிவு செய்துள்ளனர்.

தாழ்த்தப்பட்ட மக்களை இரட்சிக்க வந்த புத்தராக சித்தரிக்கப்படும் அம்பேத்கார், அரசு சலுகைகள் - சன்மானங்கள், இட ஒதுக்கீடுகளைப் பெறுவதன் மூலம் சாதியக் கொடுமையை ஒழிக்க முடியும் என்று கனவு கண்டார். இதற்காக பிரிட்டிஷ் காலனியவாதிகளுடனும், 1947 அதிகார மாற்றத்துக்குப் பின்னர் தரகுமுதலாளித்துவ - நிலப் பிரபுத்துவ ஆட்சியாளர்களுடனும் சமரசமாகவும் அனுசரணையாகவும் நடந்து கொண்டார். உயர்கல்வி கற்ற போதிலும், அவர் காலத்தில் உலகெங்கும் புரட்சிகர மாற்றத்துக்கான போராட்டங்கள் நடந்தபோதிலும் அவர் தேச விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்கவே இல்லை. சாதிக் கொடுமைக்கு எதிராகவும் அதற்கு அடித்தளமாக உள்ள நிலப்பிரபுத்துவ கட்டுமானத்தையும் புரட்சிகரமான முறையில் தூக்கியெறிவதற்குப் பதில், சலுகைகளோடு சமாதானம் அடையும் சீர்திருத்தப் பாதையையே தீர்வாக வைத்தார். முதலாளித்துவ சித்தாந்தக் கண்ணோட்டமும் தீவிர கம்யூனிச எதிர்ப்பும் கொண்ட அவரது வாழ்வும் நடவடிக்கைகளும் அவர் ஒரு முதலாளித்துவ சீர்திருத்தவாதி என்பதையே தெளிவாகக் காட்டுகின்றன.

அவர் மறைவுக்குப்பின், அவர் நிறுவிய குடியரசுக் கட்சியின் - சாதிய அமைப்புகளை மேலும் விரிவுபடுத்தி அரசு சலுகைகளுக்கான போட்டியில் - பேரத்தில் தீவிரமாக இறங்கி பிழைப்புவாதிகளாக சீரழிந்தனர். தாழ்த்தப்பட்டோரிலேயே பல்வேறு உட்பிரிவுகளுக்கு இடையிலான வேறுபாடுகளின் காரணமாக அக்கட்சி பல்வேறு குழுக்களாக சிதைந்து கிடக்கிறது. தாழ்த்தப்பட்டோரின் பெயரால் சில தனிநபர்கள் சலுகைகள் - சன்மானங்களைப் பெற்று உயர்பதவிகளை அடைந்து மேட்டுக் குடியினராக மாறியதைத் தவிர வேறொன்றையும் அவர்கள் சாதிக்கவில்லை. சாதிய உணர்வுகளைத் தூண்டி தாழ்த்தப்பட்டோரைத் திரட்டி காங்கிரசிடம் அடகுவைத்து ஆதாயம் பெறுவதா அல்லது ஜனதா தளத்திடம் அடகு வைப்பதா என்பதில் பிளவுபட்டு நிற்கும் பிழைப்புவாதிகளாக அவர்கள் முன்னேறிவிட்டார்கள்.

சாதிய பிழைப்புவாதிகளுக்கு அம்பேத்கார் அவசியமானவராக உள்ளதைப் போலவே இன்றைய ஆட்சியாளர்களுக்கும் அவர் அவசியமானவராகிவிட்டார். அம்பேத்காரின் நூற்றாண்டு விழா அவர்களது ஆதாயத்துக்கான வாய்ப்பாக அமைந்துள்ளது. இங்கே கருணாநிதிகூட ராஜாஜி,



*அம்பேத்கார் எழுதிய இந்திய அரசியல் சட்டம் 40 ஆண்டுகளுக்குப் பிறகும் 'தாழ்த்தப்பட்ட' மக்களுக்கு விடுதலையைத் தரவில்லை.*

காமராஜர், எம்.ஜி.ஆர். ஆகியோருக்கு நினைவாலயம் கட்டி தெய்வமாக்கியதைப் போலத் தான் தேசிய முன்னணி அரசும் அம்பேத்காரை துதி பாடுகிறது. இதன் மூலம் அனைத்து தரப்பு மக்களின் ஆதரவைப் பெற்ற ஆட்சி என்று அவர்கள் காட்டிக் கொள்ள முயல்கின்றனர். "இந்திய அரசியல் சட்டத்தை வகுத்த அந்த மாமனிதற்கு நாடாளுமன்றத்தில் ஒரு உருவப்படம் கூட இல்லையே" என்று வேதனையடைந்தாராம் வி.பி.சிங். அம்பேத்காருக்கு பாரத ரத்னா விருது அளித்திருப்பது மிகப் பொருத்தமான சரியான முடிவு என்று வாழ்த்தி வரவேற்றுள்ளார் குடியரசுத் தலைவர். ஆனால் இதே பார்ப்பன குடியரசுத் தலைவர்தான், தாழ்த்தப்பட்ட மக்களை அடக்கி இழிவுபடுத்தும் இந்துமதப் பண்டாரங்கள் - சங்கராச்சாரிகளின் காலில் விழுந்து வணங்குகிறார். அம்பேத்காரின் நினைவாக தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்துக்கோ, அவர்கள் மீது ஏவப்படும் சாதிய அடக்குமுறையைத் தடுக்கவோ சாதாரண சீர்திருத்த சட்டத்தைக் கூட இன்று அவர்கள் அறிவிக்கவில்லை. அம்பேத்கார் மட்டுமல்ல; வேறு எந்த தலைவரானாலும் அவரது நோக்கங்களை எதார்த்த வாழ்வில் கடை பிடிக்காமல் இருந்துவிட்டு இறந்தபிறகு அவர்களைப் பூஜை அறைப் படமாக்கி ஒட்டுப்பொறுக்குவது தான் இப்பிழைப்புவாதிகளின் நோக்கமாக உள்ளது.

இன்றைய ஆட்சியாளர்கள் அம்பேத்கார் நூற்றாண்டு விழா நடத்தி கௌரவிப்பதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன. முதலாவதாக, காந்தி நேருவின் வாரிசுகள் என்று காட்டிக் கொள்ள முடியாத அளவுக்கு காந்தியிசம் தோற்றுப்போய்விட்டது. எனவே காந்தியத்தை எதிர்த்த நேதாஜி,பகத் சிங் போன்றோருக்கு ராஜீவ் கும்பல்கூட முக்கியத்துவம் அளித்து கௌரவித்தது. அதே உத்தியோடுதான் ஜனதா தள கும்பலும் கிளம்பியிருக்கிறது. ஆனால் நேரு-இந்திரா பரம்பரைக்கு மாற்றான தலைவர்களை அது முன்னிறுத்துகிறது. பீகாரின் புதிய கிரிமினல் முதல்வர் லல்லு பிரசாத் யாதவ், ஜெயப் பிரகாசர் உருவச்சிலை முன் நின்று உறுதிமொழியேற்று பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்கிறார். ஆச்சார்ய நரேந்திர தேவ் சிங்கின் நூற்றாண்டு விழாவை சந்திரசேகர் முன்னிருந்து நடத்துகிறார். லோகியாவை போலி சோசலிஸ்டுகள் தூக்கிப் பிடிக்கின்றனர். அதே பாணியில் தான் இப்போது வி.பி.சிங் அரசும் அம்பேத்காரை கௌரவிக்கிறது.

இரண்டாவதாக, ஆளும் வர்க்க நலன்களைக் காத்து மக்களை அடக்கி ஒடுக்குவதற்கான அரசியல் சட்டத்தை இயற்றித் தந்தார் என்பதால் அம்பேத்காருக்கு செலுத்தும் நன்றிக் கடனாக நூற்றாண்டு விழா நடத்தி கௌரவிக்கிறார்கள். சாதிய பிழைப்புவாதிகளும் சட்டம் வகுத்த சிற்பி என்று புகழ்பாடுகின்றனர்.

தனது சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் இந்திய சட்டத்தை இயற்றியுள்ளார் என்பதற்காக தாழ்த்தப்பட்ட மக்கள் பெருமை கொள்ள முடியாது. தாழ்த்தப்பட்டோரை மட்டுமின்றி இதர பிரிவு உழைக்கும் மக்களையும் ஒடுக்குவதற்கான சட்டத்தைத்தான் அவர் வகுத்தளித்தார். தரகு முதலாளிகள், நிலப்பிரபுக்களின் ஆதிக்கச் சுரண்டலுக்கு ஏற்ற வகையில் தனியுடமையைக் காக்கும் சட்டத்தைத் தான் அவர் இயற்றினார். அம்பேத்கார் எழுதிய சட்டங்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு மண்ணும் செய்யவில்லை என்பதையே 40 ஆண்டுகால அனுபவம் நிரூபிக்கிறது. அவரது சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு புதிதாக வந்த சீர்திருத்தச் சட்டங்கள்கூட தாழ்த்தப்பட்ட மக்களை சாதியக் கொடுமையிலிருந்து காப்பாற்றவில்லை. தனது சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் தம்மையே ஒடுக்குவதற்கான சட்டம் இயற்றியதற்காக பெருமை கொள்ள முடியுமா? தனது கையைக் கொண்டே தனது கண்ணைக் குத்திக் கொள்வதில் ஒருவர் மகிழ்ச்சி அடையத்தான் முடியுமா? முடியாது! தனது சமூகத்தைச் சேர்ந்தவர் அடக்குமுறைச் சட்டம் இயற்றியமைக்காக ஆத்திரப்படத் தான் முடியும். அதேசமயம் ஆட்சியாளர்கள் - சாதியப் பிழைப்புவாதிகளின் ஆதாய நோக்கங்களை அம்பலப்படுத்தி, சாதிய விலங்கொடிக்க தாழ்த்தப்பட்ட மக்கள் புரட்சிப் பாதையில் அணிதிரள வேண்டும்.

● குமார்

படிப்பகம்

www.padippakam.com

# ஆக்கிரமிப்பு - ஆதிக்கப் பேராசை மாறவில்லை

இலங்கை - ஈழ ஆக்கிரமிப்புப் போரிலே தோற்று நாடு திரும்பும் இந்திய இராணுவத்துக்கு செயற்கையான உற்சாக மூட்டும் முயற்சியில் தாமே நம்பாத பொய்களை இந்திய ஆட்சியாளர்களும், அதிகாரிகளும், தளபதிகளும் பேசி வருகின்றனர்.

திரிகோணமலையில் நடந்த வழியனுப்பும் சடங்கின் போது இந்தியத் தூதர் மெஹ்ரோத்ரா ''உங்களைக் குறித்து நாங்கள் பெருமைப்படுகிறோம். உங்களுடைய சாதனைகளை வரலாறு பொன்னெழுத்துக்களில் பொறிக்கும். இலங்கையின் அமைதியையும் ஒருமைப்பாட்டையும் காக்கும் பணியை உறுதியான தியாகத்தோடு நிறைவேற்றினீர்கள். பெருமையும் நன்றியுணர்வும் மிக்க தேசம் உங்களை வரவேற்க இந்தியக் கரையிலே காத்திருக்கிறது'' என்றார்.

இங்கே வரவேற்பு வைபவமோ கருமாதி சடங்கு போல நடந்து முடிந்தது. ''நாட்டின் கௌரவத்துக்காகப் போராடி உயிர் தியாகம் செய்தவர்களுக்காக தலைவணங்கி அஞ்சலி செலுத்துகிறோம். பெருமையோடும் நன்றியோடும் தேசம் அமைதிப் படையை வரவேற்கிறது. ஏனெனில் இந்தியாவின் நற்பெயர், கௌரவம், மதிப்பு ஆகியவற்றைக் கடினமான சூழ்நிலையிலும் போரிட்டுக் காத்தனர்'' என்று புகழ்ந்தார் தமிழக ஆளுநர் அலெக்சாண்டர்.

''அவர்களுடைய வேண்டுகோளை ஏற்றுப் போனோம். அதற்கு அவர்கள் நன்றி கூறாவிட்டாலும் எவ்வளவோ சிரமங்களுக்கிடையே உங்களது கடமையைத் திருப்திகரமான முறையில் ஆற்றியுள்ளீர்கள். அதற்காக நாடு உங்களுக்கு ஆழமாகக் கடமைப்பட்டுள்ளது'' என்றார் இராணுவத் துணை மந்திரி ராஜாராமண்ணா. இதையே நாடாளுமன்றத்தில் சொன்னார் ராணுவ மந்திரியாகவும் உள்ள பிரதமர் வி.பி.சிங்.

அப்படி என்ன இந்திய இராணுவம் இலங்கையிலே சாதித்துவிட்டது? தளபதிகளும் அதிகாரிகளும் ஒரே குரலில் புளுகுகின்றனர். ''இலங்கை பிளவுபடாத நட்பு நாடாக இருக்கவேண்டும்; தமிழர் பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் தீர்வுகாண வேண்டும் என்பதுதான் இந்தியாவின் நோக்கம். தமிழர் பிரச்சினையை இராணுவ ரீதியில் தீர்ப்பதற்கு இலங்கை அரசு முயன்றது; தமிழர்களும் தனி ஈழம் கோரிப் போரிட்டனர். இலங்கை ராணுவம் பாசறைக்குள் முடக்கப்பட்டது; புலிகள் ஜனநாயக - சமாதானப் பாதைக்குத் திரும்பி, தனி ஈழம் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டனர். இலங்கை அரசும் புலிகளும் பேச்சுவார்த்தை நடத்துகின்றனர். அதிகாரம் பரவலாக்கப்பட்டு, வடகிழக்கு மாகாண கவுன்சில் அமைந்துவிட்டது. ஈழத்தில் அமைதி நிலவுகிறது'' என்று கிளிப்பிள்ளைகள் போல அவர்கள் அனைவரும் ஒப்புக்கின்றனர்.

இந்திய - இலங்கை விவகாரங்களைக் கவனித்து வரும் எல்லோருக்குமே இது அப்பட்டமான புளுகு என்பது தெரியும். அரசியல், இராணுவம், அரசு தந்திரம் ஆகிய மும்முனைகளிலும் இந்தியா படுதொல்வி கண்டுள்ளது என்ற உண்மையை எவ்வளவு முயன்றாலும் மறைக்கவே முடியாது.

இலங்கையின் ஐக்கியத்தைக் காப்பதும், அமைதியை நிலைநாட்டுவதும்தான் இந்தியாவின் நோக்கமாயிருந்ததாம்! அப்படியானால், ''எங்களுக்குள் பேசித் தீர்த்துக் கொள்கிறோம். போரை நிறுத்துங்கள்; படையை விலக்கிக் கொள்ளுங்கள்'' என்று புலிகளும், பிரேமதாசாவும் கோரி - நிர்பந்தித்தபோதும் இந்தியா ஏன் மறுத்தது? என்ன கூறியது? அதன் பிறகும் தமிழ் தேசிய இராணுவம், குடிமக்கள் தொண்டர் படை ஆகிய கூலிப்படையை உருவாக்கி பயிற்சியும் ஆயுதங்களும் தரவில்லையா? ஈழத் துரோகிகள் வெளியேறும் முன்பு தனி ஈழம் பிரகடனம் செய்ய அனுமதித்தது ஏன்? இன்னமும் அவர்களுக்கு தஞ்சமளித்து உதவுவது எதற்காக?

இன்னும் இலங்கை பிளவுபடாமல் இருக்கிறது. ஈழத்தில் அமைதி ஏற்பட்டுள்ளது என்றால் அவை இந்தியா மேற்கொண்ட முயற்சிகளுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் மாறான எதிரான விளைவுகள் தாம்! இந்தியா அதற்கான உரிமை பாராட்டுவது வெறுக்கத்தக்க கேலிக்குரியது தான்!

இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிட்டதற்காக அது என்னதான் அதிகாரபூர்வமாகக் கூறி வந்தாலும் அதன் உள் நோக்கம் வேறானதுதான்.

இந்தியாவின் ஆதிக்கப் பிரதிநிதியாக ''வைஸ்ராய்'' என்றழைக்கப்பட்டவர் இந்தியத் தூதர் ஜே.என்.தீக்சித். அவர் பகிரங்கமாகவே சொன்னார், ''நிர்பந்தத்தினாலோ, நிலை தடுமாறியோ அண்டை நாடுகளில் ஏதேனும் நம்மை மிரட்டினால் எதிர்கொள்ளும் வல்லமை எங்களுக்கு இருக்கிறது; அவர்களுக்குப் பாடம் புகட்டும் வகையில் அவர்களுடைய பிராந்தியங்களுக்குள் புகுந்து நிலை கொள்ளும் அரசியல் உறுதியும் எங்களுக்கு இருக்கிறது என்று நமது செல்வாக்கைக் காட்டுவதற்கு இலங்கையில் அமைதிப்படை தங்கி இருப்பது நிரூபணமாக விளங்குகிறது.''

ஆகவே, இந்த பிராந்திய ஆதிக்கம், வல்லமையைக் காட்டுவது ஆகிய நோக்கத்தோடு தான் இலங்கை ஆக்கிரமிப்பு நடந்தது. 1949 இல் இருந்தே இந்த பிராந்தியத் துணை வல்லரசு 'பேட்டை ரௌடி'யாக இந்தியா முயன்று வந்திருக்கிறது. 1949-50 ஆண்டுகளில் பர்மா, இந்தோனேசியாவுக்கு இராணுவ உதவி என்கிற பெயரில் தலையீடு; 1960களில் நேபாள ஆட்சிக் கவிழ்ப்புகளில் பங்கேற்றது; பாகிஸ்தானைப் பிளவுபடுத்தியது; அண்டை நாடுகளுடன் ஆக்கிரமிப்புப் போர்கள் நடத்தியது ஆகியவற்றின் தொடர்ச்சியாக இலங்கையில் ஆதிக்கத்தை நிறுவ முயன்றது. இதற்காக 1974 முதலே இலங்கை - ஈழ விவகாரத்தில் 'ரா' தனது கைவரிசையைக் காட்டி வருகிறது. இந்தியாவின் இராணுவ ஆலோசகரும், யுத்த நுட்ப வல்லுநருமான கே.சுப்பிரமணியம் இதை ஒப்புக் கொள்கிறார்.

''அமைதிப்படை இலங்கையில் தங்கி இருப்பதால், இந்தப் பிராந்திய வல்லரசாக இந்தியா அங்கீகாரம் பெற்றுள்ளது. அணு சக்தி நீர்மூழ்கித் திட்டங்கள் வாங்கியது, மாலத் தீவில் தலையிட்டது, அக்கினி ஏவுகணைச் சோதனைகள் அதற்கு மேலும் வலுவூட்டின. இவற்றினால் தான் இந்திய நலன்க

**உதைபட்டு வந்த இந்திய ராணுவத்தை, அதன் தளபதி கல்கத்தை பெருமையோடு வரவேற்கும் தமிழக கவர்னர் அலெக்சாண்டர், மத்திய துணை ராணுவ மந்திரி ராஜாராமண்ணா.**



படிப்பகம்

www.padippakam.com

ளுக்குரிய பகுதியாக தெற்கு ஆசியாவை மேல்நிலை வல்லரசுகளும் அங்கீகரித்தன. நமது இராணுவ பலம், அதைப் பிரயோகிப்பதில் நமக்குள்ள உறுதி ஆகியவை காரணமாகத்தான் இலங்கை அதிபர் அமெரிக்க உதவியை நாடியபோது அது மறுத்துவிட்டது. இந்தியாவை நாடும்படி அவர் நிர்பந்திக்கப்பட்டார். இதனால்தான் மாலத்தீவுகளில் இந்தியா மேற்கொண்ட போலீசு வேலையை அமெரிக்கா ஆதரித்தது'' என்று ஒரு கருத்தரங்கில் பகிங்கரமாகவே பேசினார், இந்தியக் கடற்படையின் முன்னாள் தளபதி நட்கர்னி. வங்கதேசப் படையெடுப்புக்கு தலைமை ஏற்ற தளபதி அரோராவும், இதே கருத்தைத் தெரிவித்தார்.

''ஆசியாவின் புதிய வல்லரசாக இந்தியா'' என்ற அட்டைப்படக் கட்டுரையை லண்டன் 'டைம்ஸ்' ஏடு எழுதியபோது இந்தியா மறுத்தது. ஆனால் இந்தியாவின் பலத்தை அங்கீகரிப்பதாக அதையே பெருமையோடு இந்திய வெளிவிவகார அமைச்சகம் கருதியது. இந்தியா அரசியல் பொருளாதார ரீதியில் வளரும் பிராந்திய வல்லரசு என்று அமெரிக்கா ஒப்புக் கொண்டுவிட்டது. எனவேதான் சமீபகாலங்களில் அதன் முப்படைத் தளபதிகளை இந்தியாவுக்கு அனுப்பியது என்று பெருமையடித்துக் கொள்ளுகிறது.

ஆகவே, இந்தியாவின் விரிவாக்க, ஆக்கிரமிப்பு, ஆதிக்கப் பேராசைதான் இலங்கை - ஈழ விவகாரங்களில் இந்தியா இராணுவத் தலையீடு செய்ததற்குக் காரணம். இப்போது அது ஈழத்தில் இருந்து உதைத்து விரட்டப்பட்டதானது, அதன் முயற்சிகளுக்கு நேர்ந்த பின்னடைவுதான்!

தற்போது இந்தியாவில் ஆட்சி நடத்தும் தேசிய முன்னணியின் கட்சிகள் அனைத்துமே எதிர்க்கட்சியாக இருந்தவரை காங்கிரசு ஆட்சியின் இலங்கை - ஈழக் கொள்கைகளை எதிர்த்து வந்தன. ஆனால் ஆட்சிக்கு வந்தபிறகு அதே விரிவாக்க, ஆக்கிரமிப்பு, ஆதிக்கப் பேராசையைத் தொடர்கின்றன.

பாசிச ராஜீவ் கும்பல் ஒப்புக் கொண்ட கெடுவான 1989, டிசம்பர் 31க்குள் படைவிலக்கம் செய்து கொள்ள மறுத்தது. ஒருபுறம் கருணாநிதியை வைத்து ஈழப்போராளிக் குழுக்களுடன் பேரங்கள் நடத்தியது; மறுபுறம் 'நட்புறவு ஒப்பந்தம்' என்கிற பெயரில் சமனற்ற இன்னொரு ஒப்பந்தத்தை இலங்கையின் மீது திணிக்க முயன்றது. இந்த முயற்சிகள் பலிக்காமல் போகவே, தனது கூலிப்படையும் புலிகளை எதிர்கொள்ள முடியாமல் வீழ்ச்சியடையவே வேறு வழியின்றி படைவிலக்கம் செய்து கொண்டது.

இந்திய அரசின் பிராந்திய ஆதிக்கக் கொள்கையை வகுத்து அமுல்படுத்திய அதிகாரவர்க்கத்தினராகிய பிரதமர் அலுவலகத்தில் உள்ள ரோனன்சென், ஏ.என்.வர்மா, வெளிவிவகார அமைச்சகத்திலுள்ள செயலாளர் கே.என்.சிங், குல்தீப் சகாதேவ் ஆகியோர் இன்னமும் அதே பொறுப்பு - பதவிகளில் நீடிக்கின்றன. பாசிச ராஜீவ் கும்பலின் இலங்கை - ஈழக் கொள்கைகளையும் ராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தையும், ஈழ ஆக்கிரமிப்பு போரையும் கூட புதிய தேசிய முன்னணி ஆட்சியாளர்கள் நியாயப்படுத்தி வருகிறார்கள்.

பாசிச இந்திரா - ராஜீவ் கும்பலின் விசுவாச உளவுப் படையான 'ரா'வில் கூட களையெடுப்புகள் எதுவும் இல்லை. 400க்கும் மேற்பட்ட உயர் அதிகாரிகளுக்கு மேலும் பதவி உயர்வுகளும் சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளன. ஈழ துரோகிகளான முக்கூட்டு அமைப்பினருக்கு இந்தியாவில் தஞ்சமளித்திருப்பது கூட பழைய விசுவாசம்தான். அடிவருடித்தனங்களுக்கு நன்றிக்கடன் செலுத்துவதற்காக இல்லை. அவர்களை மறு ஒழுங்கு செய்து, பயிற்சியும் ஆயுதங்களும் கொடுத்து மீண்டும் ஈழத்துக்கு அனுப்புவதற்காகத் தான். இதற்காகத் தான் ஈழத்தில் இருந்து மீண்டும் ஆயுதங்களைக் கடத்தி வருகிறார்கள்; தமிழகத்தில் உள்ள முன்னாள் இந்திய இராணுவத்தினரது கூலிப்படையை திரட்டி, கேரளத்தில் போலிக் கம்யூனிஸ்டுகளின் ஆதரவோடு பயிற்சிகள் தொடங்குகின்றனர்.

புதிய ஆட்சியாளர்களும் விரிவாக்க, ஆக்கிரமிப்பு, ஆதிக்க பேராசையை நனவாக்கிவிட முடியும் என பகற்கனவு காண்கிறார்கள். ஆனால் அது எதிர்விளைவுகளைத் தான் தோற்றுவிக்கும். அகதிகளாக வந்துள்ள ஈழத் துரோகிகள் கொலை, கொள்ளை, கடத்தல் முதலிய சமூக விரோத நடவடிக்கைகளில் இறங்குவர். ஈழத்தில் இருந்து, போராளிகளுக்கு இடையே உள்ள குழுச் சண்டை தமிழ் நாட்டிற்கும் விரிவாக்கப்படும். இங்கேயுள்ள சில இனவாதக் குழுக்கள் பயங்கர வாத அரசியலுக்குப் பலியாவார்கள். ஆனால் பழைய, புதிய ஆட்சியாளர்களின் பேராசைகள் மட்டும் ஒருபோதும் நிறைவேறாது. ஈழ ஆக்கிரமிப்பு போரைப் போலவே பெருந்தோல்வி தான் அவர்களுக்குக் கிட்டும்.

— மாணிக்கவாசகம்

# நகராட்சி மருத்துவமனைகள் சீர்கேட்டை எதிர்த்து....



திறந்தவெளி கழிப்பிடம். இதில் ராஜ்ஜியம் நடத்தும் பன்றிகள். தேங்கிநிற்கும் சாக்கடை. இதில் துயில் கொள்ளும் கொசுக்கள். - இதுதான் இந்தியாவின் அடிப்படை வசதிகள். இந்திய உழைப்பாளி குடும்பங்களின் வசிப்பிடமும் இதுதான். இவர்கள் நோய் கிரிமிகளால் தாக்கப்பட்டு அடிக்கடி நோயில் படுக்க நேரிடுகிறது. அரசியல்வாதிகள் - அதிகாரிகள் - மேட்டுக்குடியினர் போல் வைத்தியம் பார்க்க இவர்களால் அமெரிக்காவிற்கு பறக்க முடியாது. அருகேயுள்ள நகராட்சி மருந்தகத்தைத்தான் நாடவேண்டும் இல்லையென்றால் விதியே என சாகவேண்டியதுதான். இதுதான் பலகோடி இந்திய மக்களின் நிலை.

திருச்சி வரகநேரி நகராட்சி மருந்தகம். வரகநேரி, தாராநல்லூர், உப்புப்பாறை, அரியமங்கலம் பகுதிகளில் உள்ள சுமார் 1 லட்சம் உழைப்பாளி மக்கள் இங்குதான் சிகிச்சை பெற வேண்டியுள்ளது. ஆனால், இங்கு தேவையான மருந்து மாத்திரைகள் இல்லை. நகராட்சி வழங்குகிற நிதியில் முக்கால் பங்கு, வேலை செய்யும் ஊழியர்களின் சம்பளத்திற்கு போய்விடுகிறது. மருந்து மாத்திரைகள், பஞ்சுதுணி வகையறாக்கள் அனைத்தும மீதியுள்ள கால்பங்கிற்குள் தான் வாங்க முடியும். அதாவது வருடத்திற்கு ரூ.3000-க்கு மட்டுமே இவைகளை வாங்க முடிகிறது. இதை ஒரு மாதத்திற்கு, ஒரு நாளுக்கு என பிரித்து வைத்துக் கொண்டு மருந்தகம் நடத்த வேண்டியுள்ளது. இதனால், ஊசியில்லை, மாத்திரையில்லை, கட்டுப்போட துணியில்லை என நோயாளிகளை திருப்பி அனுப்பி விடுகிறார்கள். பலசமயம் சம்பந்தமற்ற மாத்திரைகளை தந்து நோயாளிகளை திருப்திபடுத்துவதும் உண்டு. மேலும், இங்கு பெண் ஊழியர்கள் இல்லை. இதனால் பெண்கள்ள இங்கு சிகிச்சைப்பெற கூச்சப்படுவதும் - சங்கடப்படுவதுமாக அவதிப்படுகிறார்கள். இந்நிலைதான் திருச்சியிலுள்ள 10 நகராட்சி மருந்தகங்களிலும் நிலவுகிறது.

கோடி கோடியாக வரிப்பணத்தை விழுங்கும் திருச்சி நகராட்சியால் இம்மருந்தகங்களுக்கு நிதி ஒதுக்க முடியாமல் இல்லை. சமீபத்தில் திருச்சியில் நடந்த தி.மு.க.வின் 6வது மாநில மாநாட்டிற்கு நகரத்தலைவர் பாலகிருஷ்ணன் 'சோடியம் பல்ப்' நகராட்சி செலவில் போட்டு தருவதாக கோரியிருக்கிறார்

மூன்றுநாள் கூத்துக்காக வலிய போய் சேவகம் செய்ய முன்வந்த பாலகிருஷ்ணனுக்கு பல வருடங்களாக இப்படி அவதிப்படும் மக்கள் குரல் காதிற்கு கேட்கவில்லை. மேலும் அரசியல்வாதிகள் - அதிகார மேட்டுக்குடியினர் வாழும் பகுதிகளுக்கு மட்டும் ஓடோடி போய் சேவை செய்கிறது நகராட்சி. எனவே, இவற்றை எதிர்த்து

★ பெண் ஊழியர்களை நியமனம் செய்!

★ தரமான - போதுமான மருந்து மாத்திரைகள் கிடைக்க வழிவகை செய்!

★ மருந்தகத்திலும் - பகுதிகளிலும் சுகாதர வசதி செய்து கொடு!

என கோரிக்கைகளை வைத்து 30.4.90 அன்று காலை 11 மணிக்கு திருச்சி நகராட்சி அலுவலகம் முன்பு பகத்சிங் இளைஞர் முன்னணியினர் கூடி ஆர்ப்பாட்டம் நடத்தினர். பகுதிமக்கள் மற்றும் இளைஞர்கள் ஆதரவுடன், இவர்கள் நடத்திய இப்போராட்டம் நகராட்சி அதிகாரிகள் மத்தியில் சர்ச்சையை கிளப்பியிருக்கிறது.

**தகவல்: பகத்சிங் இளைஞர் முன்னணி, திருச்சி**

படிப்பகம்

www.padippakam.com

"பிரபாகரனும் - தமிழினவாதக்குழுக்களும்" என்ற - கட்டுரை பற்றி நகைமுகன் 'புதிய ஜனநாயகம்' ஏட்டிற்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். நெடுமாறன், நகைமுகன் போன்ற பிரபகாரன் துதிபாடும் பிற்போக்கு இன வாதிகளின் கண்ணோட்டத்தையும், மூடத்தனத்தையும் புரிந்துகொள்ள இக்கடிதமே தக்க சான்று என்பதால் இதை வெளியிடுகிறோம்.

அன்புடையீர்,

வணக்கம்.

தங்களின் பிப்ரவரி இதழில் "பிரபாகரனும் - தமிழின வாதக் குழுக்களும்" என்ற கட்டுரையை இன்று தமிழ் தேசியத் தன்னுரிமை மாநாட்டில் பேசிய பிறகுதான் படித்தேன். அதில் நான் 'துக்ளக்' இதழுக்கு எழுதிய கடிதத்தை முன் வைத்து விவாதத்தைத் துவக்கியிருந்தீர்கள். தனிநபர் வழிபாடு கூடாதென்பதையே தங்கள் கட்டுரை வலியுறுத்துகிறது. தங்கள் கருத்து எங்களுக்கு ஏற்புடையதல்ல. ஆனால் தங்களுக்கே அதில் தெளிவில்லை என்பதுதான் வேதனையாக உள்ளது.

'கம்யூனிச அரசியல் ஏடு' என்று போடாமல், மார்க்சிய - லெனினிய ஏடு என்று போட்டுள்ளதிலிருந்தே கொள்கையைவிட, தனி நபர்களையே தாங்களும் நம்பியுள்ளீர்கள் என்பது தெள்ளத்தெளிவாகிறது.

இந்திய மண்ணின் விடுதலைப் போரின் போது காந்தியாரையும், விடுதலைக்குப்பின் ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள நேரு, இந்திரா, ராஜீவையும் தான் இந்திய தேசிய காங்கிரஸ் காட்டியது. பெரியார், அண்ணா, கலைஞர் கருணாநிதி, எம்.ஜி.ஆர். ஜெயலலிதா வைத் தான் தமிழ்நாட்டில் திராவிட இயக்கங்கள் காட்டுகின்றன. கொள்கைகளை எவரும் கண்டுகொள்வதில்லை. தலைவரை நம்பியே நமது மக்கள் வாக்களிக்கின்றனர். தியாகத்தில், திறமையில், உழைப்பில் உறுதியில் உயர்ந்து நிற்கும் கம்யூனிஸ்டுகள் காங்கிரசையும், திராவிட இயக்கங்களையும் இதில் மிஞ்ச முடியவில்லை. காரணமென்ன? கூட்டுத்தலைமை, தனிநபர் வழிபாடு கூடாதென்ற வறட்டுத் தத்துவம்தான். இந்த மண்ணுக்கு இந்த வறட்டுத் தத்துவம் பொருந்தாது. இதை உணர்ந்து, திருந்தாதவரை கம்யூனிசம் இங்கு செல்லுபடியாகாது.

மாவோ, லெனின், ஹோசிமின் போன்றோர் மூலம்தான் மார்க்ஸ், ஏங்கல்ஸின் கம்யூனிசமே உலகுக்குத் தெரிய வந்தது. தனிமனிதன் இல்லாமல் எந்தத் தத்துவமும் வெகுமக்களைச் சென்றடையாது. நாங்கள் Non-Communist தான்; ஆனால் Anti-Communist அல்ல.

பிரபகாரன் ஒரு விடுதலை வீரன். தமிழன். இன்னொரு நாட்டு ராணுவத்தையும் எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு ஆளானவன். அதிலும் தோல்வி காணாதவன். சிங்கள ராணுவத்தை எதிர்த்துப்போரிட்ட வரையிலும் பிரபகாரன் ஈழத்தமிழ்ப் போராளி; இந்திய ராணுவத்துடன் மோதிய தினத்திலிருந்து அவன் உலகத்தமிழ்ப் போராளி. யாசர் அராஃபத்தையும், நெல்சன் மண்டேலாவையும் விட எவ்வகையிலும் குறைந்துவிடாத சுதந்திரப் போராட்டத் தளபதி. இந்நிலையில் அவர் சோஷலிஸ்டா? கேபிடலிஸ்டா? என்பது வேண்டாத கற்பனை.

இந்தியாவிலுள்ள தமிழனும், இலங்கையிலுள்ள தமிழனும் மொழியால் மட்டுமின்றி, இனத்தாலும் ஒன்றே! திராவிடனே! ஆரிய எதிர்ப்பாளனே! கடல் நீர் எவ்வளவு காலம் "எல்லை" என்று இவர்களைப் பிரித்துவிடும்? பிரபாகரனால் தான் தமிழினம் விடுதலை பெறும்; உயர்வடையும்.

இவண்,
நகைமுகன் ராமசந்திரன்
தமிழக அமைப்பாளர்
வெகுமக்கள் சமுதாயக் கட்சி

● ○ ●

வரலாற்றில் தனி நபர்கள் வகிக்கும் பாத்திரத்தை நாம் மறுப்பதில்லை. உரிய முக்கியத்தும் அளித்தே வருகிறோம். மார்க்சிசம் - லெனினிசம் என்பது தனிநபர்களைக் குறிப்பதா? அறிவியல்பூர்வமான தத்தும், சித்தாந்தம், உலகக கண்ணோட்டம். ஆனால் பிரபாகரன் துதிபாடுவதை நியாயப்படுத்துவதற்காக மார்க்சிய - லெனினியப் பேராசான்களை எவ்வளவு கீழ்தரமான கும்பலுடன் ஒப்பிடுகிறார் பாருங்கள்! கொள்கைகள் மீதும் மக்கள் மீதும் எவ்வளவு மரியாதை வைத்திருக்கிறார்கள் பாருங்கள்! "நாங்கள் கம்யூனிஸ்டு அல்லாதவர் தான்; ஆனால் கம்யூனிஸ்டு எதிர்ப்பாளர் அல்ல" என்கிறாரே அதுவும் கூட எது வெற்றி பெற்றாலும் அதிலே இணைந்துக் கொண்டு ஆதாயம் தேடும் திராவிட இயக்கத்துக்கே உரிய பிழைப்புவாதம்தான்!

எல்லாத் தமிழர்களும் ஓரினமே! 'கடல்நீர் எவ்வளவு காலம் 'எல்லை' என்று இவர்களைப் பிரித்துவிடும்!" என்று கேட்கிறார் நகைமுகன். "இது எங்கள் தேசத்துக் கடல் எல்லை! இங்கு அத்துமீறி நுழைந்து மீன் பிடிக்காதீர்கள்! எச்சரிக்கிறோம்!" என்று கடலிலே எல்லைக்கோடு வரைந்து தமிழ்நாட்டுத் தமிழ் மீனவர்களைக் கைது செய்து பிரபகாரன் மிரட்டுகிறாரே அந்தத் துப்பாக்கிமுனை நகைமுகன் கேள்விக்கு பதில் சொல்லுகிறது. "எங்களுடைய அனுமதியின்றி, எங்களுக்கு வரி செலுத்தாமல் ஈழத்துக்குள் நுழையாதீர்கள்!" என்று தமிழ் நாட்டுத் தமிழர்களுக்கே தடை விதித்து வசூல் நடத்துவதற்கு பிரபாகரன் நியமிக்கும் சுங்க அதிகாரிகள் நகைமுகன் கேள்விக்குப் பதில் சொல்லுவார்கள்! "நாங்கள் ஈழத் தமிழினம்! நீங்கள் இந்தியத் தமிழினம்" என்று அவர்கள் வேறுபடுத்திக் காட்டுவார்கள்!

நகைமுகன் ராமச்சந்திரன் - திராவிட இயக்கம் தமிழகத்துக்குக் கொடுத்துள்ள இன்னுமொரு பிழைப்புவாதத் திடீர்த் தலைவர். இருந்தபோதும் திராவிட இயக்கத்துக் கேயுரிய சதி - துரோகத்தனத்துக்குப் பலிகடா ஆக்கப்பட்டுள்ளார்.

இவர் வெகுமக்கள் சமுதாயக் கட்சி என்று மா.பொ.சி. பாணியில் ஒரு பெயர்ப் பலகை அமைப்பை நடத்தி வருகிறார். கடந்த செப்டம்பரில் திராவிடர் கழகம் நடத்திய திருச்சி மாநாட்டில் வீரமணி துதிபாடியும் சாதி வெறியைத் தூண்டியும் பிரபலமடைந்தார். தமிழ்த் தேசியப் பிரச்சினைக்காக நடத்தப்படும் கூட்டங்களில் முக்கியப் பங்கேற்று வந்தார்.

கடந்த மார்ச் 29ந் தேதி, சிம்ரான்ஜித் சிங் மான் தலைமையிலான அகாலிதளம் புதுடில்லியில் நடத்திய கூட்டத்தில் நகைமுகன் கலந்துகொண்டார். தான் விடுதலைப் புலிகளின் பிரதிநிதி என்றும், பிரபகரனும் மானும் மதுரையில் சந்தித்துப் பேசுவதற்கு ஏற்பாடு செய்திருப்பதாகவும் அவர் அறிவித்தார். சீக்கியர்களும் தமிழர்களும் வீரதீர யுத்தப் பரம்பரை இனத்தவர்கள்; இந்துமத பாசிசத்துக்கு எதிரானவர்கள் என்றும் முழக்கமிட்டார்.

செய்தி அறிந்ததும் நகைமுகனைக் கைது செய்து நடவடிக்கை எடுக்கும்படி தமிழகப் போலீசுக்கு உத்தரவிட்டார், கருணாநிதி. "நகைமுகன் சீக்கியத் தீவிரவாதிகளோடு சேர்ந்து தேச விரோத சதிகளில் ஈடுபட்டார்; அமைதிக்கு ஊறு விளைவித்தார்; பிரிவினை வாதத்தைத் தூண்டும் அறிக்கை வெளியிட்டார்" என்று குற்றம் சாட்டப்பட்டு புதுடில்லியில் வைத்து தமிழகப் போலீசு கைது செய்தது. தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் விசாரணையின்றி சென்னை சிறையில் அடைக்கப்பட்டார்.

"நகைமுகனுக்கும் எங்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. இந்திய அரசுக்கு எதிரான போரில் சீக்கியர்களுக்கு உதவுவதாகக் கூறி எந்தப் பிரதிநிதியும் அனுப்பவில்லை. பிரபாகரன் மதுரை வரும் திட்டம் கிடையாது" என்று புலிகள் மறுத்துள்ளனர்.

ஆனால் இந்தச் சம்பவம் குறித்து சிம்ரான்ஜித்சிங் மான் வேறுவிதமாகக் கூறுகிறார். "தமிழ்த் தேசிய இயக்கத்தின் தலைவரும், பிரபாகரனின் ஆதரவாளருமான நெடுமாறன் விடுதலைப் புலிகளின் சிறப்புத் தூதுவர் என்கிற முறையில் என்னைச் சந்தித்தார். எனவே அவருக்கு ஒரு வாளைப் பரிசளித்தேன். ஜூன் 9 அல்லது 10ந் தேதி பிரபாகரனை மதுரையில் சந்திக்கிறேன். பிரபாகரனைப் பெருமதிப்புக்குரியவராக நான் கருதுகிறேன். இந்த மாபெரும் விடுதலை வீரனை சந்திப்பது பெரும் மரியாதைக் குரியது என்று எண்ணுகிறேன். இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்துவது, தமிழர்கள் சீக்கியர்களின் உரிமைகள் ஆகியவை பற்றி பிரபாகரனுடன் விவாதிக்க உள்ளேன்" என்றார் மான். "ஈழத் தமிழர்களுக்கு எதிராக இந்திய இராணுவம் புரிந்த கொடுமைகள் பற்றிப் பிரபாகரன் எனக்கு எழுதினார். அவை பற்றிய புகைப்படங்களும் அனுப்பியுள்ளார்" என்று சொன்னார் மான்.

நகைமுகன் தன்னைச் சந்தித்தது பற்றி மான் குறிப்பிடவே இல்லை. விடுதலைப்


படிப்பகம்

www.padippakam.com

## தமிழினத் திடீர் தலைவர்

# நகைமுகன் கைது



'டில்லியில் தமிழக போலீசாரால் கைது செய்யப்பட்ட நகைமுகன்.

புலிகளின் சிறப்புத் தூதுவராக வந்தவர் நெடுமாறன். அவர்தான் பிரபாகரனுடன் மான் சந்திப்புக்கு ஏற்பாடு செய்கிறவர் என்கிறார். விடுதலைப்புலிகளோ, நெடுமாறனோ இதை மறுக்கவில்லை.

உண்மை என்னவென்றால் நெடுமாறனும் நகைமுகனும் சேர்ந்து தான் சிம்ராஞ்ஜித்சிங் மானைச் சந்தித்துள்ளனர். நகைமுகனை கைதுசெய்து சிறையிலடைத்ததற்குக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் சரியானவை என்றால் அவையே மானுக்கும் நெடுமாறனுக்கும் பொருந்தும்.

மானையும் நெடுமாறனையும் கைது செய்து தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் விசாரணையின்றிச் சிறையிலடைக்க வேண்டும் என்பதற்காக இதை நாம் கூறவில்லை.

தேசியப் பாதுகாப்புச் சட்டம் உட்பட அனைத்து அடக்குமுறை, கறுப்புச் சட்டங்களும் அடியோடு ரத்துச் செய்யப்பட வேண்டும்; அவற்றின் கீழ் யாருமே கைது செய்யப் படக் கூடாது. தேசிய சுயநிர்ணய உரிமை கோரவும், பிரிந்து போவதை ஆதரித்துப் பிரச்சாரம் செய்யவும் உரிமை வேண்டும். இதுதான் நமது நிலைப்பாடு. ஆகவே அதற்காக நகைமுகனைக் கைதுசெய்ததும், விசாரணையின்றி சிறையிலடைத்ததும் தவறு என்றுதான் சொல்லுகிறோம்.

அதே சமயம் சிம்ராஞ்ஜித்சிங் மான், நெடுமாறன் - நகைமுகன் சந்திப்பும், பேச்சும், கைதும் வேறு சில உண்மைகளை உணர்த்துகின்றன.

திராவிட இயக்கங்களின் இன உணர்வுப் பித்தலாட்டம். சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட சீக்கிய மதவெறித் தலைவர்கள் பலரும் பகிரங்கமாகவே காலிஸ்தான் பிரிவினை பேசுகின்றனர். அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு பஞ்சாப் முன்னாள் கவர்னர் அமைதி கோரியபோதும் தேசிய முன்னணி அரசு மறுத்துவிட்டது. நகைமுகன் விவகாரத்தில் கூட மான் மீது நடவடிக்கை இல்லை. நீக்குப்போக்கான கொள்கையைக் கடைப்பிடிப்பதாக மத்திய அரசு கூறிக்கொள்கிறது. அந்த அடிப்படையில், தான் பங்கேற்கும் தேசிய முன்னணி அரசிடம் கோருவதற்குக் கூட கருணாநிதி அரசு முன்வரவில்லை. திராவிடக் கட்சிகளும் தேசிய இனப் போராளிகள் தாம்; ஆனால் ஊசலாட்டம், சமரசத் தன்மை உடையவை என்று சில இனவாதிகள் நம்புகின்றனர்.. இல்லை - ஊசலாட்டம், சமரசம் இல்லை. ஆளும்வர்க்கங்களின் பிரதிநிதிகளாக இருந்து தேசிய இன விடுதலை முயற்சிகளை ஒடுக்குபவைதான் திராவிடக் கட்சிகள் என்பதை நகைமுகன் விவகாரம் நிரூபிக்கிறது.

கடந்த பிப்ரவரி புதிய ஜனநயாகம் ஏட்டிலே 'பிரபாகரனும் - தமிழ் இனவாதக் குழுக்களும்' என்றொரு கட்டுரை எழுதினோம். அதிலேயே, பிரபாகரனின் பாசிச துப்பாக்கித் துரைத்தனம் ஈழத்தோடு நிற்காது; அதை இந்தியாவிலுள்ள தமிழகத்துக்கும் விரிவுபடுத்துவார்; 'உலகம் முழுவதும் வாழும் தமிழர்கள் ஒரே இனம்; பிரபகாரன் உலகத் தமிழினத்தின் தளபதி; என்கிற பிற்போக்கு முழக்கத்தையும், பிரபாகரன் வழிபாட்டையும் பரப்புவதற்கு இங்கே ஒரு 'திராவிட - தமிழ்' தேசியக் கூலிப் பிரச்சாரக் கும்பல் உள்ளது. பிரபகாரன் போன்ற பாசிச நபர்களை இந்த நாட்டின், இந்த இனத்தின் உள் விவகாரங்களில் தலையிட அழைப்பதும், அதற்கான அடிப்படையைத் தயாரிப்பதும், அனுமதிப்பதும் கேடு விளைவிக்கும் என்று எச்சரித்திருந்தோம்.

இது மிகச் சரியான கணிப்புதானென்று மிக விரைவிலேயே நிரூபித்து விட்டார்கள். பிரபாகரன் தலைமையிலான பாசிச கும்பல், சீக்கிய மதவெறியர்களுடன் கை கோர்த்துக் கொள்ளுகிறார்கள்; நெடுமாறன், நகைமுகன் போன்ற பிழைப்புவாதிகள் அதற்குப் பாலமாக இருக்கிறார்கள். இதன் விளைவாக தமிழ் தேசிய இன விடுதலை மற்றும் வர்க்கப் போராட்ட இயக்கங்கள் திசை திருப்பப்படும்; பின்னுக்குத் தள்ளப்படும். பாசிச பயங்கர வாதம் இனவிடுதலை என்கிற பெயரிலே முன்னுக்கு வரும்; இந்த அபாயத்தை தமிழர்கள் அனைவரும் எதிர்த்து முறியடிக்க வேண்டும். •

## கொத்தடிமைகளாக அஞ்சல் ஊழியர்கள்

*ஆங்கிலேயர் காலத்திலிருந்தே மத்திய அரசால் கிராமப்புற தபால் நிலைய (E.D.B.O) கொத்தடிமைகள் போல் சுரண்டப்பட்டு வருகிறார்கள். வெள்ளை ஏகாதிபத்தியம் இவர்களை அரசு ஊழியராக்காமல் 'ஏஜெண்டுகள்' போல் நியமித்து சுரண்டியது. 1947 இந்தியா சுதந்திரம் அடைந்ததாக சொல்கிறார்கள். ஆனால் இன்றும், ED தொழிலாளர்கள் நிரந்தர ஊழியர்களாக்கப் படாமல் இருக்கிறார்கள். மேலும், மாதம் ரூ.500க்குள் கூலிகொடுத்து எவ்வித சலுகையும் இல்லாமலும் மேலும் ஒரு நாளைக்கு 5 மணி நேரம் இவர்கள் வேலை செய்தாலும் மணிக்கணக்கில் கூலி கொடுக்காமல் 'பாயிண்ட்' கணக்கிட்டு கூலி கொடுத்து சுரண்டிவருகிறது மத்திய அரசு.*

*இவர்களுக்கான இந்தியா தழுவிய அல்லது மாநிலம் தழுவிய தொழிற்சங்கம் இல்லை. இருக்கக்கூடிய வட்டம் - கோட்டமளவில் உள்ள தொழிற்சங்கங்களாகிய NFPE, FNPO, BPEU போன்றவைகளில் தொழிலாளர்கள் பிரிந்திருப்பதாலும் இவர்களது குரல் - கோரிக்கை எடுபடாமல் மத்திய அரசால் உதாசீனப் படுத்தப்பட்டு வருகிறது.*


*இந்நிலை உணர்ந்து தெள்ளாறு பகுதியைச் சேர்ந்த ED ஊழியர்கள், முதற்கட்டமாக தமிழ்நாடு தழுவிய தொழிற்சங்கம் ஒன்று கட்டிட, தொழிலாளர்களை அறைகூவி அழைத்து பிரசுரம் வெளியிட்டுள்ளனர். ED தொழிலாளர்களை நிரந்தரமாக்கக் கோரி பேரணி மற்றும் மாநாடு நடத்த முன்கை எடுத்துள்ளனர். இது வரவேற்கத் தக்க ஒன்று.*

*அனைத்து பகுதியிலுள்ள ED தொழிலாளர்கள் அனைவரும் தனித்தனியே பிரிந்து நிற்காமல் ஒருங்கிணைந்த ஒரு தொழிற்சங்கத்தை உருவாக்கி ஒன்றிணைந்த போராட்டத்தை நடத்த முன்வர வேண்டும். அதேசமயம், பிழைப்புவாதிகள், சந்தர்ப்பவாதிகள், நிர்வாக எடுபிடிகள் போன்ற துரோகத் தலைமையின் கீழ் ஒன்றிணையாமல் ஒரு புரட்சிகர தொழிற்சங்கத்தை உருவாக்கவும் போராட வேண்டும்.*

**தகவல்: ED ஊழியர்கள், தெள்ளாறு பகுதி.**

படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com



# இதுதான் போலீஸ்!

ஜனநாயகம்! அது போலீசு லத்திக்கு மட்டுமே சொந்தமானது! இதை மறுப்பவர்களுக்கு ஏற்படும் கதி இதுதான்! சாதாரண கோரிக்கைக்காக ஊர்வலம் போனவர்களை சிதறடித்து, தனித்தனியாக சுற்றிவளைத்து அடித்தே சாகடிக்க வெறியோடு பாய்கிறது போலீசு.

மகாராஷ்டிர மாநிலம் நாக்பூர் நகரம். பலமாடி குடியிருப்புகள் கொண்ட ராஜ்பவன் (கவர்னர் மாளிகை) பகுதி. இதையொட்டியிருக்கும் முக்கிய சாலைகளில், ராஜ்பவனுக்கு செல்லும் குடியிருப்பு சாலையும் ஒன்று. இருவழி தடமாக இருந்த அச்சாலை திடீரென ஒருவழி பாதையாக்கப்பட்டது. போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தவே இம்முடிவு எடுத்ததாகக் கூறினார், நாக்பூர் நகர போலீசு கமிஷனர் சுரேந்திர குமார் பத்தானியா. நகர துணை மேயர் மற்றும் முக்கியமானவர்களுடன் கலந்தாலோசித்து தான் இம்முடிவுக்கு வந்ததாக சொன்னார். அப்பகுதியைப் பற்றி அதிகம் விவரம் தெரியாதவர்கள் யாரும் இம்மாற்றத்தை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.

ஆனால், அச்சாலையில் பிழைப்பு நடத்திக் கொண்டிருந்த சிறுகடை வியாபாரிகள், ஒருவழி சாலையாக மாற்றிய போலீசின் உள்நோக்கத்தை பிரச்சாரம் செய்தார்கள்.

காங்கிரசுக் கட்சியின் முன்னாள் மத்திய மந்திரியும், தற்போது எம்.பி.யுமான என்.கே.பி.சால்வே குடும்பத்தின் பெரும் சொத்துக்கள் அச்சாலையில் விரவிக் கிடக்கின்றன. சால்வேயின் மருமகன் அருண் உபாத்தியா நவீன பலமாடி குடியிருப்பு ஒன்றை அங்கு சமீபத்தில் கட்டினார். இரைச்சல் மிகுந்த சாலையின் மத்தியிலிருந்த அக்குடியிருப்பில் யாரும் குடியேற விரும்பவில்லை. இதேபோன்று, நான்கு நட்சத்திர ஓட்டல் ஒன்று போதுமான கார் நிறுத்தும் இடம் இல்லாமல், வாடிக்கையாளர்கள் வராமல் கிடந்தது.

எனவே, இவற்றுக்கு வசதியாக அவ்விடத்தை நிசப்தமான குடியிருப்பு பகுதியாக்கவும், கார் நிறுத்தத்திற்கு பொதுசாலையை ஆக்கிரமிக்கவும் அச்சாலையை ஒரு வழி தடமாக்கியது, உயர் போலீசு. அச்சாலையின் குடியிருப்பு மதிப்பு இருமடங்காக உயர்ந்தது. ஆனால், போக்குவரத்து பாதியாக குறைந்து போனதால், புத்தகக்கடை, பிஸ்கட் - ரொட்டிக் கடை போன்ற நடைபாதை சிறுகடை வியாபாரிகளின் வருமானம் 40 சதவிகிதம் குறைந்தது. போலீசின் இந்த அதிகார ஊழலை பாதிக்கப்பட்டவர்கள், பிரசுரம், பொதுக்கூட்டம், பேரணி மூலம் தோலுரித்தனர்.

அந்நகர துணைமேயர் அகர்வால், போலீசு கமிஷனர் ஆலோசனை வைத்தபோதே, தான் அத்திட்டத்தின் மோசடியை எதிர்த்து வெளிநடப்பு செய்ததாகவும், தான் அனுமதி வழங்கவில்லை என்றும் அம்பலப்படுத்தினார். துணைமேயரின் துணைவியாரும், "சமூக பாதுகாப்பு குழு"வில் போலீசு வழங்கிய உறுப்பினர் பதவியை துறந்து தன் எதிர்ப்பைத் தெரிவித்தார்.

நாக்பூர் போலீசு பொதுசேவையின் 'நேர்மை', இப்படி நிர்வாணமான நிலையில் போராடிய சிறுகடை வியாபாரிகள் மீது பாய்ந்து குதறிய கோர காட்சிதான் இது.

தமிழகத்தில் ஆங்கிலேயன் காலத்திலும் அதன்பிறகும் கோடை காலத்தில் குளுகுளுவிற்காக ஊட்டியில் சட்டசபை இயங்கியது. அதுபோலவே, மகாராஷ்ட்டிர மாநிலத்திலும் பம்பாய், நாக்பூர் இரண்டு இடங்களிலும் சட்டசபை இயங்கியது. அதற்கு அருகில், விசாலமான இடங்களில் பண்ணை, பங்களாக்களை அமைத்துக் கொண்டு வனாந்திர சூழ்நிலையில் மிதக்கிறது, அதிகாரவர்க்க மேட்டுக்குடி கும்பல். இவர்களின் ஆழ்ந்த அமைதிக்கும், ரம்மியமான சூழ்நிலைக்கும் இடைஞ்சல் ஏற்படுத்தும் பொது போக்குவரத்து, பொது வர்த்தக, தொழில் நிறுவனங்களை அரசு எந்திரத்தின் துணையுடன் கண்காணாத இடங்களுக்கு விரட்டுகின்றனர்.

செருப்பு போட்டு நடப்பது, சைக்கிளில் செல்வது, முண்டாசு கட்டிக் கொண்டு செல்வது, பொது கிணற்றில் நீர் எடுப்பது போன்ற சாதாரண உரிமையைக்கூட இன்றளவும், நிலப்பிரபுத்துவ கும்பல் கிராமங்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு மறுக்கிறது; மீறுபவர்களை சமூக குற்றங்கள் புரிந்ததாக தண்டித்து அவமானப்படுத்துகிறது.

தீண்டாமையின் இன்னொரு வடிவமாகத்தான் நகர்ப்புறங்களில் அரசியல் பிரபல்யங்கள், அதிகாரவர்க்கத்தினர், மேட்டுக்குடி கும்பல்களுக்கு திட்டமிட்டு தனியே அமைதியான குடியிருப்புகளை உருவாக்குகிறது, அரசு. அங்கு அனைத்து நவீனங்களையும் அரசு செலவிலேயே கொண்டுபோய் கொட்டுகிறது. ஆளும் வர்க்க கும்பலுக்கு இருக்கும் இந்த மரபுவழி உரிமையை எதிர்க்க எவருக்கும் உரிமை இல்லையென்று வெறியோடு பாய்கிறது, அவர்களுக்காக வளர்க்கப்படும் அரசு எந்திரம். அதில் முன்னிலையில் இருக்கிறது, ஆளும் வர்க்கத்தின் நகமும் பற்களுமாக இருக்கும் போலீசு.

— பச்சையப்பன்

படிப்பகம்

www.padippakam.com



# வசந்தத்தின் இடிமுழக்கம்

1967ம் ஆண்டு இந்தியாவெங்கும் உணவுப் பஞ்சம் தலைவிரித்தாடிக் கொண்டிருந்த காலம். விவசாயிகளின் போராட்டம் முன்னெப்போதும் இல்லாத வகையில் கொந்தளிக்கத் தொடங்கியது. இந்தப் பின்னணியில்தான் நான்காவது பொதுத் தேர்தல் நடந்து முடிந்தது.

தேர்தல் முடிவுகள் இந்திய அரசியலில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தின. இந்தியாவை ஆண்டு கொண்டிருந்த காங்கிரஸ் கட்சியின் ஏகபோகம் முடிந்து எட்டு மாநிலங்களில் எதிர்க்கட்சி அமைச்சரவைகள் ஆட்சியில் அமர்ந்தன. மேற்கு வங்கத்தில் 14 கட்சி ஐக்கிய முன்னணி அரசு 1967ம் ஆண்டு மார்ச் 2-ல் பதவியேற்றது. வங்காள காங்கிரசின் தலைவர் அஜய் முகர்ஜி முதலமைச்சர்; இடது கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஜோதிபாசு போலீஸ் அமைச்சர்.

இந்த கட்டத்தில்தான், இந்திய அரசியலையே ஓர் உலுக்கு உலுக்கிய அந்த நிகழ்ச்சி நடந்தது; புரட்சிகர ஆயுதந்தாங்கிய பாதையில், மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனையின் ஒளியில் நடந்த நக்சல்பாரி விவசாயிகளின் பேரெழுச்சியே அது.

இதைத் தொடர்ந்து தான் முதன்முதலாக இந்தியாவில் உண்மையான கம்யூனிஸ்ட் கட்சியும் தோன்றியது. வலது, இடதுகள் என்ற பெயர்களில் இயங்கிவந்த போலி கம்யூனிஸ்டு கட்சிகளின் சாயமும் வெளுக்கத் தொடங்கியது.

மே.வங்க . ஐ.மு. அரசாங்கத்தில் பங்கேற்றிருந்த இடது கம்யூனிஸ்டு கட்சி, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நிலச்சீர்திருத்தத்தை தீவிரமாக அமுல்படுத்துவோம் என சவடால் அடித்திருந்தது. நிலம் மற்றும் வருவாய்த் துறை அமைச்சரும் இடது கம்யூனிஸ்டு தலைவருமான ஹரிகிருஷ்ண கோனார் பதவி ஏற்றவுடன், நிலமற்ற விவசாயிகளுக்கு உபரி நிலங்கள் வினியோகிக்கப்படும் என்றும் குத்தகைதாரர்கள் வெளியேற்றப்படுவது தடுக்கப்படும் என்றும் பிரகடனம் செய்திருந்தார். விவசாயிகள் மிக்க ஆர்வத்துடன் எதிர்பார்த்திருந்தனர்.

ஆனால், ஐ.மு. அரசு பதவிக்கு வந்தவுடனேயே நிலப்பிரபுக்கள், குத்தகைதாரர்களை வெளியேற்ற ஆரம்பித்து விட்டனர். ஏராளமான வெளியேற்றங்கள் நடந்தன. ஐ.மு. அரசு இதைத் தடுக்க முனையவில்லை. அதற்கான முற்சி எதையும் உருப்படியாக ஐ.மு. அரசு செய்யவில்லை. மாறாக சட்டங்கள், கோர்ட்டுகள், அதிகாரிகள் மீது பழியைப் போட்டுவிட்டு தங்களால் எதையும் செய்ய முடியாத நிலையில் இருப்பதாக நடித்தது. இடது கம்யூனிஸ்டு தலைவர் ஹரிகிருஷ்ண கோனார் பின்வருமாறு புலம்பினார்:

"பினாமி பெயரால் நடந்துள்ள மோசடியான மாற்றங்களைப் பற்றி அரசாங்கம் இன்னும் எந்த முடிவையும் எடுக்கவில்லை. அரசியல் சட்டத்தாலும் நீதிமன்றங்களாலும் காகிதக் கட்டுக்களாலும் ஆவணங்களாலும் போடப்படுகின்ற தடங்கல்கள் ஏராளம், ஏராளம்."

புரட்சியே தங்களின் நடைமுறை என்று போலியாக பேசி நடந்து வந்த இடது கம்யூனிஸ்டு தலைவர்கள் மாநில அரசாங்கங்களில் பதவியேற்பது தாங்கள் பதவி வெறி கொண்டதனால் அல்ல என்றும், 'வர்க்கப் போராட்டத்தின் கருவியாக பயன்படுத்தவும்' மக்களின் போராட்டங்களுக்கு ஆதரவளிக்கவும்' தான் மாநில அரசாங்கங்களில் பங்கேற்பதாகவும் சொல்லி வந்தனர்.

ஆனால் குத்தகைதாரர்களின் வெளியேற்றங்களைத் தடுக்கவில்லை; நிலப்பிரபுக்களின் நிலங்களைப் பறிமுதல் செய்து கூலி ஏழை விவசாயிகளுக்கு வினியோகிக்கவும் இல்லை; அப்படிச் செய்தால் தரகு முதலாளிகள் - நிலப்பிரபுக்களின் கருவியான மத்திய அரசு இவர்களின் மாநில அரசை டிஸ்மிஸ் செய்துவிடும் என்று இவர்களுக்குத் தெரியும். எனவேதான் பதவி சுகத்தை அனுபவிக்க விவசாயிகளுக்கு துரோகம் இழைத்தனர். நிலத்திற்காக அதிகாரிகளிடம் மனு கொடுக்கச் சொல்லி விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கினர்.

ஆனால் மே.வ. டார்ஜிலிங் மாவட்டத்தைச் சேர்ந்த இடது கம்யூனிஸ்டு தலைவர்களும், அணிகளும் இந்த துரோகத்தை எதிர்த்து நேரடி நடவடிக்கையில் இறங்கினர். கம்யூனிசத்தை போலித்தனமாக உச்சரிக்கும் தமது தலைமையை உதறியெறிந்து புரட்சிகரமான பாதையில் முன்சென்றனர். டார்ஜிலிங் மாவட்டம் சிலிகுரி உட்பிரிவு கிரிஷிக் சமிதியின் தலைவரான ஜங்கல் சந்தால் மற்றும் கனுசன்யால் (இருவரும் மாவட்ட அளவில் இடது கம்யூனிஸ்டு தலைவர்கள்) ஆகியோர் முன்முயற்சி எடுத்து 1967 மார்ச் 18-ல் விவசாயிகள் மாநாடொன்றை நடத்தினர். நிலப்பிரபுக்கள் நிலத்தின் மீது வைத்திருக்கின்ற ஏகபோகம் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்; விவசாய கமிட்டிகள் மூலம் நிலங்கள் மறுவினியோகம் செய்யப்பட வேண்டும்; நிலப்பிரபுக்கள் மற்றும் கிராமப்புற பிற்போக்காளர்களின் எதிர்ப்புகளை உடைத்தெறிய விவசாயிகள் ஆயுதந்தாங்கி அணிதிரட்டப்பட வேண்டும் என்று இம்மாநாடு அழைப்பு விடுத்தது - தங்களது நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்டங்கள் மத்திய, மாநில ஐ.மு. அரசுகளின் எதிர்ப்பை சமாளிக்க வேண்டியிருக்குமென்றும், எனவே, நீண்டகால ஆயுதப் போராட்டத்திற்கு தயாராவது அவசியம் என்றும் இம்மாநாடு நிலமற்ற விவசாயிகளை எச்சரித்தது.

இவ்வாறு விவசாயிகளைத் திரட்ட முன்கையெடுத்த இடது கம்யூனிஸ்ட் கட்சியின் டார்ஜிலிங் மாவட்டக் கமிட்டிக்கு சாரு மஜீம்தார் செயலாளராக இருந்தார். 1964-ல் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் பிளவு ஏற்பட்டு வலது, இடது என பிரிவாயிற்று. புரட்சி பேசிக் கொண்டு அதற்கு துரோகமிழைத்து, அரசுடன் சமரசமாக ஒத்துழைத்து தொழிற்சங்க ஜமீன்தார்களாக இருந்த தலைமையை எதிர்த்து, புரட்சிக்காகப் போராடிய அணிகளின் உணர்வைப் பயன்படுத்தி இடது கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கினார்கள், சுந்தரய்யா, பி.ராமமூர்த்தி போன்றவர்கள். ஆனால் இவர்களும் பழைய சந்தர்ப்பவாத வழியிலேயே செல்லவே அணிகள் இடது கம்யூனிஸ்டு கட்சித் தலைமையின் நவீன திரிபுவாதத்தையும் எதிர்த்துப்

படிப்பகம்

www.padippakam.com

போராடினர். மாற்றுபுரட்சிகர பாதையை முன்வைத்து நடைமுறையில் செய்து காட்டியவர்கள்தான் டார்ஜிலிங் மாவட்டக் கமிட்டியைச் சேர்ந்தவர்களாவர்.

மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனை, இந்தியா அரசியல் சுதந்திரம் பெறாத அரைக் காலனிய - அரை நிலப்பிரபுத்துவ நாடு, நீண்டகால மக்கள் யுத்தப் பாதை, விவசாயிகளின் விவசாயப் புரட்சியை சாராம்சமாகக் கொண்ட புதிய ஜனநாயகப் புரட்சி என்ற நிலைப்பாடுகளை முன்வைத்து விவசாயிகளின் ஆயுதந்தாங்கிய போராட்டங்களை கட்டியமைக்க முனைந்தனர்.

இதன் முதல் வெடிதான் விவசாயிகளின் மாநாடாகும். மாநாட்டைத் தொடர்ந்து போர்க் குணமிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டனர். 1967 மார்ச்சிலிருந்து 1967 ஏப்ரல் வரை டார்ஜிலிங் மாவட்டத்தில் எல்லா கிராம விவசாயிகளும் அணி திரட்டப்பட்டனர். ஒவ்வொரு கிராமத்திலும் விவசாயிகளின் கமிட்டி அமைக்கப்பட்டது; ஆயுதந்தாங்கிய குழுக்களாக அவை மாற்றப்பட்டன. விவசாயக் கமிட்டிகள் நிலங்களைக் கைப்பற்றிக் கொண்டு நிலம் தொடர்பான 'ரெக்கார்டுகள்' அனைத்தையும் எரித்தனர். விவசாயிகளின் கடன்கள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டன. கொடுமையான நிலப்பிரபுக்களுக்கு மரண தண்டனைகளை வழங்கியது. நிலப்பிரபுக்களிடம் இருந்து பறிமுதல் செய்த துப்பாக்கிகளையும் மரபு வழி ஆயுதங்களையும் பயன்படுத்தி வலுப்படுத்திக் கொண்டனர்; கிராமங்களை நிர்வகிக்க கூலி ஏழை விவசாயிகளைக் கொண்ட நிர்வாக கமிட்டிகள் அமைக்கப்பட்டன.

அந்த ஆண்டு மே மாதத்திற்குள் நக்சல்பாரி போலீஸ் சரகத்துக்குள் அடங்கிய ஹடிகிஷா; கரிபாரி போலீஸ் நிலையத்திற்குள் அடங்கிய பரகன்ஞ்ச்; பன்சிதேவா போலீஸ் நிலையத்திற்குள் அடங்கிய சௌடிகுரியா பகுதிகள் டார்ஜிலிங் மாவட்டக் கமிட்டி புரட்சியாளர்களின் கோட்டைகளாக மாறின. இப்படித்தான் புகழ் பெற்ற நக்சல்பாரி விவசாயிகளின் பேரெழுச்சி உதயமாயிற்று.

நிலைமை தனது கையை மீறிப் போவதை உணர்ந்த இடது கம்யூனிஸ்டு தலைமை டார்ஜிலிங் மாவட்டக் கமிட்டித் தலைவர்களுடன் பேசி போராட்டத்தை கைவிடச் செய்ய ஹரிகிருஷ்ண கோனாரை அனுப்பியது. புரட்சியாளர்களுடன் பேசிவிட்டு ஓர் அறிக்கையை அவர் வெளியிட்டார். சட்டவிரோத நடவடிக்கைகள் நிறுத்தப்படும்; நிலத்திற்காக விவசாயிகள் அரசாங்கத்திடம் மனு கொடுப்பார்கள்; உள்ளூர் விவசாய சங்கங்கள் ஆலோசனை செய்த பின் அதிகார வட்டாரங்கள் மூலம் நிலம் மறுவினியோகம் செய்யப்படும் ஆகியவை பேச்சு வார்த்தைகளில் ஒப்புக் கொள்ளப்பட்டதாகவும் மேலும் ஜங்கல் சந்தால், கனுசன்யால் உட்பட போலீசாரால் தேடப்பட்டு வந்த அனைவரும் போலீசில் சரணடைவதென முடிவெடுக்கப்பட்டதாகவும் கோனார் தனது அறிக்கையில் பொய்யாக கூறினார். புரட்சியாளர்கள் இதை உடனடியாக மறுத்தனர்.

இதைத் தொடர்ந்து நக்சல்பாரி விவசாயிகளின் எழுச்சி மீது போலீஸின் அடக்குமுறை தீவிரப்படுத்தப்பட்டது; இடது கம்யூனிஸ்டு தலைமை தன்னை முற்றாக நிலப்பிரபுக்களுடனும் எதிர்ப்புரட்சி முகாமோடும் வெளிப்படையாக இணைத்துக் கொண்டது.

இந்த துரோகத்தையும் போலீஸ் அடக்குமுறையையும் எதிர்த்து நக்சல்பாரி போராட்டம் முன்னேறியது.

நக்சல்பாரி விவசாயிகளின் போராட்டத்திற்கு ஆதரவாக இடதுகம்யூனிஸ்டு ஆதரவு மாணவர்கள் திரண்டனர்; கல்கத்தா நகர பிரசிடென்சி கல்லூரியைச் சேர்ந்த இம்மாணவர்கள் நக்சல்பாரியை ஆதரித்து சுவரொட்டிகள் ஒட்டினர். ''நக்சல்பாரி பாதையே விவசாயப் புரட்சியின் பாதை'', ''கொலைகாரன் அஜய் முகர்ஜியே ராஜினாமா செய்'' போன்ற முழக்கங்கள் அவைகளில் பளிச்சிட்டன.

கல்கத்தாவின் ராம் மோகன் நூலக அரங்கில் பிரசிடென்சி கல்லூரி மாணவத் தலைவர்களால் தலைமை தாங்கப்பட்ட இடது கம்யூனிஸ்டு அதிருப்தியாளர்கள் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. அதில் ''நக்சல்பாரி விவசாயிகளின் போராட்ட உதவிக் கமிட்டி'' என்ற அமைப்பை உருவாக்குகின்றனர். 1967 ஜூன் 27-ம் தேதி அவர்கள் மேற்குவங்க சட்டமன்றத்தின் முன் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

ஜூன் 18, 19 தேதிகளில் கூடிய இடது கம்யூனிஸ்ட் கட்சியின் மே.வ. மாநிலக் கமிட்டி, மாநிலக் கமிட்டி உறுப்பினரான சுசிதல்ராய் சௌத்திரி உட்பட 19 பேரை நக்சல்பாரி போராட்டத்தை ஆதரித்ததற்காக கட்சியின் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கியது. இடது கம்யூனிஸ்டு கட்சி மாநிலச் செயலாளரான பிரமோதாஸ் குப்தா நக்சல்பாரி போராட்டக்காரர்களை சி.ஐ.ஏ. ஏஜண்டுகள் என முத்திரை குத்தினார்.

நக்சல்பாரி விவசாயிகளின் பேரெழுச்சியை சீனக் கம்யூனிஸ்டு கட்சி ஆதரித்தது; ஜூன் 28ம் தேதி ரேடியோ பீகிங் தனது ஒலிபரப்பில் இப்போராட்டத்தைப் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டது: ''மாசேதுங் சிந்தனையின் வழிகாட்டுதலில் இந்திய மக்கள் தொடுத்த ஆயுதப் போராட்டத்தின் முதல் பாய்ச்சல்''; மேலும் அது மேற்குவங்க ஐ.மு. அரசை ''இந்திய மக்களை ஏய்ப்பதற்கான இந்தியப் பிற்போக்காளர்களின் கருவி'' என சித்தரித்தது.

1967 ஜூலை 12-ல் போராட்டத்தை ஒடுக்க மிகப் பெரிய போலீஸ் நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஜூலை 20-ல் ஜங்கல் சந்தால் கைது செய்யப்படுகிறார். வேறு சில தலைவர்களும் தொடர்ந்து கைது செய்யப்படுகின்றனர்; நக்சல்பாரி இயக்கம் ஒரு தேக்கத்திற்கு ஆளாகிறது.

1967ம் ஆண்டின் இறுதியில் நக்சல்பாரி போராட்டம் ஒரு பின்னடைவிற்கு உள்ளானாலும், அது, இந்தியாவெங்கும் புரட்சிகர சக்திகளை ஊக்குவித்து முதன்முதலாக புரட்சிகரமான, உண்மையான கம்யூனிஸ்டு கட்சியைத் தோற்றுவிக்க வித்திடுகிறது.

நக்சல்பாரி போராட்டத்தினால் உந்தப்பட்ட இடது கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த அணிகள் பல்வேறு மாநிலங்களில் தலைமையை எதிர்த்து போர்க்கொடி உயர்த்தினர். நிலைமையைச் சமாளிக்க இடது கம்யூனிஸ்டு கட்சியின் மத்தியக் கமிட்டி 1967 ஆகஸ்டில் மதுரையில் கூடியது; மத்திய கமிட்டி நிறைவேற்றிய தீர்மானங்கள் நக்சல்பாரி எழுச்சியை தவறென்றன. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதிப்பீடுகளை மறுத்தன; ஏற்கனவே நக்சல்பாரி போராட்டத்தையொட்டி சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை சில நிலைப்பாடுகளை ஆதரித்து பிரச்சாரம் செய்து வந்தது. இந்திய ஆளும் வர்க்கங்கள் பற்றி தவறான நிலைப்பாடு கொண்டிருந்ததற்காகவும் ஐ.மு. அரசில் பங்கேற்றதற்காகவும் இடது கம்யூனிஸ்டு தலைமையை தாக்கியிருந்தது. ஆயுதந்தாங்கிய எழுச்சிக்கு மக்களைத் தயார் செய்ய ஒரு புரட்சிகர கம்யூனிஸ்டு கட்சி தேவை எனவும் பிரச்சாரம்

ஆயுதமேந்திய நக்சல்பாரி போராளிகள். நாட்டின் மீதும் மக்களின் மீதும் எல்லையற்ற பாசம்.



படிப்பகம்

www.padippakam.com

செய்தது. மதுரை மத்திய கமிட்டித் தீர்மானங்கள் சீனக் கட்சியின் மதிப்பீடுகளை புறக்கணித்து சந்தர்ப்பவாத நிலை எடுத்தன. இந்த சந்தர்ப்பவாதத்தை எதிர்த்து முதலில் நிலை எடுத்தவர் உ.பி.மாநில இடது கம்யூனிஸ்டு கட்சி செயலாளரான சிவ குமார் மிஸ்ரா என்பவர் ஆவார். உத்திரப் பிரதேசத்தைத் தொடர்ந்து பஞ்சாப், ஆந்திர பிரதேசம், ஜம்மு காஷ்மீர், பீகார், தமிழ்நாடு முதலிய மாநிலங்களிலும் இடது கம்யூனிஸ்டு கட்சிக்குள் கலகங்கள் துவங்கின. இந்த அதிருப்தியாளர்கள் அனைவரும் மாற்று செயல்திட்டம் ஒன்றின் அடிப்படையில் ஒருங்கிணைய ஆரம்பித்தனர். நக்சல்பாரி புரட்சியாளர்களின் அடிப்படை அரசியல் நிலைபாடுகளை ஏற்றுக் கொள்ள ஆரம்பித்தனர்.

பிரசிடென்சி கல்லூரி மாணவர்கள் அமைத்த நக்சல்பாரி உழவர் போராட்டக் கமிட்டியிலிருந்து 'அகில இந்திய கிரிஷிக் சங்கராம் சஹாயக் சமிதி' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. இதன் முன்முயற்சியால் 1967 நவம்பர் மத்தியில் கல்கத்தாவில் ஒரு மாநாடு நடத்தப்பட்டது. இந்த மாநாடு இடது கம்யூனிஸ்டு கட்சியில் உள்ள புரட்சியாளர்களின் அகில இந்திய ஒருங்கிணைப்புக் குழு அமைப்பதென முடிவு செய்தது. இந்தியா முழுவதும் உள்ள புரட்சியாளர்களை ஒருங்கிணைக்கவும் படிப்படியாக ஒரு புரட்சிகர கட்சி அமைப்பதை நோக்கி போகவும் தற்காலிக கமிட்டி ஒன்றை ஏற்படுத்தியது.



எளிமை, உறுதி, சுயதியாகம், முகாமில் தலைமறைவு புரட்சியாளர்கள்.

இதன் விளைவாக 1967 நவம்பர் மாதம் 13-ம் தேதி சுசிதல்ராய் என்பவரைக் கன்வீனராகக் கொண்டு கல்கத்தாவில் 'இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)-ன் அகில இந்தியப் பொதுவுடமைப் புரட்சியாளர்களின் ஒருங்கிணைப்புக் கமிட்டி' அமைக்கப்பட்டது. இதில் மே.வ. ஒரிசா, கேரளா, மைசூர், தமிழ்நாடு, உ.பி., புரட்சியாளர்கள் பங்கேற்றனர். ஆந்திரா, ஜம்மு காஷ்மீர் புரட்சியாளர்கள் தனியே இருந்தனர்.

தனது முதல் பிரகடனத்தில் ஒருங்கிணைப்புக் கமிட்டி நாட்டின் பல பகுதிகளிலும் வெடித்திருந்த விவசாயிகளின் போராட்டங்களுக்கு தலைமை தாங்கி வழி நடத்திச் செல்ல வேண்டும் என்றும் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க ஒரு புரட்சிகர கட்சியைக் கட்ட வேண்டும் என்று தீர்மானித்தது. ஒருங்கிணைப்பு கமிட்டியின் சார்பாக 'லிபரேஷன்' என்ற ஆங்கில பத்திரிக்கை கொண்டு வரப்பட்டது. இந்தியா அரசியல் சுதந்திரம் பெறாத அரைக் காலனிய - அரை நிலப்பிரபுத்துவ நாடு; இந்தியப் புரட்சியின் இலக்குகள் அமெரிக்க ஏகாதிபத்தியம், ரசிய சமூக ஏகாதிபத்தியம், தரகு அதிகார வர்க்க முதலாளித்துவம், நிலப்பிரபுத்துவம்; இந்திய புரட்சி விவசாயிகளின் விவசாயப் புரட்சியை சாராம்சமாகக் கொண்ட புதிய ஜனநாயகப் புரட்சி; புரட்சிக்கான பாதை நீண்டகால மக்கள் யுத்தப் பாதையே; தேர்தலை புரட்சிக் காலம் முழுவதும் புறக்கணிப்பது போன்ற அரசியல் அடிப்படை நிலைப்பாடுகளை ஒருங்கிணைப்புக் கமிட்டி அறிவித்தது. மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனையே சித்தாந்த வழிகாட்டி எனவும் பிரகடனம் செய்தது.

பின்னர் ஆந்திராவிலிருந்தும் பிற மாநிலங்களிலிருந்தும் ஒருங்கிணைப்புக் கமிட்டியில் புரட்சியாளர்கள் இணைந்தனர்; இதன் அடுத்த கட்டமாக 1969 ஏப்ரல் 22-ல் இந்திய மண்ணில் முதன் முதலாக ஒரு உண்மையான புரட்சிகர கம்யூனிஸ்டு கட்சியான இந்தியப் பொதுவுடைமைக் கட்சி) (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) ஏற்படுத்தப்பட்டது.

● போஸ்.

# தமிழகமெங்கும் அரங்கக் கூட்டங்கள்.



## கம்யூனிசம் தோற்பதில்லை!

ரசியாவிலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் நடைபெற்று வரும் மாற்றங்கள் கம்யூனிசத்தின் தோல்வியைக் காட்டுவதாக ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களின் கைக்கூலிகளான பத்திரிக்கையாளர்களும் தொடர்ந்து பிரச்சாரம் செய்கின்றனர். ரசியாவையும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளையும் சோசலிச நாடுகள் என்று வானளாவப் புகழ்ந்து துதி பாடிவந்த வலது. இடது போலி கம்யூனிஸ்டு கட்சிகளோ இப்போது மவுனம் சாதிக்கின்றன; அல்லது மழுப்புகின்றன.

இந்நிலையில், தோல்வி கண்டிருப்பது கம்யூனிசம் அல்ல போலி கம்யூனிஸ்டுகளே என்பதையும், கம்யூனிசத்தின் வெற்றி தவிர்க்க இயலாதது என்பதையும் விளக்கி ம.க.இ.க. தமிழகமெங்கும் அரங்கக் கூட்டங்களை நடத்தியது. கடலூர், திருச்சி, தஞ்சை, மதுரை, கோவை, வேலூர், தருமபுரி ஆகிய நகரங்களில் மார்ச்சு மாதம் நடத்தப்பட்ட அரங்கக் கூட்டங்களில் மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் மாநிலச் செயலர் தோழர் மருதையன் பேசினார்.

ரசியாவில் கோர்ப்பசேவும் சீனாவில் டெங் கும்பலும் அறிமுகப்படுத்தியுள்ள சீர்திருத்தங்களின் தன்மைகள், கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் சீரழிவுகள் ஆகியவற்றையும், ரசியா, சமூக ஏகாதிபத்தியமாகச் சீரழிந்த வரலாற்றையும் விளக்கினார். மிகவும் கடினமான சூழ்நிலைகளில் லெனின், ஸ்டாலின், மாவோ ஆகிய தலைவர்கள் சோசலிசத்தைக் கட்டுவதற்குக் கையாண்ட சரியான முறைகளையும் தற்போது 'சீர்திருத்தங்கள்' என்ற பெயரில் கோர்ப்பச்சேவ், டெங் கும்பல்கள் கொண்டுவரும் வெளிப்படையான முதலாளித்துவப் பாதையையும் ஒப்பிட்டுக் காட்டினார். வெட்கம் கெட்ட முறையில் இவற்றை நியாயப்படுத்தும் போலி கம்யூனிஸ்டு தலைமைகளை அம்பலப்படுத்தினார். புரட்சிகர அமைப்பின் ஆதரவாளர்க ளும், போலி கம்யூனிஸ்டு கட்சி அணிகளும், பொதுவாகக் கம்யூனிச தத்துவத்தின் மீது பற்று கொண்டோரும் கலந்து கொண்டனர். கேள்விகள் எழுப்பி விளக்கங்கள் பெற்றனர். இக்கூட்டங்களை நடத்தியதின் மூலம் கம்யூனிச எதிர்ப்புப் பிரச்சாரத்தை முறியடிப்பதில் தமிழகத்தில் மக்கள் கலை இலக்கியக் கழகம் முன்வரிசையில் நிற்கிறது. பல்வேறு நகரங்களிலும் கூட்டங்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளன.

இவண்,
ம.க.இ.க., தமிழ்நாடு



படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்!

★ மேற்கு வங்க ஆளும் 'மார்க் சிஸ்ட்' கட்சி இரகசியமான வழிகளில் 200 கோடி ரூபாய் சொத்துக்களைச் சேர்த்துள்ளது; இதுபற்றி நிதி அமைச்சகத்துக்கு மத்திய வருவாய் உளவுதுறை சமர்ப்பித்த அறிக்கையை நாடாளுமன்றத்தில் வைக்க வேண்டும் என்று முன்னாள் மத்திய காங்கிரசு மந்திரிகள் இருவர் கோரினர். அவ்வளவு தான் கத்தி - கலாட்டா செய்ய ஆரம்பித்து விட்டார்கள், போலிக் கம்யூனிஸ்டுகள். ஜனதா தள அரசு போலிக் கம்யூனிஸ்டுகளின் தயவில் இருப்பதால் மௌனமாக இருந்துவிட்டது. இதுதான் புதிய பரிசுத்தங்களின் யோக்கியதை. 30,000 கோடீஸ்வரர்கள் உள்ள ருசியாவை சோசலிச நாடு என்று இந்த போலிக் கம்யூனிஸ்டுகள் கூறுவதன் இரகசியம் புரிகிறதல்லவா?

★ இந்தியாவுக்கான வெளிநாட்டு உளவுவேலைகளுக்காக பாசிச இந்திரா உருவாக்கிய இரகசியப் படை 'ரா', ஆளுங்கட்சிக்கு ஊழியஞ் செய்தது; அமெரிக்க, ரசிய உளவுப் படைகளுடன் கூடி அண்டை நாடுகளுக்கெதிராக சதி செய்தது; ஈழப் போராளிகளைப் பிளவுபடுத்தி ரத்தம் குடித்தது.

ராஜீவ் கும்பலின் தோல்விக்குப் பிறகு அது முடக்கப்படவில்லை. அதன் முதல்தர அதிகாரிகள் உட்பட 400 பேருக்குப் பதவி உயர்வு கொடுத்து புதுப்பித்திருக்கிறது ஜனதா தள அரசு. 'ரா'வுக்குள் குடியுரிமைக்கான மன்றம் அமைத்து, அதன் சதிகளை அம்பலப்படுத்தும் அதிகாரிகளைச் சரிக்கட்டுவதற்காக இந்தச் சலுகை தரப்படுகிறது. பிரபாகரனும், வீரமணியும், கருணாநிதியும் என்னதான் இந்திய அரசிடம் விசுவாசம் பாராட்டினாலும் அதன் பண்பு மாறவில்லை என்பதையே இது காட்டுகிறது.

★ பண்ருட்டி - தட்டாஞ்சாவடியில் போலீசு நாய்கள், ஓட்டுப் பொறுக்கிகளின் கூட்டு வியாபாரத்தினால் நூற்றுக்கும் மேற்பட்டவர் விஷச்சாராயம் குடித்து மாண்டது தெரிந்ததே. இதேபோல கடந்தமாதம் விஷச்சாராயம் குடித்து குஜராத்தில் 18 பேரும் ஒரிசாவில் 14 பேரும் மாண்டனர். ஆட்சிகள் மாறுவதால் சமூகவிரோதச் செயல்கள் அழிந்து விடுவதில்லை.

★ வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவின்படியே 3 கோடியே 27 லட்சம் பேர் வேலை தேடுகின்றனர். கடந்த ஆண்டு மட்டும் 65 லட்சம் பேர் பதிவு செய்துகொண்டனர். ஆனால் 2.89 லட்சம் பேருக்குத்தான் வேலைகிடைத்தது. அதாவது வேலையில்லாதோர் எண்ணிக்கை 21 மடங்கு அதிகரித்துள்ளது. சாதாரண கூலி ஏழைகள், நம்பிக்கையிழந்தோ விவரம் தெரியாமலோ பதிவு செய்யாமலேயே - குறைந்தபட்ச 'தகுதி' இல்லாதோர் பதிவு செய்யாமலேயே இந்த நிலை. குறிப்பாக மேற்குவங்கம் முதல்இடத்திலும், கேரளா மூன்றாவது இடத்திலும் தமிழ்நாடு 5வது இடத்திலும் உள்ளன. வேலைவாய்ப்பை அடிப்படை உரிமையாக்குவதாக ஓட்டுப் பொறுக்கிப் போன போலிக் கம்யூனிஸ்டுகளும் தேசிய முன்னணியும் அதைக்கிடப்பிலே போட்டுவிட்டன. குடிகாரன் பேச்சு விடிந்தாலே போச்சு என்பது பழமொழி. அரசியல்வாதியின் வாக்குறுதி ஓட்டு வாங்கியதும் போச்சு என்பது புதுமொழி.

★ கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் நடந்த ஆட்சிக் கவிழ்ப்புகளால் உற்சாகமடைந்துள்ள கோர்பச்சேவ் அடுத்துக் கியூபாவைக் குறி வைத்துள்ளார். இவ்வளவு காலமும் கியூபாவின் சோசலிசத்தைப் புகழ்ந்துவந்த ருசிய ஏடுகள் இப்போது ஏசத் துவங்கிவிட்டன. ''புரட்சியைப் பாதுகாப்பது என்கிற பெயரில் அங்கே 'மக்கள் கமிட்டிகள்' அமைக்கப்பட்டுள்ளன. அவை வெளிநாட்டு ரேடியோ கேட்பவர்களையும், அரசி



யல் அதிருப்தியாளர்களையும் கண்காணித்து இரகசிய உளவுப் படையுடன் சேர்ந்து பிடிக்கிறது'' என்று 'மாஸ்கோ நியூஸ்' எழுதியுள்ளது. ''கியூபா போலீசு ராஜ்ஜியமாக மாறிவிட்டது; ஆனால் இளம் படிப்பாளிகள் ருசியாவின் சீரமைப்பு இயக்கத்தை ஆதரிக்கின்றனர்'' என்கிறது. இங்கே சோசலிச நாடுகளின் ஒற்றுமை பற்றி போலிக் கம்யூனிஸ்டுகள் எவ்வளவுதான் பாசாங்கு செய்தாலும் கோர்பி விடமாட்டார் போலிருக்கிறது!

★ 1985 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணத்துக்காக உத்திரப்பிரதேசம் மலைப் பகுதிகளில் தோட்டம் வளர்ப்பது என்று ஒரு கோடியே பத்து லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. தோட்டத்துறை ஐ.ஏ.எஸ் அதிகாரி ரமணியும் 12 கீழ்நிலை அதிகாரிகளும் அப்படியே ஏப்பம் விட்டுவிட்டனர். புகார் வந்து, உளவுத் துறை விசாரணைக்கு உத்திரவு போடப்பட்டது. உடனே தனது செல்வாக்கைப் பயன்படுத்தி அதே உளவுத் துறையின் செயலாளராக ரமணி பதவி உயர்வு பெற்றார். அப்புறம் என்ன? ஐந்தாண்டுகளாகியும் விசாரணை நடக்கவே இல்லை.

★ இதுவரை 16 பெரிய அணைகட்டுகள் உடைந்து பெரும் சேதங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. குஜராத், ம.பி., உ.பி ஆகிய மாநிலங்களில் தலா மூன்று அணைகளும், ஆந்திரா, தமிழ்நாடு, கர்நாடகாவில் ஒவ்வொன்றுமாக உடைந்து போயின. குறிப்பாக மிகப்பெரும் அணைக்கட்டுகள், ஆயிரக்கணக்கான கிராமங்களை அழித்தும், லட்சக்கணக்கானோரை வெளியேற்றியும் கட்டப்படுவதால் சுற்றுச் சூழல் பாதிக்கப்படுவதோடு, நில அதிர்ச்சி அபாயமும் ஏற்படுகிறது. பல இடங்களில் மக்கள் எதிர்ப்புப் போராட்டங்கள் நடக்கின்றன. இருந்தாலும் நர்மதா, தேரி போன்ற மிகப்பெரும் அணைகளை உலக வங்கி உத்திரவை ஏற்று நிர்மாணித்து வருகிறது, அரசு.

★ நாடு முழுவதும் 124 நெசவாலைகள் மூடப்பட்டுக் கிடக்கின்றன. குஜராத்தில் 35, தமிழ்நாட்டில் 27, மராட்டியத்தில் 17, கர்நாடகாவில் 12, மே.வங்கம், உ.பி., ராஜஸ்தானில் தலா 7, ம.பி. அரியானாவில் தலா 2 ஆலைகள் மூடப்பட்டுள்ளன. இதனால் 165 லட்சம் தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். 1989 பிப்ரவரி வரை எட்டு ஆலைகளின் 6500 தொழிலாளர்களுக்கு மட்டும் 10 கோடி ரூபாய் நிவாரணத் தொகை அழித்ததாக அரசு கூறிக் கொள்கிறது. லாபம் ஈட்டுபவையாக இல்லாத ஆலைகளைத் திறக்கவே முடியாது என்று கைவிரிக்கிறார் மந்திரி. மாண்புமிகுகளா? லாப வேட்டை முதலாளிகளா?

★ கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் என்னதான் மாற்றங்கள் நடந்தாலும் பிரெஞ்சு, இத்தாலிய கம்யூனிஸ்டுக் கட்சிகளை அவை பாதிக்கவில்லை என்று நம்பூதிரிபாடு கும்பல் சமாதானம் கூறுகிறது. மேற்கு ஐரோப்பிய, ஜப்பானிய கட்சிகள் பத்தாண்டுகளுக்கு முன்பே 'ஈரோகம்யூனிசம்' என்கிற பெயரில் 'பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம்' 'லெனினிசம்' ஆகியவற்றைக் கைவிடுவதாக அறிவித்துவிட்டன. இதுவும் போதாதென்று இத்தாலிய கம்யூனிஸ்டு கட்சி தன்னையே கலைத்துக் கொண்டு சமூக ஜனநாயகக் கட்சியாகி விடுவதென்று முடிவு செய்துவிட்டது.

★ ''1990-91 ஆம் ஆண்டு தேசிய முன்னணி அரசு பட்ஜெட்டில் சோசலிசத்தின் கூறு - வாடை கூட கிடையாது'' என்று புலம்பியிருக்கிறது, வலது 'கம்யூனிஸ்டு' கட்சியின் மத்திய செயற்குழு. ''அதோடு மகாத்மா காந்தி, ஆச்சார்ய நரேந்திரதேவ் ஆகியோரோடு சேர்த்துப் பேசுவது அவர்களையும் இழிவு செய்வதாகும்'' என்று ஒப்பாரியும் வைத்திருக்கிறது. நரகலில் நல்லரிசி பொறுக்குவதோடு கோட்டான்களையும் ஆந்தைகளையும் கூட புகழ்ந்திருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com

## நம்புங்கள் துரை சொல்கிறார்!




# போலீஸ் எதிர்ப்பு 'ஜூ.வி.ஸ்டைல்'

ஜூனியர் விகடன் படிப்பவர்களுக்கு ஒவ்வொரு வாரமும் அதில் வரும் கிரிமினல் குற்ற செய்திகள் பற்றி நன்கு தெரிந்திருக்கும். ரௌடிகள், விபச்சாரிகள் ராஜ்யமாக தமிழகம் வெகு விரைவாக சீரழிகிறது. இதற்கு போலீசு முழு உடந்தையாக இருக்கிறது என்பதற்கு ஆதாரமாக அது பல "திடுக்கிடும்" கிரிமினல் குற்ற செய்திகளை வெளியிட்டிருக்கிறது. இச் செய்திகளின் உச்சக்கட்டமாக கடந்த ஜனவரி மாதம் 4 தொடர் கட்டுரைகளை வெளியிட்டது. அதில் போலீசின் அதிகாரமீறல், ஊழல் மற்றும் தொழில்ரீதியாக போலீசு நடத்தும் கிரிமினல் குற்றங்கள், கிரிமினல்களுடன் போலீசுக்கு இருக்கும் பகிரங்க கூட்டு ஆகியவற்றை தொகுத்து தந்தது. நான்கு வாரங்களாக அது தந்த செய்திகளின் சாரம்சம் இது தான்.

★ பொது இடங்களில் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு குறைந்து வருகிறது. குறிப்பாக பொது இடங்களில் பெண்களுக்கு சுத்தமாக பாதுகாப்பு இல்லை - ரௌடிகளின் அட்டகாசம் அதன் விளிம்புக்கே சென்றுவிட்டது.

★ போலீசுக்கும் உள்ளூர் ரௌடி கிரிமினல்களுக்கும் நெருக்கமாக தொடர்பு இருக்கிறது. அவர்களை கண்டு போலீசு நடுங்குகிறது. அவர்களுக்கு எதிரான பொதுமக்களின் புகாரை போலீசு வாங்குவதில்லை அல்லது விசாரிப்பதில்லை. புகார் கொடுத்தவர்களை போலீசு ரௌடிகளுக்கு காட்டி கொடுக்கிறது. புகார் கொடுக்க வருபவர்களை போலீசு அவமதிக்கிறது. லஞ்சம் வாங்குகிறது.

★ போலீசு தானே ஒரு கலாச்சார சீரழிவு கும்பலாக இருக்கிறது. 60 சதவிகிதம் போலீசார் தினசரி குடிக்கிறார்கள். 72 சதவிகிதம் போலீசார் தவறான பெண்களுடன் தொடர்பு கொண்டுள்ளார்கள். தமிழகத்தில் மொத்தம் உள்ள 66,780 போலீசாரில் சென்னையில் மட்டும் 10,411 போலீசாரிடம் லஞ்சமாக புழங்கும் தொகை நாளொன்றுக்கு குறைந்தபட்சம் ரூபாய் ஒரு லட்சம்!

★ போலீசு தானே நேரடியாகவும் பினாமிகள் வைத்தும் நீலப்படம் எடுக்கிறது. தியேட்டர்களுக்கு அதை சப்ளை செய்கிறது. லஞ்சம் வாங்கிக் கொண்டு இத்தொழிலையும் ரகசியமாக ஏலம் விடுகிறது. கள்ளச் சாராயத்தையும், விபச்சாரத்தையும் கூட இப்படி, தானே சொந்தமாக நடத்துகிறது. அதிகாரத்தை பயன்படுத்தி புறம்போக்கு நிலத்தை - பிறரது நிலத்தை ஆக்கிரமிப்பதில் 60 சதவிகிதத்திற்கும் மேலான போலீசு ஈடுபடுகிறது.

★ வீடு புகுந்து முகமூடி திருட்டு, வழிப்பறி, கள்ளநோட்டு அடிக்கும் கும்பல் - அரிசி, சந்தனக் கடத்தல், போதை மருந்து கும்பலிடமிருந்து தவறாமல் போலீசுக்கு மாமூல் வந்துவிடுகிறது.

★ போலீசு, தங்களுக்கு சாதகமாக சட்டத்தை மீறுகிறது அல்லது பித்தலாட்டம் செய்கிறது. (உ-ம்.) "கையால் அடித்து விட்டான் என்று புகார் கொடுத்தால் இ.பி.கோ. 323 பிரிவின் கீழ் பதிவு செய்ய வேண்டும். அக்குற்றவாளியை போலீசாருக்கு கைது செய்யும் அதிகாரம் கிடையாது. ஆனால் "தடுத்து நிறுத்தி கையால் அடித்து விட்டான் என்றால் போலீசுக்கு கைது செய்யும் அதிகாரம் உண்டு.

நான்கு வாரங்கள் வந்த இத்தொடருக்கு இடையிடையே தனக்கு பிடித்தமான 'பலான' விஷயத்தையும் தொட்டு தொட்டு எழுதி சூடாக்கி கொடுத்தது. கடைசியில் வழக்கமான பாணியில் இத்தொடரில் குறிப்பிட்டிருந்த குற்றச்சாட்டுகளுக்கு சம்மந்தப்பட்டவர்களிடமே விளக்கம் கேட்க சென்றது. தமிழக போலீசு துறைத் தலைவர் டி.ஜி.பி. துரையைச் சந்தித்தது. "அது (கட்டுரை) விஷயமாக உங்களைச் சந்தித்துப் பேசவேண்டுமென்று நினைத்திருந்தேன்" இருந்தாலும் "சட்டசபை நடக்கும் நேரத்தில் எனது பேட்டி வருவது நல்லதில்லையே..." என்று செல்லமாக பிகு பண்ணிக் கொண்டு பதிலுக்கு தயாரானார். ஜூ.வி.க்கும் துரைக்கும் அவ்வளவு நெருக்கம்.

முதல் கேள்வியாக "தமிழ்நாட்டில் சட்டம் - ஒழுங்கு நிலைமை எப்படி இருக்கிறது?" என்றது. "திருப்திகரமான முறையில் தான் இருக்கிறது...." என்று துரையின் நக்கலான பதிலுக்கு அசடு வழிந்தது ஜூனியர் விகடன். தமிழகம், போலீசு - ரௌடிகள் ராஜ்ஜியமாகிவிட்டது என்று கட்டுரையில் வெளியிட்ட புள்ளிவிபரங்களைக் காட்டி துரையின் பதிலுக்கு விளக்கம் கூட கேட்கவில்லை. பிச்சைக்காரர்களிடம், போலி சாமியார்களிடம் பேட்டி எடுத்தால் கேள்வி கணைகளால் துளைக்கலாம்! டி.ஜி.பி. ஆயிற்றே என்ன செய்வது? மேல் வாயையும் கீழ்வாயையும் இறுக மூடிக் கொண்டது ஜூ.வி.

"நகர போலீசாரில் பாதிக்கு மேலானவர்கள் 'குடி, குட்டி' என்ற செட்டப்புடன் அலைகிறார்கள்... மாமூல் பணத்தைக் கொண்டே பங்களா, கார் என்ற அந்தஸ்துடன் இருக்கிறார்கள். இவர்கள் மீதெல்லாம் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறீர்கள்? என்றது. மாறாக ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்கக்கூட ஜூ.வி.க்கு தெம்பில்லை!

"பொதுவாகச் சொல்வதில் அர்த்தமில்லை. குறிப்பிட்ட நபர்களின் பெயர்களுடன் விஷயங்களைச் சொல்லுங்கள். உடனடியாக உங்கள் முன்பாக நடவடிக்கை எடுக்கிறேன்" என்று சவடால் அடித்தார் துரை. ஜூ.வி.யோ தனக்கு தெரிந்திருந்தும் குறிப்பிட்ட நபர் எவரையும் சொல்லவில்லை. அதற்கு பதிலாக, "மனப்பூர்வமாக சொல்லுங்கள்... நமது(!) போலீசுக்காரர்கள் ஜனங்களின் நம்பிக்கையைப் பெறுவது போலவோ, ஜனங்களைத் திருப்திப் படுத்தும் விதத்திலோவா நடந்து கொள்கிறார்கள் என்று சிணுங்கியது.

"ஜனங்களைத் திருப்திப்படுத்த எந்த துறையாலும் முடியாது. அதிலும் போலீஸ் துறையினரால் ஜனங்களுக்கு நேரடி லாபம் எதுவும் கிடையாது" என்று தன்னுடைய திமிரை வழியவிட்டார், துரை.

காங்கிரசுக்கு ஆள்காட்டி வேலை செய்து, ராஜீவ்காந்தி தமிழகம் வந்து போகும் போதெல்லாம் போலீசுகாரன்களுக்கு கதர் தொப்பியை மாட்டி கலர் சட்

படிப்பகம்

www.padippakam.com

டையை போட்டு காங்கிரசுக்கு கூட்டம் காட்டி பிழைப்பு நடத்தியவர். பிறகு கருணாநிதி கடைக்கண் பார்வை கிடைக்க, ஜெயலலிதாவை விரட்டிக் கொண்டும், அவர் கடிதத்தை கடத்தி கொடுத்தும் காலம் கழிப்பவர்தான் இந்த டி.ஜி.பி. துரை! அதனால்தான் ''நேரடி லாபத்தை''ப் பற்றி அவ்வளவு துல்லியமாக இவரால் சிந்திக்க முடிகிறது!.

அடுத்து ''....லஞ்சம், போலீஸ் துறையில் மிகவும் அதிகமாகி விட்டதற்கு என்ன காரணம்?'' என்று துரையிடம் கேள்வி கேட்டது. அதற்கு துரை ''பொதுமக்கள்தான் காரணம். ஒரு தவறு செய்துவிட்டு அந்தத் தவறை மறைக்க லஞ்சம் கொடுப்பது பொதுமக்கள் தான். தவறை ஏன் செய்யவேண்டும்? பின்னர் அதை மறைக்க இன்னொரு தவறையும் செய்து, போலீசை டெம்ப்ட் (எரிச்சலூட்டுவது) பண்ணுவது பொது மக்கள்தாம்'' என்றார். ஏதோ மக்கள்தான் விடாப்பிடியாக வரிசையில் நின்று போலீசுக்கு லஞ்சம் கொடுப்பதாக கோமாளித்தனமாக உளறினார். பிச்சைக்காரர்களிடம் கேட்டால் கூட போலீசின் 'மாமூல்' யோக்கியதையை சொல்வார்கள். எதையும் 'அலசி ஆராயும்' ஜூனியர் விகடனோ துரையின் பதிலை வாலை சுருட்டிக் கொண்டு கேட்டுக் கொண்டது.

''மரியாதைக் குறைவாகப் பேசிய பலரையும் நான் டிஸ்மிஸ் செய்திருக்கிறேன். நியாயத்தையும், சட்டத்தையும் மதிக்காத இன்ஸ்பெக்டர்கள் உட்பட பல போலீசாரை நான் சஸ்பெண்ட் செய்து இருக்கிறேன்'' என்று முடிவேயில்லாமல் புளுகினார் துரை.

அப்போதும் ஜூனியர் விகடன் ஏற்கனவே கட்டுரையில் எழுதிய தேவாரம் - திலகவதி இருவரின் ஒழுங்கீனம், அதிகார முறைகேடு பற்றி இலாக்கா பூர்வமாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் கிடப்பில் போடப்பட்டது பற்றியோ, ஆட்டோ சங்கர் கையாள் என்று நிருபிக்கப்பட்ட டி.எஸ்.பி. தங்கையன் இப்போது போலீசாருக்கு நல்லொழுக்கம் கற்றுதரும் பதவிக்கு (இன் சர்வீஸ் சென்டர் இன்ஸ்ட்ரக்டர்) மாறியிருப்பது பற்றியோ சுட்டிக்காட்டி துரையின் புளுகை தோலுரிக்கவில்லை ஜூ.வி.

போலீசு எதிர்ப்பு - ஜூனியர் விகடன் 'ஸ்டைலே' அலாதியானது. அதிகார உயர் மட்டத்தில் அவ்வப்போது எந்த போலீசு கும்பலின் கை மேலோங்கியுள்ளதோ, அக்கும்பல்தான் தமிழகத்தின் சட்டம் - ஒழுங்கை காக்க வந்திருக்கும் தேவதூதன் என்ற பிரமையை ஏற்படுத்தும்.

ஆரம்பத்தில் தேவாரம்தான் ஜூனியர் விகடனின் கதாநாயகன். அதிகார போட்டியில் அவ்விடத்திற்கு துரை வந்தார். அதிலிருந்து தேவாரத்தின் ஒழுங்கீனங்கள், அதிகார மீறல்களை வெளியிட்டு தற்போதைய கதாநாயகன் டி.ஜி.பி. துரையை குஷிப்படுத்துகிறது, ஜூனியர் விகடன்.

பொதுவாகவே கீழ்மட்ட போலீசாரை கிண்டலடிப்பதும், நக்கல் செய்வதும், உயர் மட்ட போலீசை துதிப்பாடுவதும்தான் ஜூனியர் விகடனின் போலீசு எதிர்ப்பு வீரம்! மற்றபடி, போலீசு அக்கிரமத்திற்காக ஜூ.வி. கண்ணீர் வடிப்பதெல்லாம் வியாபாரத்திற்குதான்!

குணசேகரன்

# கருணாநிதி ஊழல் விளம்பரம்:

# ஊழலின் ஊற்றுமூலம் என்ன?

''கலைஞர்தான் அரசியல் வித்தகர் - ராஜதந்திரி; எம்.ஜி.ஆர். ஒரு அரசியல் கோமாளி!'' என்று ஒரிஜினல் முத்திரையுடைய திராவிட இயக்கத்தினர் பெருமையடித்துக் கொண்டனர். இப்போது கருணாநிதியோ எல்லா விவகாரங்களிலுமே எம்.ஜி.ஆரைக் காப்பியடிக்கத் துவங்கிவிட்டார்.

ஈழப் பிரச்சினையாகட்டும்; இலவசத் திட்டங்களாகட்டும்; மத்திய அரசிடம் மண்டியிடுவதாகட்டும்; மதுவிலக்குக் கொள்கையாகட்டும். எதுவானாலும் எம்.ஜி.ஆரைத்தான் கருணாநிதி பின்பற்றுகிறார். இப்போது அதிகாரமுறைகேடு, ஊழல் ஒழிப்பு உத்தம வேடம் போடுவதிலும் அதையே செய்துள்ளார்.


ஊழல் உச்சகட்டத்தை அடைந்த போது, 1986 ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். இரண்டு விளம்பரங்கள் பத்திரிக்கைகள் மூலம் வெளியிட்டார். ''எனது மனைவியோ, எனது உறவினர் என்று சொல்லிக் கொள்பவரோ யாராக இருந்தாலும் நிர்வாகத்தில் சம்பந்தமில்லாதவர்கள் தலையீடு, குறுக்கீடு செய்வதை நான் விரும்பவில்லை. அமைச்சர்கள், தலைமைச் செயலாளர் மற்ற பிற உயர் அதிகாரிகள் அதைபற்றி என் அபிப்பிராயத்தை அறிந்து நடக்க வேண்டும்'' என்று ஒரு விளம்பரம் செய்தார்.

''முதலமைச்சர் அலுவலகத்தின் 'அதிகாரிகள் மற்றும் இரகசியக் குழு' என்ற இல்லாத அமைப்பு மூலம் மோசடிக் கடிதங்கள் தயாரித்துப் போலி உத்தரவுகள் அனுப்பப்படுவதாக தகவல் வந்துள்ளது. அப்படிக் கடிதம் ஏதும் வந்தால் மீண்டும் எனது அலுவலகத்திடம் சரிபார்த்துக் கொள்ளவும்'' என்பது எம்.ஜி.ஆர். கொடுத்த இரண்டாவது விளம்பரம்.

எம்.ஜி.ஆராவது பேசவோ, எழுதவோ முடியாமல் நடைபிணமாய் இருந்து ஆண்டபோது இப்படிச் செய்தார். கருணாநிதியோ, நல்ல சுவாதீனமாக இருக்கும் போதே கடந்த வாரம் ஒரு பத்திரிக்கை விளம்பரம் கொடுத்துள்ளார்.

''என் குடும்பத்தில் உள்ளவர்களினாலோ, எனது உறவினர்களினாலோ அல்லது அவர்களின் பெயர்களினாலோ யாராவது நேரடியாகவோ, கடிதம் மூலமாகவோ, தொலைபேசி மூலமாகவோ எவ்விதப் பரிந்துரைகள் செய்தாலும், அவற்றை எந்த ஒரு அதிகாரியும் பொருட்படுத்தத் தேவையில்லை என்றும் அதுகுறித்து உடனடியாக எனது கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்றும் அறிவுறுத்தப்படுகிறார்கள். என் குடும்பத்தினர்கள், உறவினர்கள் மற்றும் எனது உதவியாளர்கள் பெயர்களைப் பயன்படுத்தி யாரோ சிலர் இதுபோன்ற விஷமத்தனமான செயல்களில் ஈடுபடுவது என் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட காரணத்தால் இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது'' என்று கருணாநிதியின் விளம்பரம் கூறுகிறது.

இதுபற்றி சட்டமன்றத்திலேயே எதிர்க்கட்சியினர் குறிப்பிட்டவுடன், கருணாநிதியே முன்வந்து தன்னிலை விளக்கம் அளித்துள்ளார். ''எம்.ஜி.ஆர் விளம்பரத்துக்கும் இதற்கும் வேறுபாடு உள்ளது. எம்.ஜி.ஆரின் கும்பத்தாரே அப்படி ஈடுபடுவது போன்ற தோற்றத்தில் அது இருந்தது. இப்போது என்னுடைய குடும்பத்தினர் யாரும் இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடவில்லை. சிலர் என் குடும்பத்தாருடைய பெயரை, என் உதவியாளர்கள் பெயரைப் பயன்படுத்தி மோசடிகளில் ஈடுபடுகின்றனர். என் குடும்பத்தார் அப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட்டால் ஒன்று அவர்கள் உயிரோடு இருக்கவேண்டும்; இல்லாவிட்டால் நான் உயிரோடு இருக்க வேண்டும் என்கிற அளவிற்கு முடிவு ஏற்படும்'' என்று உணர்ச்சிவசப்பட்டு கதறி நடித்திருக்கிறார். கலைஞர் அல்லவா!




படிப்பகம்

www.padippakam.com








ஆனால் இதை நம்பக்கூடியவர்கள் யாருமே கிடையாது என்பது கருணாநிதிக்கே தெரியும். ''என் குடும்பத்தில் உள்ளவர்களினாலோ எனது உறவினர்களினாலோ அல்லது அவர்களின் பெயர்களினாலோ...'' என்றுதான் அவரது விளம்பர அறிக்கையே கூறுகிறது. அதாவது கருணாநிதியின் குடும்பத்தில் உள்ளவர்களும், அவரது உறவினர்களும் கூட இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடுகின்றனர் என்பதுதான் இதன் பொருளாகும். கருணாநிதி வியாக்கியானம் செய்வதுபோல யாரும் எடுத்துக் கொள்ள முடியாது.

இல்லை, கருணாநிதி கூறுவது போல அவரது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் அவரது உதவியாளர்கள் பெயர்களைப் பயன்படுத்தி யாரோ சிலர் இது போன்ற விஷமத்தனமான செயல்கள் - மோசடிகளில் ஈடுபடுகிறார்கள் என்றே வைத்துக் கொள்வோம். அப்படியானால் கருணாநிதியின் ஆட்சி - நிர்வாக நிலைமை என்ன?

அவரது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் உதவியாளர்கள் பெயர்களில் பரிந்துரைகள் செய்தால் அவற்றை ஏற்று அதிகாரிகள் காரியங்களைச் செய்து கொடுக்கிறார்கள். அந்த அளவுக்கு அவர்களுடைய பெயர்களுக்கு மதிப்பு - செல்வாக்கு இருக்கிறது. அந்த வகையிலே அதிகாரிகள் ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள் அல்லது நிர்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள். இதுவும் இல்லையென்றால் அவர்களுடைய பெயர்களில் வரும் பரிந்துரைகளை ஏற்றுச் செய்துகொடுப்பதும் தமது கடமையாக அதிகாரிகள் கருதுகிறார்கள் அல்லது அதனால, அதற்கு ஈடாக வேறு ஏதாவது ஆதாயம் அடைய முடியும் என்று நம்புகிறார்கள்.

கருணாநிதியின் குடும்பத்தினர், உறவினர்கள் மத்தியிலும், அவரது கடிதத்துக்குள்ளும் இப்போது என்ன நிலைமை நிலவுகிறது என்பது அரசியல் வட்டாரங்கள் மற்றும் பத்திரிக்கையாளர்கள் அனைவருக்கும் தெரியும்.


கருணாநிதியின் மூன்று மனைவிமார்கள் மூலமான வாரிசுகள், அவரது சம்பந்தி முறை உறவுகள், கருணாநிதியின் அக்காமார் வகையறாக்கள் என்று சென்னை - கோபாலபுரத்திலே குவிந்துள்ள ஒரு பெரும் பட்டாளம் போட்டிப் போட்டுக் கொண்டு கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர். பலசமயம் அது குடுமிப்பிடிச் சண்டையாக வெடித்து நாறுகிறது.

கட்சிக்காரர்களின் சிபாரிசுகளை அதிகாரிகள் மதிக்கமாட்டார்கள், கரைபோட்ட துண்டுகள் தலைமைச் செயலகத்துக்கு நுழையக் கூடாது போன்ற ஆரம்பச் சூரத்தனங்கள் கண்டு கருணாநிதியின் கழக உடன்பிறப்புகள் ஆத்திரமடைந்தன. நாங்களும் வேட்டையாட அரசுக் கதவுகளைத் திறந்து விடுங்கள் என்று பகிரங்கமாகவே கழகக் கூட்டங்களில் அவர்கள் கூச்சல் போட்டனர். கழக மாநாடுவரை அது எதிரொலித்தது.

''சாராய வியாபாரம், சத்துணவுக் கூடம், ரேஷன் கடைகள், போலீசு நிலையங்கள் எங்கு பார்த்தாலும் எம்.ஜி.ஆர். கட்சிக்காரன்கள் தான். எங்களுக்கு என்ன இருக்கிறது; எவனும் மதிக்க மாட்டேன்கிறான். இதற்காகவா இவ்வளவு பாடுபட்டு ஆட்சியைப் பிடித்தோம்'' என்று கழக உடன்பிறப்புகள் குமுறின. அடுத்தமுறை ஆட்சிக்கு வர முடியாது என்பது உறுதியான பிறகு அந்தக் குமுறல் வெடித்துச் சிதறியது.

அதன் விளைவாக அதிகார முறைகேடுகள், லஞ்ச ஊழல்களுக்கான தாராள அனுமதியோடு தலைவிரித்தாடுகிறார்கள். இப்போது கள்ளன் வீட்டிலேயே கன்னம் வைத்துக் கொள்ளையிடுவது போல அதிகார முறைகேடு, லஞ்ச ஊழல் பேர்வழிகளின் பெயராலேயே மோசடிகள், பித்தலாட்டங்கள் நடக்கின்றன.

இப்போதும் அதிகாரமுறைகேடுகள், லஞ்ச ஊழல்களைத் தடுப்பதற்காக கருணாநிதி இந்த விளம்பர அறிக்கை தரவில்லை. தானும் தனது குடும்பத்தினர் - உறவினர்களும் உதவியாளர்களும் அந்தக் காரியங்களில் ஈடுபட்டு சிக்கிக் கொண்டால் அவர்களுடைய பெயர்களைப் பயன்படுத்தி யாரோ சிலர் விஷமத்தனங்கள் செய்துவிட்டதாகக் கூறி தப்பித்துக் கொள்ளுவதற்கு இது பயன்படும்.




அதிகார முறைகேடுகளும் லஞ்ச ஊழலும் புழுத்து நாறுவதால், தான் மட்டும் உத்தம வேஷம் போட்டு மக்களை ஏய்க்கவும் பயன்படும். அதனால்தான் இரகசிய சுற்றறிக்கை மூலம் அரசு அதிகாரிகள் - ஊழியர்களுக்கு அனுப்பவேண்டிய உத்திரவைப் பத்திரிக்கைகள் மூலம் பகிரங்க விளம்பரமாகக் கொடுத்துள்ளார், கருணாநிதி.

ஊரறிந்த விபச்சாரி பத்தினி வேஷம் போடுவதுபோலத் தான் கருணாநிதி ஊழல் ஒழிப்பு உத்தம வேஷம் போடுவதும். இது தமிழக மக்களுக்கு நன்றாகவே தெரியும். ஊழல் எதிர்ப்புப் பெருங்கூச்சல் போட்டு ஆட்சிக்கு வந்த எம்.ஜி.ஆரும், பரிசுத்த பட்டங்கட்டிக் கொண்ட ராஜீவுமே பெருச்சாளிகள் தான் என்று அறிந்தபிறகு அரசியல்வாதிகள் யாரையுமே உத்தமர்கள் என்று மக்கள் நம்பத் தயாராக இல்லை.

பொதுவாக லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள் பற்றி இப்போது மக்கள் என்ன நினைக்கிறார்கள்? ''லஞ்ச ஊழல்களும், அதிகார முறைகேடுகளும் தவிர்க்கவே முடியாத சாபக்கேடுகள். அவற்றை ஒப்புக்கொண்டு, அவற்றோடு தான் வாழ வேண்டும். யாருக்குத்தான் ஆசை இல்லை! யார் ஆட்சிக்கு வந்தாலும் சுருட்டத்தான் பார்ப்பான்! எந்தக் கொம்பனாலும் அவற்றை ஒழிக்க முடியாது. லஞ்சம் வாங்கினாலும் காரியத்தை முடித்துக் கொடுக்கிறானா என்பது தான் நேர்மை! லஞ்சம் கொடுத்தாவது காரியத்தைச் `சாதித்துக் கொள்கிறானா என்பதுதான் சாமர்த்தியம்!'' - இப்படித்தான் பலர் எண்ணுகின்றனர்.

இன்னும் கொஞ்சம் விபரமறிந்தவர்கள் கூட என்ன சொல்லுகிறார்கள். ''தேர்தல் அரசியல், அரசியல்வாதிகளால் தான் லஞ்ச ஊழல் அதிகார முறைகேடுகளே நடக்கின்றன. அதிகாரிகள் நேர்மையானவர்களாக இருந்தாலும் அரசியல்வாதிகள் குறுக்கிட்டு, தலையிட்டு அவர்களைக் கெடுத்து விடுகிறார்கள்'' இதுவும் ஒரு பகுதி உண்மைதான்.

இப்படி சாபக்கேடு, தனி மனித ஆசை அல்லது அரசியல்வாதியே முற்று முழுக் காரணம் என்று கருதுவதாலேயே லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகளின் ஊற்றுமு

படிப்பகம்

www.padippakam.com

வத்தையும், அதை ஒழிப்பதற்கான தீர்வையும் காண முடிவதில்லை.

நாட்டின் அரசியல், பொருளாதாரக் கட்டமைப்பு முழுவதுமே லஞ்ச ஊழல். அதிகார முறைகேடுகள் நீடித்து வளர்வதற்கான விளை நிலமாகவே இருக்கிறது.

ஒரு பூதாகரமான எந்திரம் எப்படி மசகெண்ணெய் பசையின்றி இயங்காதோ அதுபோல இந்த அரசு நிர்வாக முழுவதும் இயங்குவதற்கே லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள் அவசியமாக உள்ளன..

அரசின் சட்டதிட்டங்களும், இயங்கும் முறையும், லஞ்ச ஊழல் அதிகார முறைகேடுகளைத் தவிர்க்க முடியாததாக்கி இருக்கிறது. லைலென்சு, பர்மிட், கோட்டா, காண்டிராக்ட், ஏலம் - இவைதான் அரசின் சட்டதிட்ட, பொருளாதார நடவடிக்கைக்கான நெறிமுறை, இயங்குமுறையாக உள்ளன.

அதாவது தொழில் - வியாபாரம் முதல் வாகனங்கள் ஓட்டுவது வரை அரசு அதிகாரிகளிடம் லைசென்சு (உரிமம்) வாங்கியே தீரவேண்டும்.

பல்வேறு பொருட்களின் உற்பத்தி - விற்பனை - கொள்முதல் மீது அரசு விதித்திருக்கும் கட்டுப்பாடு காரணமாக அவற்றை இறக்குமதி - ஏற்றுமதி செய்யவும், உற்பத்தி - விற்பனை செய்யவும், வாங்கவும், பயன்படுத்தவும் அரசு அதிகாரிகளிடமிருந்து பர்மிட் (அனுமதி) வாங்கியே தீர வேண்டும்.

பல்வேறு பொருட்களை ஏற்றுமதி - இறக்குமதி செய்வது, உற்பத்தி - விற்பனை செய்வதில் அரசு ஏகபோகமே நிலவுகிறது. எனவே அவற்றுக்கான கோட்டா (ஒதுக்கீடு) செய்யும் உரிமை அரசு அதிகாரிகளிடமே உள்ளது.

இராணுவத்துக்குத் தேவையான கனரக ஆயுதத் தளவாடங்கள் முதல் அரசு அலுவலகங்களுக்குத் தேவையான காகிதக் கூடைகள் வரை ஆண்டுக்குப் பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புடைய பொருட்கள் வாங்கவும், வேண்டாதவற்றை ஏலமிடவும் கூடிய வரவு செலவுகளைச் செய்வதற்கான அதிகாரம் - பொறுப்பு அதிகாரிகளிடமே உள்ளது.

கிராமப்புற அடிகுழாய்கள் - கக்கூசுகள் முதல் பெரும் அணைக்கட்டுகள், பல மாடிக்கட்டிடங்கள் வரை, ஏரி - குளம் மராமத்துப் பணிகள் முதல் காடுகளை அழிப்பது வரை காண்டிராக்ட்டுகள் (வேலை ஒப்பந்தங்கள்) விடும் பொறுப்பு அதிகாரிகளிடமே உள்ளது.

ஏற்றுமதி - இறக்குமதி சுங்கத் தீர்வை முதல் பீடி - சிகரெட்டு விற்பனை வரி வரை சகலவற்றுக்குமான வரிவிதிக்கும் ஏகபோக உரிமை அரசிடமே குவிந்துள்ளது.

இந்த நடவடிக்கைகளில் லஞ்ச ஊழல், அதிகார முறை கேடுகள் முக்கியமான பங்காற்றுவதை அன்றாட வாழ்க்கையில் நாம் அனைவருமே காணமுடியும்.

விவசாயிகள் 'பம்பு செட்'டுக்கு மின் இணைப்புப் பெறுவது, புகையிலை பயிரிடுவது - பதப்படுத்தி விற்பது, விசைத்தறிக்கும், கைத்தறிக்கும் நெசவு ரகங்களைப் பிரித்து ஒதுக்குவது முதற்கொண்டு ராட்சத மின்னணு, செயற்கையிழை, மோட்டார் வாகன உற்பத்திக்குத் தொழில் லைசென்சு வாங்குவது வரை அவரவர் வசதிக்கேற்ப லஞ்சமளிப்பதற்குப் போட்டி போடுகின்றனர். அந்தந்த அதிகாரிகளின் பதவிக்கேற்ப அதிகார முறைகேடுகளில் ஈடுபடுகின்றனர்.

தேர்தல் அரசியல் கட்சிகளில் ஈடுபடுவது எப்படி ஆதாயம் தேடுவதற்கான தொழில் - வியாபாரமாக உள்ளதோ அதே போலத்தான் அதிகார வர்க்கம், இராணுவம், போலீசு, நீதித்துறை உட்பட அனைத்து அரசு வேலைகளுக்கும் போவது ஒரு தொழில் - வியாபாரமாக உள்ளது. இந்த வேலைகள் எல்லாம் சமூகத்துக்கும், நாட்டுக்கும் சேவை செய்வதற்கானவை என்பதெல்லாம் சினிமா நடிகர் - நடிகைகள் கலைச்சேவைக்காக நடிக்க வந்திருப்பதாகக் கூறுவது போலத்தான். அதனால்தான், ஏராளமாக லஞ்சம் கொடுத்தும், செலவு செய்து படித்தும் வேலை வாங்குகின்றனர்; அந்தச் செலவுகளுக்கும், வருமானம் வரும் பத




விக்கும் உரிய வரதட்சிணை கேட்டு மணம் முடிக்கின்றனர்.

வரைமுறையற்ற அளவு சொத்துக்களை சேர்த்துக் கொள்ளும் சுதந்திரமும், சுகபோகங்களை அனுபவிக்கும் வசதிவாய்ப்புகளும், அவையே சமூக அந்தஸ்தின் குறியீடாகவும் இருக்கும் போது அதிகாரத்தைக் குவித்துக் கொள்பவர்கள் லஞ்ச ஊழல் அதிகார முறைகேடுகளில் ஈடுபடுவது தவிர்க்க முடியாது.

''சோலிசம், முற்போக்கு என்கிற பெயரில் அரசு ஏகப்பட்ட கட்டுப்பாடுகள் விதிக்கின்றன. அரசே பல தொழில்களை மேற்கொள்ளுகின்றன. இது லைசென்சு, பர்மிட், கோட்டா ராஜ்ஜியமாகிவிட்டது. எனவே அவற்றையெல்லாம் ஒழித்துவிட்டு தடையற்ற பொருளாதார வளர்ச்சிக்கு முதலாளிகளை அனுமதிக்க வேண்டும்'' என்று ராஜாஜி காலத்தில் இருந்து பெரும் தரகு அதிகார முதலாளிகளின் பிரதிநிதிகள் கோரி வருகின்றனர். மேற்கத்திய நாடுகளைச் சான்று காட்டுகின்றனர்.

இது தொழில் - வர்த்தகத் துறையில் பெரும் ஏகபோக முதலாளிகளுக்குரிய தடைகளை அகற்றுவதற்கான கோரிக்கைதானே தவிர லஞ்ச ஊழலை ஒழிப்பதற்கானதல்ல. ''கல்லூரிகளைத் திறப்பதற்கும், அனுமதிப்பதற்கும் கட்டுப்பாடுகள் இருப்பதால் தான் லஞ்ச ஊழல் நடக்கிறது; யார் வேண்டுமானாலும் கல்லூரிகள் திறந்து, பட்டங்கள் வழங்கலாம். வேலை கொடுப்போர் தகுதியைத் தீர்மானிக்கட்டும்'' என்கிற வாதம் எப்படி பணம் உள்ளவருக்கே கல்வி வசதி என்றாகிவிடுமோ அதைப் போலத்தான்! எனவேதான் எவ்வித கட்டுப்பாடுகளும் இல்லாத அமெரிக்காவின் சபாநாயகர், பிரிட்டிஷ் பிரதமரின் மகன், ஜப்பானின் பிரதம மந்திரி, ஆகியோரே லஞ்ச ஊழலில் சிக்கிக் கொண்டனர். அதுமட்டுமல்ல, லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள் தொழில் - வர்த்தக ஆலோசனைக்கான கட்டணங்கள் என்கிற பெயரில் அங்கே சட்டபூர்வமாகவே உள்ளன. போஃபார்ஸ் பீரங்கி பேரத்திலும், ஜெர்மானிய நீர் மூழ்கி பேரத்திலும் வாங்கிய தரகுத் தொகை அந்நாடு விதிகளின்படி சட்டப்பூர்வமான, நியாயமான கமிஷனாகவே கருதப்படுகிறது.

லைசென்சு, பர்மிட், கோட்டா, காண்டிராக்ட் ஆகியவை மட்டுமல்ல; நாட்டின் சட்டம் ஒழுங்கைக் காப்பது, வரி விதிப்பது போன்ற ஏகபோக உரிமை ஆயுதந்தாங்கிய போலீசு, நீதித்துறை மற்றும் அதிகார வர்க்கத்திடம் குவிக்கப்பட்டிருக்கிறது. எனவே அவர்களது தயவில், ஒடுக்குமுறை - அதிகாரத்தில் குடிமக்கள் நசுக்கப்பட்டிருக்கின்றனர். உழைப்பிலும் உற்பத்தியிலும் ஈடுபடாத ஒரு பெரும் கும்பல், தன் சாதியிடம் அதிகாரம் குவிக்கப்பட்டிருக்கிறது. அதனுடன் கூட்டுச் சேர்ந்துதான் ஓட்டுக் கட்சி அரசியல்வாதிகள் கொள்ளையில் ஈடுபடுகின்றனர்.

எனவே வரைமுறையற்ற சொத்து, சுகபோகத்துக்கான அடிப்படைகள் அனைத்தையும் ஒழிக்க வேண்டும். அடிப்படைத் தேவைகள், சிறு தொழில்களுக்கானவை தவிர அனைத்தும் பறிமுதல் செய்யப்பட வேண்டும். உணவு, உடை, இருப்பிடம், வேலைவாய்ப்பு, மருத்துவம், கல்வி போன்ற அத்தியாவசியத் தேவைகளுக்கான தொழில்களை மட்டுமே வளர்க்க வேண்டும். அவையும் நாட்டின் பெரும்பான்மையினரான விவசாயிகள், தொழிலாளர்கள் திட்டமிட்டு நடத்துவதற்கான அதிகாரம் பெறவேண்டும்.

அதிகார வர்க்கம், இராணுவம், போலீசு போன்ற உற்பத்தியில் - உழைப்பில் ஈடுபடாத நிரந்தரமான தனிவகை சாதியை ஒழித்துக் கட்டி சட்டம் ஒழுங்கு போன்ற சமூக, அரசியல், பொருளாதர நிர்வாகம் முழுவதும் நேரடியாக மக்களிடமும் மக்கள் பிரதிநிதிகளிடமும் ஒப்படைக்கவேண்டும். அவர்கள் தவறிழைக்கும்போது தண்டிக்கும் உரிமையும் மக்களிடம் இருக்க வேண்டும். இந்த அடிப்பண்டயிலான ஏற்பாடுதான் லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள் முதலிய அனைத்தையும் ஒழித்துக் கட்டும்.

● மாணிக்கவாசம்

அன்பார்ந்த வாசகத் தோழர்களே!

அச்சக தாமதம் காரணமாக 16-30 ஏப்ரல் இதழை உரிய தேதியில் வெளியிட இயலவில்லை. எனவே 1-15 மே இதழையும் சேர்த்து ஒரே இதழாக வெளியிட்டுள்ளோம். கேள்வி - பதில் பகுதி அடுத்த இதழில் தொடர்ந்து வெளிவரும்.

அனைவருக்கும் எமது மேதின வாழ்த்துக்கள்!

படிப்பகம்

www.padippakam.com




# லித்துவேனியா: கோர்பியை அச்சுறுத்தும் புதிய நெருக்கடி

இந்திய ஆட்சியாளர்கள் நீண்ட காலமாக ஏய்த்துவரும் ஜனநாயக சோசலிசத்துக்கும், ரஷியாவில் கோர்ப்பசேவ் ஐந்தாண்டுகளாக கதைத்துவரும் பெரஸ்த்ரோய்காவுக்கும் அதிகம் வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை. ஏனெனில் இரண்டுமே அரசியல் பித்தலாட்டமானது.

ஜனநாயகம், மறுசீரமைப்பு என்ற பெயரில் படாடோபமாக வெளிவந்த கோர்பியின் கொள்கைகள் ஐந்தாண்டுகளுக்குள் புஸ்வாணமாகிவிட்டன. இந்திய ஆட்சியாளர்களைப் போலவே அவரும் இப்போது அடக்குமுறையையே ஆயுதமாக்கிக் கொண்டுள்ளார்.

ரஷியாவில் அர்மீனியா, அஜர்பெய்ஜான், ஜார்ஜியா, தாஜிகிஸ்தான் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்கள் கோர்பி கும்பலை அச்சுறுத்தி வரும் நேரத்தில், இப்போது பால்டிக் குடியரசுகளில் ஒன்றான லித்துவேனியா தன்னை சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்திக் கொண்டு ரஷ்யாவிடமிருந்து துண்டித்துக் கொள்வதாக அறிவித்தது. லித்துவேனியாவில் கடந்த பிப்ரவரியில் நடந்த தேர்தலில் 'பிரிவினைவாதிகள்' ஆக்கப் பெரும்பான்மையாக வெற்றி பெற்றதைத் தொடர்ந்து லித்துவேனிய நாடாளுமன்றமே மார்ச் 11 அன்று இந்த முடிவை பிரகடனப்படுத்தியுள்ளது.

ஏற்கனவே ரஷிய நாடாளுமன்றம் தேசிய இனங்கள் பிரிந்து செல்லும் உரிமையை அங்கீகரித்து சட்டமாக்கிய போதிலும், அது இந்திய குடியுரிமைச் சட்டங்களைப் போலவே ஏட்டளவினதாகவே உள்ளது. ரஷிய ஒன்றியத்திலிருந்து எப்போது விலகலாம் என்பதை தனியே சட்டம் இயற்றி அறிவித்த பிறகுதான், தேசிய இனங்கள் பிரிந்து செல்ல முடியும் என்று இப்போது பித்தலாட்டம் செய்கிறது கோர்பி கும்பல்.

''விளைவுகள் கடுமையாக இருக்கும்'' என்று மிரட்டிப் பார்த்தார் கோர்பி. லித்துவேனியர்கள் பணிந்து போவதாகத் தெரியவில்லை. ரஷ்ய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் பெருகத் தொடங்கின. உடனே கோர்பி கும்பல், ஜனநாயக முகமூடியைக் கழற்றி எறிந்துவிட்டு, ராணுவத்தையும் பீரங்கி வண்டிகளையும் கொண்டுவந்து குவித்து லித்துவேனிய தலைநகர் வில்னியஸ்-ஐ முற்றுகையிட்டு பீதியூட்டியது.

அதோடு, ''லித்துவேனியாவில் ரஷியா முதலீடு செய்துள்ள தொழில் நிறுவனங்களுக்கு நட்டஈடாக 3300 கோடி டாலரை கரன்சியாக கொடுத்துவிட்டு, வேண்டுமானால் பிரிந்து செல்லுங்கள்'' என்று கொக்கரித்தது.

''ஒருபுறம் ராணுவத்தை நிறுத்தி முற்றுகையிட்டுக் கொண்டு மறுபுறம், கிரம்ளின் அதிபர்கள் கீழ்த்தரமாக நடத்தும் உளவியல் யுத்தம் இது! இந்த மிரட்டல்களுக்கு நாங்கள் அஞ்சமாட்டோம். ஆக்கிரமிக்கப்பட்ட எமது நாட்டிலிருந்து ரஷியாவின் புதிய ஜார்கள் நட்டஈடு வேறு கேட்கிறார்கள். இந்த அயோக்கியத்தனம் நடப்பது வரலாற்றில் இதுவே முதன்முறை'' என்று லித்துவேனிய அரசு கோர்பி கும்பலை அம்பலப்படுத்தி சாடுகிறது.

36 லட்சம் மக்கள் தொகையைக் கொண்டுள்ள லித்துவேனியா தன்னை சுதந்திர நாடாகப் பிரகடனம் செய்து கொண்டதும், ரஷிய ராணுவத்திலிருந்து லித்துவேனியப் படை வீரர்கள் விலகி தமது தாய்நாட்டுக்கு ஓடி வந்துவிட்டனர். ஒருவார கால முற்றுகைக்குப் பின்னரும் சற்றும் பணியாத லித்துவேனியா, ரஷிய செம்படைக்கு எமது நாட்டு வீரர்களை அனுப்பமாட்டோம் என அறிவித்ததோடு, தனியே சொந்த ராணுவத்தையும் நிறுவ முற்பட்டது. ஏப்ரல் முதலாக ரஷிய சட்டத்தை நடைமுறைப்படுத்த மாட்டோம் என எச்சரித்தது. லித்துவேனிய சுதந்திரத்தை அண்டை தேசிய இனக் குடியரசான எஸ்டோனியா ஆதரித்தது. லாட்வியா கம்யூனிஸ்ட் கட்சி இப்பிரச்சினையை ஒட்டி பிளவுபட்டுப் போனது.

இந்நிலையில், ஜியார்ஜிய தேசிய இனப் போராட்டத்தை ஒடுக்க திபிலிசி நகரில் விஷ வாயுவை ஏவி ஆயிரக்கணக்கானோரைக் கொன்றது போலவோ, ராணுவக் கவச வண்டிகளைச் செலுத்தி அஜர்பெய்ஜான் தேசிய இன மக்களை அடக்கியது போலவோ, மின்சாரம் - சமையல் வாயு தொடர்புகளைத் துண்டித்து அர்மீனிய மக்களை சுற்றி வளைத்து நசுக்கியது போலவோ, இப்போது லித்துவேனியா மீது அடக்குமுறையை ஏவினால் அது இதர தேசிய இனங்களிடம் போராட்டத்தை துண்டிவிட்டு அதனால் ரஷிய ஒன்றியமே பல கூறுகளாக சிதறிப் போய்விடும் என்று கோர்பி கும்பல் அஞ்சுகிறது. ஏற்கனவே பல்வேறு தேசிய இனங்கள் பிரிந்து செல்லும் கோரிக்கையை வலியுறுத்தி வருகின்றன. அண்மையில் தாஜிகிஸ்தான் தேசிய இன குடியரசில் உயர்மட்ட அமைச்சர்களே ராணுவ ஆட்சிக் கவிழ்ப்புச் சதியில் இறங்கி, அம்பலப்பட்டு கைதாகியுள்ளனர். இதோடு அமெரிக்கா மற்றும் பிற மேலைநாடுகள் லித்துவேனிய சுதந்திரத்தை ஆதரித்து கோர்பியை நிர்பந்திக்கின்றன.

எனவே ஏகாதிபத்தியங்களுக்கே உரித்தான 'பீரங்கிப் படகுத் தூது' பாணியில் ஒருபுறம் லித்துவேனியாவில் ராணுவத்தை நிறுத்திக் கொண்டு மறுபுறம் சமரசப் பேச்சு வார்த்தைக்கு கோர்பி கும்பல் இறங்கி வந்துள்ளது. ''இப்போதாவது ரஷிய ஆக்கிரமிப்பாளர்கள் காது கொடுத்து கேட்க முன்வந்துள்ளார்களே, அதுவே எமக்கு வெற்றி தான்'' என்று லித்துவேனிய ஆட்சியாளர்கள் இப்பேச்சுவார்த்தையில் பங்கேற்கின்றனர்.

பேச்சுவார்த்தை நடாகமாடி முன்னணியினரை விலைபேசி நிறுவன மயமாக்கி, போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்வது; அற்ப சலுகைகளைக் கொடுத்து விட்டு முழு உரிமையும் அளித்துவிட்டதாகப் பசப்புவது; அல்லது சமரசத்துக்கு உடன்பட மறுத்துவிட்டார்கள் என்று அடக்குமுறையை ஏவுவது என்ற உத்தியோடுதான் கோர்பி கும்பல் இப்பேச்சுவார்த்தையில் இறங்கியுள்ளது. இந்திய ஆட்சியாளர்கள பின்பற்றும் மோசடி உத்திதான் இது. இதைக் கற்றறிவதற்காகத்தான், தனி மாநிலம் கோரிப் போராடி கடைசியில் மலை மாவட்டக் கவுன்சில் உரிமையை மட்டும் பெற்றுள்ள கோர்க்காலாந்து தலைவர் சுபாஷ் கெய்சிங்கை தமது நாட்டுக்கு சிறப்பு விருந்தினராக வருமாறு ரஷியா அழைத்துள்ளது.

இந்திய ஆட்சியாளர்களைப் போலவே, ஜனநாயகம் என்ற பெயரில் அரசியல் பித்தலாட்டம் செய்யும் கோர்பி கும்பல் தனது ஏகாதிபத்திய தன்மையை இழந்து விட்டு, தேசிய இனங்களுக்கு ஒருக்காலும் உரிமை வழங்காது. அயர்லாந்து தேசிய இனத்தை 20 ஆண்டுகளுக்கும் மேலாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அடக்கி ஆளும் போது, ரஷிய ஏகாதிபத்தியம் மட்டும் உரிமையை வழங்குமா என்ன?

அரசு பயங்கரவாத அடக்குமுறை அல்லது அற்ப சலுகைகள் மூலம் தேசிய இனப் பிரச்சினையை ஒருக்காலும் தீர்க்க முடியாது. அடக்கப்படும் தேசிய இனங்கள் அடுத்த கட்டமாக பயங்கரவாதத்தை நோக்கி திரும்பவே செய்யும். அது நிரந்தரமாக கோர்பி கும்பலை மரண பயத்தில் தள்ளிவிடும்.

● மனோகரன்

படிப்பகம்

www.padippakam.com

# உலக விபச்சாரத் தலைநகராக பம்பாய்

கொள்ளை லாபம் ஈட்டக்கூடிய, மிகப்பெரும் தொழிலாக விபச்சாரம் வளர்கிறது. உலகத்தின் விபச்சாரத் தலைநகராக பம்பாய் உயருகிறது. இதற்காக இந்த நாடு பெருமைப்பட்டுக் கொள்ளுமோ!

பம்பாய் - பாவ்ளா தெருவில் உள்ளது 'சிம்ப்ளக்ஸ்' என்ற அடுக்குமாடிக் கட்டிடம். அங்கு ஒரு அறை எடுத்து, 13 விபச்சாரிகளை வைத்துத் தொழில் நடத்தும் ஒரு கும்பல் மட்டும் மாதத்துக்கு 62,820 ரூபாய் சம்பாதிக்கிறது. ஒவ்வொரு பெண்ணும் ஏறக்குறைய மாதம் 14,220 ரூபாய்க்குத் தொழில் செய்கிறாள். ஆனால் அதில் 5 சதவிகிதம் கூட அவளுக்குப் போய்ச் சேருவதில்லை. ஒரு விபச்சார கும்பலின் நிர்வாகிக்கும், 'முதலாளி'க்கும் தகராறு ஏற்பட்டு முற்றியது; அதன் 1989 நவம்பர் - டிசம்பர் வரவு செலவுக் கணக்கை சேவாதன் என்ற விபச்சாரிகள் மீட்பு சமூகசேவை அமைப்பிடம் நிர்வாகி கொடுத்துவிட்டாள். அதிலிருந்து மேற்கண்ட விவரங்கள் தெரியவந்தன.

'சிம்ப்ளக்ஸ்' கட்டிடத்தில் உள்ள 75 குடித்தனங்கள் (கர்வாளி) மட்டும் மாதம் 50 லட்சம் ரூபாய் சம்பாதிக்கின்றன. 1000 பெண்கள் விபச்சாரம் செய்யும் அங்கு மட்டும் ஆண்டு வருமானம் 6 கோடி ரூபாய்!

சேவாதன் அமைப்பு நடத்திய ஆய்வின்படி நாடு முழுவதும் 25 லட்சம் பெண்கள் விபச்சாரத்தில் தள்ளப்பட்டுள்ளனர். பம்பாயில் மட்டும் ஒரு லட்சம் பேர் இந்தத் தொழிலில் உள்ளனர். பம்பாயின் காமாத்திபுரா, பால்க்லாந்து ரோடு, போராஸ் ரோடு ஆகிய பகுதிகள் விபச்சாரக் காலனிகளாகி



விட்டன. அதோடு நடுத்தர, மேட்டுக்குடியினர் வாழும் பகுதிகளுக்கும், பரவுகின்றது. அரசியல் பிரமுகர்கள், போலீசு கூட்டோடு பெண்களைக் கடத்தும் மஃபியா - கிரிமினல் கும்பல்கள், பாதுகாப்புக் குண்டர்கள், 'முதலாளிகள்', தரகர்கள் ஆகியோர் அடங்கிய அமைப்பு ரீதியில் திரண்ட வலைப் பின்னல்களாக இயங்குகின்றனர்.

கர்வாளிகள் என்றழைக்கப்படும் ஒரு குடித்தன அறைக்கு 2 லட்சம் ரூபாய் வரை பகடியும் நாளொன்றுக்கு 300, 450 ரூபாய் வாடகையும் கொடுக்கின்றனர். ஒரு அறையையே பல தடுப்புகள் வைத்து 15, 16 பெண்களை தொழிலில் ஈடுபடுத்துவர். 50% 'முதலாளி'க்கும், 10% நிர்வாகிக்கும், 5-10% தரகர்களுக்கும், 5% விபச்சாரப் பெண்ணுக்கும் என்று முறைப்படி ஒதுக்கப்படுகிறது.

தன் உடலையே விற்று அற்பப் பங்கே பெறும் அந்தப் பெண் அதிலேயேதான் துணிமணிகள், மருத்துவச் செலவு, கடன்காரர்களுக்கு வட்டி, பல்வேறு காரணங்களைக் கூறி பிடுங்கிக் கொள்ளும் அபராதம் எல்லாவற்றுக்கும் செலவு செய்கிறாள். இதனால் தீராத கடனாளியாகிறாள். வயதாகி, துரத்தும் வரை வெளியே போகவே முடியாது. பெற்றோரே வந்து மீட்டுப் போவதானாலும் சராசரி 30,000 ரூபாய்க்கு விற்கப்படுகிறாள்.

விபச்சாரத்தை ஒழித்து விடுவதாக ஐ.நா. சபையிலே கையெழுத்திட்டுள்ள இந்திய அரசு அதற்காக பல ஓட்டைகள் உடைய விபச்சாரத் தடுப்புச் சட்டம் போட்டதோடு சரி. குடியிருப்புப் பகுதியில் இருந்து 2 கி.மீ.க்குள் விபச்சாரம் நடத்தவோ, பலாத்காரமாக விபச்சாரத்தில் ஈடுபடவோ கூடாது என்று கூறும் சட்டப்படி விபச்சாரிகள்தான் தண்டிக்கப் படுகின்றனர். முதலாளிகளும், வாடிக்கையாளர்களும் தண்டிக்கப்படுகின்றனர். பம்பாயில் பகிரங்கமாகவே நடக்கும் இந்த விபச்சாரத்துக்கு ஒவ்வொரு 'கர்வாளி'யும் மாதம் 900 ரூபாய் போலீசுக்குக் கப்பம் கட்டி விடுகிறது.

விபச்சாரம் தவிர்க்கவே முடியாது; ஒழிக்கவே முடியாது என்றுதான் எல்லா அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் கூறுகின்றனர். "அப்படியானால் சட்டபூர்வமாக வாவது ஆக்கிவிடுங்கள். லட்சக்கணக்கான பெண்கள் அடிமைகளாகி சுரண்டப்படுவதாவது நிற்கும்" என்கிறார் சேவாதன் தலைவர். "கள்ளச்சாராயம் பெருகிவிட்டதால் மதுவிலக்கு ரத்து - மலிவு விலைச் சாராயம்" என்று கூறும் கருணாநிதிகள் இதையும் செய்வார்கள்!

## டான்செம்

# தொழிலாளர்களின் அவலநிலை

தமிழ்நாடு அரசு நடத்தும் சிமெண்டு ஆஸ்பெஸ்ட்டாஸ் குழாய்கள் உற்பத்தி செய்யும் ஆலை மாயனூரில் அமைந்திருக்கும் 'டான்செம்' (TANCEM) நிறுவனம். 16-31 அக்டோபர் '89 இதழில் 'ஊழலில் அதிகாரிகள்! அடக்குமுறையில் தொழிலாளர்கள்!' என்ற தலைப்பின் கீழ் 'டான்செம்' நிர்வாக அரசு அதிகாரிகள் ஊழலும் - தொழிலாளர்கள் மீதான அடக்குமுறையும் - பிழைப்புவாதத்தையும் (தி.மு.க., அ.தி.மு.க.) தொழிற்சங்கங்களின் துரோகத்தையும் சுட்டிக்காட்டியிருந்தோம். இன்னும் இந்நிலை தொடர்கிறது.

'டான்செம்' அதிகாரிகளின் ஊழலினால் இந்த அரசு நிறுவனத்திற்கு வரும் குழாய்களுக்கான ஆர்டர் தனியார் நிறுவனங்களுக்குப் போய்க் கொண்டிருக்கிறது. இதனால் பல கோடி ரூபாய் மதிப்புள்ள குழாய்கள் தேக்கமடைந்து உற்பத்திப்பிரிவு இயங்காமலும், குழாய் 'இறுதிநிலை' பிரிவு மட்டுமே இயங்கியும் வருகிறது. நிரந்தரமில்லாத காண்டிராக்ட் தொழிலாளர்கள் 150 பேர் வேலைஇழந்து நடுத்தெருவில் வீசப்பட்டுள்ளனர். நிரந்தர தொழிலாளர்களாக இருக்கும் 240 பேரையும் இன்றைக்கோ நாளையோ வேலையிலிருந்து வெளியேற்ற தேதி குறித்துக் கொண்டிருக்கிறார்கள் நிர்வாக இயக்குனரும், பொது மேலாளரும். இவர்கள், அரசு அதிகாரிகள் கவனத்திற்கு செல்லாமலேயே தாங்களாகவே முடிவு செய்து 22.5.90 அன்று லேயாப் விடுவதாக நோட்டீஸ் அனைத்து சங்கங்களுக்கும் - அனைத்து அரசாங்க துறைகளுக்கும் அனுப்பி வைத்துள்ளனர். அவர்கள் உத்தரவு கொடுத்தால் லேயாப் விடப்படும் என்று அடியில் ஒரு வாக்கியம் கொடுத்திருக்கிறார்கள். சம்பள உயர்வு ஒப்பந்தம் ஏப்ரல் மாதத்துடன் முடிவடைந்து மீண்டும் புது சம்பள உயர்வு மார்ச் முதல் போட வேண்டியுள்ளது. இதனால் லேயாப் என்ற நாடகமாடி தொழிலாளர் மத்தியில் இருக்கும் பிரச்சினையை திசைதிருப்புகிறது.

ஆனால் இதே நிலைமையில் 'டான்செம்' நிர்வாக அதிகாரிகளை எல்லாம் ஆலங்குளத்திலிருக்கும் 'தகடு' தயாரிக்கும் கம்பெனிக்கு பதவி உயர்வு கொடுத்து மாற்றுவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் நடந்து கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் தொழிற்சங்கங்கள் அனைத்தும் 'போராட்ட களத்தில் இறங்கினால் இதை சாக்கு வைத்து கம்பெனியை இழுத்து மூடிவிடுவார்கள்' எனக்கூறி எம்.எல்.ஏ. அறிவழகன், மந்திரி கே.என்.நேரு, பொன் முத்துராமலிங்கம், முதல்வர் என இவர்களிடம் எல்லாம் மனு கொடுத்து விட்டு அவர்கள் வழி செய்வார்கள் என தொழிலாளர்களை நம்பச் சொல்கின்றன. தி.மு.க. தொழிற்சங்கமோ ஒருபடி மேலே போய்... தொழிற்சாலை, பாதி கதவடைப்பு - லேஆஃப் வரும்பொழுதுதான் அரசு கவனத்திற்குச் சென்று தகடு தயாரிக்கும் தொழிற்சாலையாக மாற்றம் செய்து பிரச்சினையைப் போக்குவார்கள் என பொறுமையாக இருக்கும்படி கூறி தமது அப்பட்டமான பிழைப்புவாத அரசியலை தோலுரித்துக் காட்டிக் கொண்டது.

ஆக, இனி 'டான்செம்' தொழிலாளர்கள் துரோகத் தொழிற்சங்கங்களை நம்பிப் பயனில்லை. எனவே அவைகளைப் புறக்கணித்து ஒரு புரட்சிகர தொழிற்சங்கத்தை உருவாக்கி ஒன்றுபட்ட உறுதிமிக்க ஒரு போராட்டத்தை முன்னெடுப்பதிலேயே எதிர்கால வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியும்.

— பு.ஜ. வாசகர் வட்டம், மாயனூர்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ்.மதியழகன், 21, பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
அச்சிடுபவர்: எம்.கே.சாமி, பிரேம் பிரஸ், 107-ஏ, பெரியார் பாதை (மேற்கு), சென்னை - 600 094.

www.padippakam.com

இதோ. இவர் யார் என்று தெரிகிறதா? ராஜீவ் மந்திரிசபையிலிருந்த மத்திய மந்திரி ஜெகதீஸ் டைட்லர். மிருகக்காட்சி சாலை மாதிரி பல ஏக்கர்களில் அரசு வழங்கிய பண்ணை பங்களாவை இவர் இன்னும் காலி செய்யவில்லை. மந்திரி பதவியிலிருந்து மட்டுமல்ல நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலும் தோற்றவர். இருந்தபோதும், மந்திரி பதவியை பயன்படுத்தி பெற்ற பங்களாவில் இன்னும் இவரது குடும்பம் உல்லாசமாக வாழ்கிறது.

நாடாளுமன்ற தேர்தலில் தோற்று நான்கு மாதங்களுக்கு மேலாகியும் இவரைப் போல் 10க்கணக்கான ராஜீவ் மந்திரிகள் அரசு பங்களாவை காலி செய்ய மறுக்கின்றனர். தோற்ற 285 காங்கிரசு உறுப்பினர்கள் இவ்வாறு சொரணையை உதிர்த்துவிட்டு அரசு குடியிருப்புகளில் குடும்பம் நடத்துகின்றனர். உடம்பு சரியில்லை, பிள்ளைகளின் படிப்பு பாதியில் நிற்கிறது என்று பல்லை காட்டுகின்றனர். தேசிய முன்னணி அரசோ பெயரளவுக்கு காலிசெய்ய சொல்லி நோட்டீஸ் அனுப்பிவிட்டு, குடியிருப்பு இல்லையென்று தங்கள் மந்திரிகளுக்கு - எம்.பி.களுக்கு நாளொன்றுக்கு 700 ரூபாய் வாடகையில் 5 நட்சத்திர ஓட்டல் அறைகளில் தங்கவைத்துள்ளது.



இதோ. இது அதே டில்லியில் சாக்கடையின் மீது குடிசை எழுப்பி வாசம் செய்யும் உழைப்பாளிகளின் குடும்பங்கள்! டில்லியில் வசிக்கும் 90 லட்சம் மக்களில், 60 லட்சம் உழைப்பாளிகள் இப்படி சாக்கடைகளிலும், தெருவோரங்களில், குப்பைமேடுகளிலும் குழந்தை குட்டிகளுடன் வாழ்கிறார்கள். இவர்களுக்கு குடிநீர், மின்சாரம், சுகாதாரம் என்பதெல்லாம் கானல்நீர்! பல லட்சம் குடும்பங்களுக்கு அரசு 'ரேஷன்' அட்டைக்கூட வழங்கவில்லை. ராஜா வி.பி.சிங் பதவியேற்ற புதிதில் இவர்களின் குறைகளை கவனமாக கேட்டு, நடவடிக்கை எடுப்பதாக நாடகமாடிவிட்டு சென்றார்.

மாண்புமிகுகள், மக்களால் அதிகாரபூர்வமாக விரட்டியடிக்கப்பட்ட பிறகும், மக்களின் வரிப் பணத்தில் மஞ்சள் குளிக்கிறார்கள். மக்களோ காலமெல்லாம் உழைத்து ஓடான பிறகும் கடைசி காலத்திலும் குந்த ஒரு குடிசையில்லாமல் வீதியோரங்களில் சாகிறார்கள். இந்த அக்கிரமங்களையும், அவமானங்களையும் நாம் இன்னும் எத்தனை நாள்தான் சகித்துக் கொண்டு வாழ்வது?

# இதுதான் இன்றைய இந்தியா



படிப்பகம்